
கல்கி

KALKI 26.8.90 ரூ. 2.50



தீராத பிரச்னையிலும் மாறாத புன்னகை

அ.தி.மு.க.விவகாரம்: போலீஸ் செய்தது சரியா?

அ. இ. அ. தி. மு. க. கட்சியின் லாயிட்ஸ் ரோடு அலுவலகத்துக்கு, திருநாவுக்கரசு தம் ஆதரவாளர்களுடன் சென்று கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்ட போது, போலீஸ் தலையிட்டு, அலுவலகத்தைப் பூட்டியதோடு நில்லாமல், வருவாய் அதிகாரி விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. 'ஜா' மற்றும் 'ஜெ' அணிகள் முன்பு இதே விஷயமாக மோதிய போது, நீதிமன்றம், ஜெயலலிதாவுக்குச் சாதகமாய்த் தீர்ப்புக் கூறியது. அவ்வாறிருக்க போலீஸாரின் இன்றையச் செயல் சரிதானா?

தமிழ்நாடு, பாண்டிச்சேரி வழக்கறிஞர் கூட்டமைப்புத் தலைவரான ஆர். காந்தி பதில் கூறுகிறார்:

"இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 145—ஆம் பிரிவின்படி நிலம், தண்ணீர், எல்லைத் தகராறு போன்ற விஷயங்களில் பிரச்னை எழுந்தால், ரெவின்யூ அதிகாரி இது போன்றதொரு முடிவினை எடுக்கலாம். (இங்கே நிலம் என்பது, நிலத்தை மட்டுமின்றி, அதில் உள்ள கட்டிடம், கடை போன்றவற்றுக்கும் பொருந்தும்.) காரணம், இந்தப் பிரச்னை காரணமாகக் கோஷ்டி மோதல்கள், சட்டம் — ஒழுங்கு சீர்குலைவு, அடிதடி, ஏன், உயிர்ச் சேதங்கள் கூட நிகழலாம். அது போன்ற அசம்பாவிதங்கள் நிகழ வாய்ப்பு இருக்கும் என்று தோன்றினால் போலீஸ் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாதல்லவா? எனவே, போலீஸுக்குப் பிரச்னைக்குரிய இடத்தை, வருவாய் அதிகாரியின் உத்தரவின்படி இரு தரப்பினருமே பயன்படுத்தத் தடை விதித்துச் சம்பந்தப்பட்டவர்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி, அமைதியை நிலை நாட்ட அதிகாரமுண்டு.



"விசாரணையின் மூலம் வருவாய் அதிகாரி ஒரு முடிவினை எடுத்து, கட்டிடத்தை உரியவரிடம் ஒப்படைக்கலாம். அதை ஒப்புக் கொள்ளாத நிலையில் அடுத்த கோஷ்டி நீதிமன்றத்துக்குப் போகலாம். வருவாய் அதிகாரியால் ஒரு முடிவு எடுக்க முடியாவிட்டால், இரு தரப்பினரையுமே நீதிமன்றம் போகும்படிச் சொல்லலாம்."

"அப்படிப் பார்த்தால், ஒருவர் பத்துப் பதினைந்து அடியாட்களுடன் எனக்குச் சொந்தமான வீட்டின் மீது உரிமை கோரி கலாட்டா பண்ணினால், போலீஸ் வந்து, 'இரண்டு பேருக்குமே வீடு கிடையாது' என்று சொல்லி, வீட்டுக்குச் 'சீல்' வைத்து விடலாமே? நான் தெருவுக்கு வர வேண்டியதுதானா?".


"வீடு என்பது தனி நபர் சொத்து. உங்கள் வீடு பற்றிய உரிமைப் பத்திரங்கள் உங்களிடம் இருக்குமாகையால், அதன் மூலம், வீட்டின் மீது உங்களுக்குள்ள உரிமையை நீங்கள் நிரூபிக்கலாம். ஆனால் அ. தி. மு. க. விஷயத்தில் உரிமை கோரப்படுவது அந்தக் கட்சிக்குச் சொந்தமான கட்டிடம். இரு தரப்பினருமே 'நாங்கள்தான் உண்மையான அ. தி. மு. க. கட்சி' என்று கூறி, உரிமை கொண்டாடும் போது, அரசுக்கும் போலீஸுக்கும் அமைதியை நிலைநாட்ட வேறு வழி இல்லை."

பேட்டி: **எஸ். சந்திரமௌலி.**

படம்: **சுபா.**

லாபம் காட்டு!

அரசுத்துறை நிறுவனங்கள் லாபகரமாக நடந்தாக வேண்டும் என்று பிரதமர், கண்டிப்புடன் கூற, அந்த வட்டாரங்களில் ஏகப் பரபரப்பு.....



சர்வாதிகாரி ஸத்தாம் ஹுஸ்ஸைன்



ஒரு வியாழக்கிழமை (ஆகஸ்டு 2) அதிகாலை இரண்டு மணிக்கு நூற்றுக்கணக்கான இராக்கிய டாங்குகள் குவெய்த் நாட்டுக்குள் புகுந்து அந்நாட்டைக் கைப்பற்றின. மிகச் சுலபமாக முடிந்து போன இந்தக் காரியம், இராக் அதிபர் ஸத்தாம் ஹுஸ்ஸைனை அராபிய உலகின் மிகப் பலசாலியான தலைவராகக் காண்பித்தது. தவிர, பெட்ரோலியம் எண்ணெய் உலகச் சந்தையில் மிகச் சக்திவாய்ந்த நபராக்கியது. குவெய்த்தில் "சுதந்திர அரசை" ஸ்தாபித்ததாக ஹுஸ்ஸைன் கூறினாலும் அது, அவரது அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நீடிக்க முடியும் என்பது உறுதிப்பட்டுப் போயிற்று.

ஸத்தாம் எதற்காக இந்தப் படையெடுப்பை நிகழ்த்தினார்? பணமும் பேராசையும்தான் அவரை இயக்குவித்தன. நீண்ட காலமாக ஈரான் — ஈராக் யுத்தம் நடந்து வந்திருப்பதால் ஈராக்கின் பொருளாதாரம் சீர்கெட்டுப் போயிருக்கிறது. இதனைச் சீராக்க, 'பெட்ரோலியம் எண்ணெய் விலையை உயர்த்தலாம்' என்ற ஈராக்கின் யோசனையை குவெய்த் ஏற்காததுடன், எதிர்த்தும் வந்தது. "அப்படியானால் விலை உயர்த்தாததால் ஈராக்குக்கு ஏற்படும் நஷ்டத்துக்கு குவெய்த் நஷ்ட ஈடு தரவேண்டும்!" என்று ஓர் அடாவடித்தனமான கோரிக்கையை விடுத்தார் ஹுஸ்ஸைன். குவெய்த் இதையும் நிராகரித்தது. இந்தப் பண விவகாரமும், அராபிய உலகின் தம்நிகரற்ற தலைவர் என்ற பெயர் பெற வேண்டும் என்ற பேராசையும்தான் ஸத்தாம் ஹுஸ்ஸைனை இயக்கின.

எட்டு ஆண்டுகளாக நடந்த ஈரான் — ஈராக் யுத்தத்தின் போது அவரது வற்புறுத்தலுக்கு இணங்கி, குவெய்த், பதினைந்து பில்லியன் டாலர் (ஆயிரம் மில்லியன் = 1 பில்லியன்) வட்டியில்லாக் கடன் தந்திருந்தது. யுத்தம் முடிந்து விட்டது. ஸத்தாம் ஹுஸ்ஸைன், 'குவெய்த் நாடு, தான் கொடுத்த யுத்த காலக் கடனைத் திரும்பக் கேட்கக் கூடாது; தள்ளுபடி செய்ய வேண்டும்' என்றார். இதற்கும் குவெய்த் இணங்கவில்லை.

'குவெய்த், பெட்ரோலியம் எண்ணெய் விலை உயர ஒத்துழைக்காததுடன், அதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உற்பத்தி அளவைவிட அதிகமாகவே உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறது; இதனால் பெட்ரோலியம் விலை குறைகிறது' என்பது ஸத்தாமின் மற்றொரு குற்றச்சாட்டு. இந்தக் கடைசிக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருப்பதாகப் பொருளாதார வல்லுனர்கள் கருதுகின்றனர்.

ஈராக்கில் பெட்ரோலியம் எண்ணெய்

கல்கி

பொன்விழா பரிசுத் திட்டம்:


நாவலாசிரியர்கள் குறிப்பு எடுக்க ஆரம்பித்து விட்டார்கள், நாவல் போட்டிக்கு!

வாசகர்கள் ஏராளமான ஆலோசனைகளை ஆசிரியர் குழுவுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்றுக் கொள்ளப்பட்ட யோசனைகள் பலவற்றின் மீது நமது நிருபர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

துணுக்கு எழுத்தாளர்களும் ஜோக் எழுத விரும்புவோரும், ''எங்களுக்கென்று ஒரு போட்டி இல்லையா?'' என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு போட்டி அடுத்த இதழில் அறிவிக்கிறோம்!

மாணவர்களுக்கான முதல் போட்டிக்கு வந்துள்ள ஏராளமான கட்டுரைகள் பரிசீலனையில் உள்ளன. இரண்டாவது கட்டுரைக்கான தலைப்பு: ''தமிழ்த் திரைப்படம் முன்னேறியுள்ளதா?'' பள்ளி அல்லது கல்லூரி முகவரிகுறிப்பிட்டுக்கல்கியில் இருபக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி அனுப்ப முடிவு தேதி: 1.9.90.

பரிசு ரூ. 50/—; பொன் விழா மேடையில் ஒரு மாணவருக்கு ரூ. 2500/—!



உற்பத்தி இருந்தாலும் அதனை ஏற்றுமதி செய்யத் துறைமுக வசதிகள் மிகக் குறைவு. பாரசீக வளைகுடாவில் அதன் எல்லைப் பகுதி, ஒரு பக்கம் குவெய்த்தாலும் மறுபக்கம் ஈரானாலும் நெருக்கப்பட்டிருக்கிறது. இருக்கின்ற ஒரே துறைமுகமான உம்குவாஸரையொட்டி உள்ள இரு தீவுகள் குவெய்த்துக்குச் சொந்தமானவை. அவற்றை ஈராக்குக்குக் குத்தகைக்குத் தர, குவெய்த் மறுத்து வந்திருக்கிறது.

இதனாலெல்லாம் கோபமுற்று குவெய்த்தைத் தாக்கியுள்ள ஈராக், மேலும் தனது ஆக்கிரமிப்பை இதர நாடுகளுக்கும் விஸ்தரிக்காமல் இருக்க, அமெரிக்கத் துருப்புக்களுடன் வேறு பல அராபிய நாடுகளின் துருப்புக்களும் சவுதி அரேபியாவில் குவிந்துள்ளன. ஈராக்குக்கு உலக நாடுகளின் ஏற்றுமதிகளுக்குத் தடை விதித்து, அதன் மூலம் ஈராக்கைப் பணிய வைக்கவும் முயற்சி நடக்கிறது. ஐ. நா. சபை, ஈராக்கின் ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்து, குவெய்த்திலிருந்து வெளியேறுமாறு கேட்டிருக்கிறது.

ஸத்தாம்ஹுஸ்ஸைன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். 22 வது வயதில் இவர் எந்த அரசியல் கட்சியில் இருந்தாரோ, அதன் சார்பில் அடியாளாகச் செயல்பட்டு, ஜனாதிபதி காஸிம் மீது மிஷின் கன்னிலிருந்து சாமாரிக் குண்டுகளைப் பொழிந்தார். ஆனால் அந்தக் குண்டுகள் அதிபரின் கார் டிரைவரை மட்டுமே கொல்வதில் வெற்றி கண்டன.

படிப்படியாக அரசியல் செல்வாக்குப் பெற்று, 1979 இல் ஆட்சியை அவர் கைப்பற்றிய போது, தம்மை எதிர்க்கக் கூடியவர்கள் என்பதாக அவர் கருதிய இருபத்திரண்டு பேர்களை மரண தண்டனை விதித்துத் தீர்த்துக் கட்டினார். அத்தனை பேரும் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். வன்முறையும் கொடுமையும் அவருக்குத் தண்ணீர் பட்ட பாடு! எனவே, அவர் நாட்டில் எதிர்ப்பு, மாற்றுக் கருத்து என்ற பேச்சுக்களுக்கே இடமில்லை. சிறைச்சாலைகள் எப்போதும் நிரம்பி வழிந்தபடிதான் இருக்கும். இளைஞர்கள் என்ன, குழந்தைகள் கூடச் சந்தேகத்துக்குள்ளானால் சித்திரவதையிலிருந்து தப்ப முடியாது! அவர் நடத்தும் போலீஸ் ராஜ்யத்துக்குப் பயந்து ஒரு மிலியன் ஈராக்கியர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்!

ஆதாரம்: **நியூஸ்வீக்.**

சாவி-75

டி.டி.வாசு

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நுண் கலைகள், விஞ்ஞானம், இலக்கியம் ஆகியவற்றில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. பல ஊற்றுக் கண்களிலிருந்து ஜீவநதிகள் கிளம்பித் தமிழகத்தை வளப்படுத்தின. இலக்கியத்தைப் பொருத்தமட்டில், இராமலிங்க வள்ளலாரும் மகாகவி பாரதியாரும் தமிழ் மறுமலர்ச்சி என்ற விடியலின் போது காலைக் கீதமிசைத்த புள்ளினங்கள். இருபதுகளிலும் முப்பதுகளிலும் அதற்குப் பின்னரும் நடந்த தேச விடுதலைப் போராட்டமானது தமிழ் மறுமலர்ச்சிக்குப் புத்துயிரையும் புது சக்தியையும் அளித்தது. இந்த மறுமலர்ச்சி நதியானது, நாளடைவில் பல கிளை நதிகளைத் தோற்றுவித்து ஆழமும் வீச்சும் ஒருங்கே பெற்றது. ஒரு கிளை நதி மணிக்கொடி பாரம்பரியம். இதனை ஸ்டாலின் ஸ்ரீனிவாசன், வ. ரா. முதலிய பல எழுத்தாளர்கள் உருவாக்கினார்கள்.

மற்றொன்று, கல்கியால் உருவாக்கப்பட்டது. தமிழரின் பெருமைகளையும் சிறப்புக்களையும் அவர் அதிகமாக எடுத்துரைத்தார். வரிசையாக வெளியான அவரது நாவல்கள் அவற்றின் நடையாலும் கதாபாத்திரங்களின் குணச்சித்திர வடிவமைப்பாலும் தமிழர் உள்ளங்களை ஈர்த்துப் பரவசப்படுத்தின.

இன்னொரு இயக்கம், பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணா போன்றோரால் உருவாக்கப்பட்டது. இது சமுதாய நீதிக்காகவும் மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்காகவும் பாடுபட்ட இலக்கிய இயக்கம்.

விஞ்ஞான விஷயங்களைத் தமிழில் சொல்ல வேண்டும். அதற்கு ஏற்பத் தமிழை வளப்படுத்த வேண்டும் என்று மேலும் ஒரு பிரிவு முயற்சி எடுத்தது. இந்தப் பிரிவுக்குத் தலைமை தாங்கியவர் ராஜாஜி.

இன்னொரு இயக்கமும் தோன்றியது. இது, நகைச்சுவையைக் கையாண்டும் அங்கத பாணியிலும் சமுதாயத்தின் பலவீனங்களையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட முயன்றது. இந்த இயக்கத்துக்குத் தலைமை ஏற்றவர் எஸ். வி. வி.

நாட்கள் செல்லச் செல்ல, இந்த இயக்கங்

* சாவி — 75 விழாவில்...



கள் எல்லாமே தனித்தனியே பலமும் சக்தியும் பெற்று முன்னேறின.

இந்த ஐந்து நதிகளையும் கண்டு, பலவற்றில் முக்குளித்து எழுந்தவர் சாவி. இதுவே அவரது தனிச் சிறப்பு. நவீன தமிழ்ப் பத்திரிகை உலகின் சாவியே அவர்தான்!

கல்கி அவர்களின் கீழ் பணியாற்றித் தமது இலக்கிய ஆர்வத்துக்குச் சிறகுகளை வளர்த்துக்கொண்டவர் சாவி. கல்கி அவர்களால் ஓர் ஆளுமைக்கு உள்ளானது போல், அந்த அளவுக்கு, வேறு எந்த எழுத்தாளராலும் சாவி பாதிக்கப்படவில்லை எனலாம். சித்திர விசித்திரங்கள் நிரம்பிய கம்பளம் போல் விரிகின்ற சாவியின் எழுத்தாற்றலில் காலத்துக்கு ஏற்ற பல்வேறு விதமான நரலிழைகள் உண்டு.

நகைச்சுவையையும் அங்கதத்தையும் பயன்படுத்துவதில் ஆற்றல் மிக்கவர் சாவி. தாம் எழுதுகின்ற நேரத்தில், நாட்டு நலனுக்கு உகந்த காரியத்தை யாரேனும் செய்யவில்லை என்று கண்டால் அவரைக் கடுமையாகக் கண்டிப்பவர். கதை சொல்வதில் மன்னர். சினிமா விமர்சகர் என்ற முறையில் மக்களுக்கும் படாதிபதிக்கும் நல்லதை எடுத்துச் சொல்பவர். வெள்ளி மணி, தினமணி கதிர் போன்ற பல பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து அவற்றைக் கவர்ச்சிகரமாகவும் புதுமையாகவும் வெளிக் கொணர்ந்தவர். 'வாஷிங்டனில் திருமணம்' என்ற அவரது நாடகத்துக்குக் கிடைத்த வரவேற்பு அந்தக் காலகட்டத்தில் வேறு எந்த நாடகத்துக்கும் கிடைக்கவில்லை.

பத்திரிகையாளர், எழுத்தாளர் என்ற இரு அம்சங்களிலும் சிறந்து விளங்குவது மிகவும் அபூர்வம். அப்படிப்பட்ட அபூர்வமானசிலரில் சாவி ஒருவர். கல்கி, கு.ப.ரா, புதுமைப்பித்தன் வ.ரா., தி. ஜானகிராமன் போன்ற உயர்தர எழுத்தாளர்களுக்கு இணையாகச் சாவியைக் குறிப்பிட முடியாதுதான். ஆனால் சாவிக்கு ஒரு தனிச் சிறப்பும் உண்டு. தமிழ்ப் பத்திரிகை உலகில் பலர் நட்சத்திரம் போல உயர்ந்து மின்னுகிறார்கள்; ஒரு காலகட்டம் ஆன பின் குச்சி போல் சரிந்து விழுந்தும் விடுகிறார்கள். ஆனால் சாவி என்றும் தகர்க்க முடியாதவராகத் திகழ்கிறார். புயல், மழை, வெப்பம், எல்லாவற்றையும் அனுபவித்துத் தாங்கியவர், தென்றலையும் சுவாசித்து ஜீவ களையுடன் தனித்து நிற்கிறார். உறுதியாகச் செயல்படுகிறார்.

வாழ்க்கையைப் பல கோணங்களில் தட்டிப் பார்த்தவர் சாவி. விடுதலைப் போராட்ட வீரராக விளங்கிச் சிறை சென்றார். கதர் பிரசாரம் நடத்தினார். சங்கரரும் ராமானுஜரும் காந்தியுமே முழு வெற்றி காண முடியாத போது, ஒரு 'தார்மிக இயக்கத்தை நடத்திக் காட்டுகிறேன்' என்று அவர் ஒரு காலகட்டத்தில் முன்வந்ததே மாவீரம்தான்! சென்னை நகர மக்களுக்கு மல்யுத்தம் காண வாய்ப்பளித்து, அதில் சில காலம் ஈடுபட்டிருந்தார். ஏன், ஹோட்டல் கூட நடத்திப் பார்த்திருக்கிறார். வெண்ணெய்க் கடையும் வைத்திருந்தார்!

ஆனால் இவற்றிலெல்லாம் அவருக்கு அதிர்ஷ்டம் அடிக்கவில்லை. மாயமானைத் துரத்தி ஏமாந்தது போல் ஆயிற்று. இலக்கியம் என்பது ஒரு பொறாமை மிக்க மனைவி போல; இன்னொருத்தி பேரில் கணவன் அன்பு வைப்பதை அவள் பொறுக்க மாட்டாள் என்பார்கள். சாவி, அடிப்படையில் ஓர் எழுத்தாளரே ஆனதால், மற்றத் துறைகளில் தோல்வியே கண்டார்.

சாவி, ஆற்றல் மிக்க அருமை நண்பர்: புதிய எழுத்தாளர்களைத் தாராளமாக ஊக்குவித்தவர்; எதிர் எதிர்த் தரப்பில் இருப்பவர்களிடையேயும் நல்லெண்ணத்தையும் நட்பையும் உருவாக்க முயற்சி செய்பவர். அவரது நண்பர் வட்டம் விரிவடைந்து கொண்டே போகிற ஒன்று. அவருக்கு விரோதிகள் என்று நான் அறிந்து யாருமே இல்லை.

எழுபத்தைந்து ஆண்டுகள் உபயோகமான வாழ்க்கை நடத்தியிருக்கிறார் சாவி. தமிழ் இலக்கியமும் தமிழ் மக்களும் அவரது நற்பணிகளால் தொடர்ந்து பயன் பெறட்டும்.



பட்டத்துப் பிள்ளையார்!

எட்டையபுரத்தை ஆண்ட குறுநில மன்னர்கள் பட்டம் சூட்டிக் கொள்ளும் முன் ஒரு பிள்ளையாரைக் கண்டிப்பாகத் தரிசித்து அருள்பெற வேண்டும் என்பது நியதி. தங்களுக்குச் சூட்டப்படும் கிரீடத்தை முதலில் இப் பிள்ளையாருக்குச் சூட்டிப் பின்னர்தான் அரசுப் பொறுப்பு எடுத்துக் கொள்வர். எனவே இந்தப் பிள்ளையாருக்குப் "பட்டத்துப் பிள்ளையார்" என்று பெயர். சிதம்பரனார் மாவட்டம், எட்டையபுரத்திற்கு அருகே நடவற்பட்டி என்ற ஊரில் இருக்கிறார் இவர்.

— ரமா ராமநாதன்.

சரியான விலையில் மிக உன்னதமான ஷாம்பூவின் தேர்வு இங்கிருந்து தொடங்குகிறது...

பிராண்டு	* விலை (ரூ.)	
லக்மே	25.00	(அனைத்து வரிகளும் உட்பட)
ஸன்ஸில்க்	23.10	(உள்ளூர் வரிகள் தனி)
ஹேலோ	22.00	(உள்ளூர் வரிகள் தனி)
வெல்வெட்	13.50	(அனைத்து வரிகளும் உட்பட)

* பம்பாயில் 21 மே, '90 அன்று 100 மில்லியின் விலை

இங்கே முடிவடைகிறது

ஸாஷே ரூ 1/- மட்டுமே





இவ்வளவே விலையில் உங்கள் குடும்பத்தினர் எழில்மிகுந்த, மிருதுவான, வளமான கூந்தலைப் பெறலாம். உங்கள் கேசம் ஊட்டம் பெற வெல்வெட் எக் கண்டிஷனர் ஷாம்பூ மற்றும் நீளமான, அடர்த்தியான கூந்தலுக்கு வெல்வெட் பிளாக் கண்டிஷனர் ஷாம்பூ.

வெல்வெட் வனப்பு : வியப்பூட்டும் விலையிலே

விநியோகஸ்தர்கள் : கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்



கல்கி

1990 ஆகஸ்ட் 26
மலர் : 49 இதழ் 4
பிரமோதூத ஆவணி 10



மண்டை உடைக்கும் மண்டல் அறிக்கை!

மண்டல் கமிஷன் அறிக்கை, மண்டை உடைக்கும் அறிக்கையாகவே மாறி விட்டது! அதில் கூறப்பட்டிருப்பனவற்றை மண்டையை உடைத்துக் கொண்டு நுணுகி ஆராய்வது ஒருபுறமிருக்க, நிஜமாகவே வட மாநிலங்கள் பலவற்றில் இந்த அறிக்கைக்கு எதிரான போராட்டங்கள் உருவாகி, அடிதடி ரகளைகள், தீவைப்பு, ரயில் மறிப்பு முதலிய விரும்பத்தகாத விஷயங்கள் நடந்து வருகின்றன.


அறிக்கையை எதிர்க்கும் அனைவருமே பிற்படுத்தப்பட்டோருக்குச் சிலபல சலுகைகள் அளித்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேற உதவ வேண்டியதுதான் என்பதை ஒப்புக் கொள்வார்கள். அதேபோல் அறிக்கையை ஆதரிக்கும் அனைவருமே 'பிற்படுத்தப்பட்டவர் என்பதாக ஒரு பிரிவு எக்காலத்துக்கும் இருந்துவர முடியாது; அவர்களுக்கு என்றென்றைக்கும் சலுகைகள் அளித்து வருதல் இயலாது; ஜனநாயகத்தில் அனைவரும் சமம்; அனைவருக்கும் சமவாய்ப்பு என்ற நிலைதான் இறுதி லட்சியமாக இருக்க வேண்டும்' என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கருத்து தெரிவிப்பார்கள். ஆக, அடிப்படையான தார்மிக நோக்கு இரு தரப்பினருக்கும் உள்ளது.


மோதல் எங்கே வருகிறது என்றால், எத்தனை சதவீதம் ஒதுக்கீடு, எத்தனை காலத்துக்கு, எந்தெந்த அம்சங்களில் என்பனவற்றில்தான். சுதந்திரம் பெற்றபோது இருந்த இட ஒதுக்கீடு சதவீதம் நாளுக்கு நாள் எல்லாத் துறைகளிலும் அதிகரித்துக் கொண்டுதான் போகிறதேயொழிய குறையக் காணோம்! அதேபோல் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவும் நீண்டு கொண்டே போகிறதே தவிர, ஒரு முடிவுக்கு வரக் காணோம்! அட்மிஷனில் மட்டுமின்றி, தேர்வுகளில் மார்க் போடுவதிலும் சலுகை; வேலைக்குச் சேர்வதில் மட்டுமின்றி, வேலையைச் செய்வதிலும் சலுகை; பதவி உயர்விலும் சலுகை என்று இப்படி எல்லா அம்சங்களிலும் சலுகைகள் பிற்படுத்தப்பட்டோருக்கு அதிகரித்து வருகிறது. இதனால் எல்லாம் இதர சமூகத்தினரிடையே மனக்குமைச்சல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தவிர்க்க முடியாத மனித இயல்பு. இன்றைய தலைமுறையைச் சேர்ந்த ''முற்படுத்தப்பட்ட'' இளைஞர்கள், 'முன்பு எப்போதோ யாரோ செய்த தவறுகளுக்காக இன்று நாம் ஏன் சிலுவை சுமக்க வேண்டும்?' என்று நினைக்கும் போது எதிர்ப்புத் தோன்றி வன்முறையாக வெடிக்கிறது. இதில் நாம் குறை காண முடியாது.

அதே சமயம், பிற்படுத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னும் நாட்டில் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு ''வாழ்ந்து'' கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்பதிலும் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

ராஜாஜி சொன்னார்: ''இட ஒதுக்கீட்டுக்கு எப்போது முடிவு செய்யலாம் என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் தன்னம்பிக்கை பெற்று, இனியும் தாங்கள் சலுகைகள் பெறுவது அவமானம் என்று கருதி, 'இட ஒதுக்கீடு வேண்டாம்' என்று தாங்களாகவே







கூற வேண்டும். அந்த நிலை தோன்றும் வரை இட ஒதுக்கீடு நீடிக்க வேண்டும்'' என்றார்.

அந்த நிலை எப்போது வரும்? எப்படி வரும்? என்று கேட்டால், இந்த நாட்டில் உள்ள குடிமகன் ஒவ்வொருவனும் என்றைக்கு வாழ்க்கைக்குப் பயனுள்ள கல்வியைப் பெறுகிறானோ, அன்றுதான் வரும். 'சுய முயற்சியால் நாம் முன்னுக்கு வர முடியும்' என்ற தன்னம்பிக்கை ஏற்படும் போது, தன்மானமும் உருவாகும். அப்போது சலுகைகளை அவமானமாகக் கருதி ஒதுக்குவான்.

ஆனால் சுதந்திரம் பெற்று நாற்பத்து மூன்று ஆண்டுகளில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எழுத்தறிவில்லாதவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலேதான் சாதனை புரிந்திருக்கின்றன! அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யாமல் எது எதற்கோ கோடிக்கணக்கில் வாரிவிட்டுக் கொண்டிருக்கின்றன. கல்வி — வாழ்க்கைக்குப் பயனுள்ள கல்வி — என்ற அடிப்படை பூர்த்தியானால் இட ஒதுக்கீட்டுப் பிரச்னை மட்டுமின்றி, வறுமை, வேலையின்மை, ஜாதி மத பேதம், இலவசங்கள், நோய், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், ஜனத்தொகைப் பெருக்கம் போன்ற பல பிரச்னைகளும் விடைபெற்றுச் செல்லும்.

'முற்படுத்தப்பட்டவரில் வறியவர் இல்லையா?' என்றும், 'பிற்படுத்தப்பட்டவரில் வசதி மிக்கவரே மேலும் சலுகைகள் அனுபவிக்கிறார்களே' என்றும் அரசியல் பண்ணுகிறோமே தவிர, அடிப்படைப் பிரச்னையைக் கவனிக்கவில்லை. இதன் நிகர விளைவு என்னவென்றால், பிற்படுத்தப்பட்டவரும் முன்னேறவில்லை; முற்படுத்தப்பட்டவரோ பின்னேற்றமடைந்து வருகிறார்கள்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

தீராத பிரச்னையிலும்



* புரோத்திமா

"என் பையனோட பென்சிலைத் திரும்பவும் காணோம்..."

"..........."

"இதோட இந்த மாசம் ஆறு பென்சில் வாங்கிக் குடுத்திருக்கேன்..."

"..........."

"என்ன, நான் பாட்டுக்குச் சொல்லிக் கிட்டே இருக்கேன், நீங்க வாயே திறக்க மாட்டேங்கறீங்க... இவ்வளவு ஃபீஸ் வாங்கறீங்க, இதைக் கவனிக்க மாட்டீங் களா உங்க ஸ்கூல்ல...."

"நான் எந்த விதத்துல உங்களுக்கு உதவ முடியும் சொல்லுங்க, கண்டிப்பா செய்ய றேன்."

"அம்மாடி, அந்த ஏழாம் நம்பர் ரூமை எங்களுக்குத் தரப்படாதா... என் மூத்த பொண்ணு பிரசவிச்சப்போ அங்கதான் இருந்தா..."

"ஸாரிம்மா! அந்த ரூம்ல ஏற்கெனவே பேஷண்ட் படுத்திருக்காங்க..."

"நல்ல ராசியான ரூம்... சின்னவளுக்கும் அதையே குடுத்துடும்மா..."

"ஏழாம் நம்பர்ல மேஜர் ஆபரேஷன் ஆன பேஷண்ட் படுத்திருக்காங்கம்மா. அவங்க காலி பண்ண இன்னும் பத்து நாள் ஆகும்..."

"நீ மனசு வைச்சா அவங்களை வேற ரூமுக்கு மாத்திட்டு எங்களுக்கு அதைத் தரலாம். ஆனா வைக்க மாட்டே..."

"எங்க ஆஸ்பத்திரியிலே எல்லா ரூமும் ராசியான ரூம்தான்மா. ஒன்பதாம் நம்பர்ல உங்க சாமான்களை வைக்கச் சொல்றேன்.

"ஹலோ பேபி! நான் திரும்பி வந்துட் டேன் பாத்தியா...!"

"வெல்கம் மிஸ்டர் ஸ்வாமி..."

"இந்த முறை பத்து நாள் இருக்கப்



* சத்தியா

போறேன். அதனால் நீ டபாய்க்க முடியாது..."

"உங்க வழக்கமான ரூம்ல புக் பண்ணி யிருக்கேன் சார்..."

"...இந்த முறை நீ என்னோட ரூமுக்குக் காப்பி சாப்பிட வந்தேயாகணும்."

"அரி! மிஸ்டர் ஸ்வாமியை அவர் ரூமுக்குக் கூட்டிட்டுப் போ. மிஸ்டர் ஸ்வாமி, நீங்க விருப்பப்பட்டா இங்கே லவுஞ்சிலேயே உங்களுக்குக் காப்பி கொண்டு வரச் சொல்லலாம்... எப்போ

மாறாத புன்னகை

* சாருகேசி

வேணும்னாலும். ஹாவ் எ பிளெசன்ட் ஸ்டே... இது உங்கள் அறை சாவி...''

மேற்படி மூன்று உரையாடல்களும் ரிசப்ஷனிஸ்ட்டுகளுக்கும் அவர்கள் தங்கள் அன்றாடப் பணிகளினூடே சந்திக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே சகஜமாக நிகழ்பவை. இந்த மூன்று சந்தர்ப்பங்களிலுமே அநியாயக் குற்றச்சாட்டு, அடாவடித்தனம், அட்டுவழிதல் ஆகியவற்றுக்குப் பொறுமை இழக்காமல் ஈடுகொடுத்து, புன்னகை மாறாமல் பதில் சொல்கிறார்கள் இந்த வரவேற்பாளர்கள். ஒவ்வொரு நாளும் இதைப் போல் சின்னதும் பெரிசுமாகப் பிரச்னைகள் நச்சுப் பிடுங்கல்கள் — ஏராளம். இவையெல்லாவற்றினூடும் புன்னகை காத்து, வாடிக்கையாளரைத் தக்கவைத்துக் கொள்வதுதான் வரவேற்பாளருடைய வெற்றியின் ரகசியம். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிலரை நேரில் சந்தித்தோம்.

நேஷனல் ஆங்கிலப் பள்ளியின் வரவேற்பாளராகப் பணிபுரியும் சந்தியா விஜயகுமார் ''அட்மிஷன் காலத்தில்தான் எங்களுக்கு விழி பிதுங்கிப் போகும்'' என்கிறார். ''அதெப்படி! பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு மட்டும் இண்டர்வியூ கார்டு வந்திருக்கு எங்க குழந்தைக்கு வரல்லியே! எங்க அப்ளிகேஷனைத் தொலைச்சுட்டீங்களா?'' என்று சில பெற்றோர்கள் சண்டைக்கு வருவார்கள். வேறு சிலர் 'சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்காது போலிருக்கே. இந்த அம்மா நம்மளை எச்.எம்.மைப் பார்க்கவே விட மாட்டேங்கறாங்க' என்று முகத்துக்கு நேராகவே சொல்லுவார்கள். 'எச்.எம். இல்லை'என்று சத்தியம் செய்தால் கூட நம்ப மாட்டார்கள். இந்த மாதிரி சமயத்தில் கோபப்பட்டால் நிலைமை மோசமாகி பள்ளியின் பெயர் கெட்டுப் போகும்.

''அட்மிஷன் கிடைத்து விட்டாலோ நன்றியெல்லாம் ஏக பலமாக இருக்கும்! வசவையும் வாழ்த்தையும் சமமாகப் பாவிக்கப் பழகிக் கொண்டால் இந்தப் பணியில் அலாதியான திருப்தி கிடைக்கும். குழந்தைகளுடன் பழக நிறைய வாய்ப்புக்கள் இருப்பதால் மனத்துக்கு இதமாய் இருக்கும். அவர்களுக்குப் பாடம் நடத்தா விட்டாலும் அவர்கள் பல சமயங்களில் அலுவலகத்துக்கு வந்து கூடமில்லாமல் பேசுவார்கள். அவர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளித்து, அவர்கள் முகத்தில் திருப்தியைக் காண்பது மிகவும் மனநிறைவான விஷயம்.''

''பள்ளி ரிசப்ஷனிஸ்டுக்குக் கவர்ச்சியான தோற்றத்தை விட கனிவான குரல், பொறுமை — இவைதான் முக்கியம் என்கிறார் இப் பள்ளி தலைமையாசிரியை மோகனா சந்திரசேகர்.

''மருத்துவமனை ரிசப்ஷனிஸ்ட்கள் வெறும் வரவேற்பாளர்களாக இருந்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு நோய்கள் பற்றியும் சிகிச்சை முறைகள் பற்றியும் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரச்னைகள் எழும். உதாரணமாக 'எமர்ஜென்ஸி கேஸாக' ஒரு நோயாளி உடலில் நீர் வற்றிப் போய் 'ட்ரிப்' கொடுக்க வேண்டிய நிலையில் வந்து சேர்ந்தால் அவருக்கு பத்தாம் நம்பர் டோக்கனைக் கொடுத்து உட்கார வைக்க முடியாது. உடனடியாக டாக்டரைப் பார்க்க அந்த நோயாளி அனுமதிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் உயிருக்கே ஆபத்துதான். இத்தகைய உடனடி முடிவுகளைச் சுயமாக எடுக்கும் அறிவு பெற்றவர்தான் மருத்துவமனையில் ரிசப்ஷனிஸ்டாகப் பணியாற்றலாம்'' என்கிறார் ஒரு தனியார் கிளினிக் நடத்தும் மருத்துவர்.

''ஹாஸ்பிடல் ரிசப்ஷனிஸ்டுக்கு இயல்பாகவே இதமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். அவர் ரம்மியமாக, மிதமாக உடையுடுத்த வேண்டும். வந்து போகும் நோயாளிகளுக்கு அவர் தோற்றமும் சுபாவமும் மனச் சோர்வை நீக்கித் தன்னம்பிக்கை யூட்டுவதாய் இருக்க வேண்டும்'' என்றும்





''நம்ப நிதியமைச்சர் ஏன் சட்டையோடு துண்டை சேர்த்துப் 'பின்' பண்ணியிருக்காரு?''

''இந்த முறை 'துண்டு' விழக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறாராம்!''

— க. சுவாமிநாதன்.

பட்டியலிடுகிறார்.

''எப்படியாவது இன்றைக்கே அப்பாயின்ட்மெண்ட் கொடுங்கள். நாளைக்கு மறுபடியும் அரை நாள் லீவ் கிடைக்காது'' என்ற முறையீட்டுடன் வருபவருக்கு மனிதாபிமான அடிப்படையில் டாக்டரைப் பார்க்க அனுமதி தரும் ரிசப்ஷனிஸ்ட்.

''அதெப்படி! எங்களுக்கு அப்புறம் வந்தவர்களை முன்னாடி அனுமதிக்கிறீங்க'' என்ற மற்றொரு பேஷண்டின் தாக்குதலுக்கு உள்ளாகிறார்.

போதாக்குறைக்கு டாக்டரும், ''ஏன்மா! இன்னிக்கு ஆறு அப்பாயின்ட்மெண்டுக்கு மேலே வேண்டாம்னு சொன்னேனில்லை. ஏன் இன்னொரு பேஷண்டை அனுப்பினே...?'' என்று இந்த 'மத்தளத்தை' இன்னொரு பக்கம் இடிக்கிறார்!

மடிப்புக் கலையாத புடைவையுடன் மின் விசிறியின் கீழ் அமர்ந்து புன்னகைத்தபடி 'பிஃப்டி ருபீஸ் ப்ளீஸ்' என்று நம்மிடமிருந்து பணத்தை வாங்கும் முகத்தை மட்டும்தான் நாம் பார்க்கிறோம். அந்த முகம் இவ்வளவு விஷயங்களுக்கு ஈடுகொடுக்கிறது என்பது மறந்து போகிறது.

''**வா**டிக்கையாளர்களின் திருப்திதான் எங்கள் மகிழ்ச்சி'' என்கிறார் பார்க் ஷெராடன் ஹோட்டலில் ரிசப்ஷன் பகுதியை நிர்வகிக்கும் உயர் அதிகாரி சாருகேசி. இவர் பல ரிசப்ஷனிஸ்டுகளுக்குப் பயிற்சி அளித்து உருவாக்கியவர்.

''பயணிகள் வரும் நாள் பார்த்து அறைகளை ஒதுக்குவது. அவர்களுக்கு வரும் தபால், பார்சல், தொலைபேசிச் செய்திகளை அவர்களிடம் சேர்ப்பிப்பது. வாடிக்கையாக வரும் நபராக இருந்தால் அவர் அறையில் பூச்செண்டோ பழக் கூடையோ வைத்து வரவேற்பது; அவரைப் பற்றி, அவரது உணவுப் பழக்கங்கள், ரசனை பற்றித் தெரிந்து வைத்திருப்பது.. எல்லாமே இப் பணியில் சேர்த்தி'' என்கிறார் சாருகேசி.

''பலதரப்பட்டப் பயணிகள் வருவதால் சவால்கள் அதிகம். பலமுறை வந்து பழகிவிட்டவர்கள் 'I missed you!' என்பார்கள். I love you என்று இவர்கள் தாபத்துடன் பேசும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்தச் சந்தர்ப்பங்களில் ஒரு வரவேற்பாளர் சலனப்படாமல் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். அதே சமயத்தில் வாடிக்கையாளரிடம் அவமரியாதையும் காட்டக் கூடாது...'' என்று கூறும் சாருகேசியிடம், இங்கே பணியாற்றும் பெண்களுக்கான பாதுகாப்புக் குறித்துக் கேட்கிறோம்.

''மேற்கத்திய கலாசாரத்தில் மூழ்கியவர்களும் மேலை நாட்டவர்களும் அதிகமாக வரும் இடம்தான். ஆனால் நமது பண்பாட்டை விட்டுக் கொடுத்து விட முடியாது. ரிசப்ஷனிஸ்டுகள் வாடிக்கையாளரின் அறைக்கோ ஹோட்டல் உணவகங்களுக்கோ செல்லக் கூடாது; 'லாபி'யில் உலாத்தக் கூடாது; உள்ளே நுழைவதற்கும் வெளியே செல்வதற்கும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள வாயில் வழியைத்தான் பயன்படுத்த வேண்டும். பணிக்கு வரவும் திரும்பச் செல்லவும் ஹோட்டல் வாகனத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்...'' என்கிறார் சாருகேசி.

''**ப**ல துறைகளைச் சேர்ந்த விதவிதமான மனிதர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, கவர்ச்சியான ஊதியம், முயன்றால் படிப்படியாக முன்னேறி நல்ல பதவியை அடையும் சந்தர்ப்பம்... இவ்வளவும் இருக்கின்றன இத் தொழிலில்'' என்கிறார் 'சோழா'வில் ரிசப்ஷனிஸ்டாகப் பணியாற்றும் புரோத்திமா.

''என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவருக்கு என் பணி பற்றிய முழு விவரங்களும் தெரியும். சில நேரங்களில் இரவு நேரப் பணி உண்டு என்பதும் தெரியும். அவர் இதையெல்லாம் சகஜமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.''

''இந்தத் தொழிலில் மிக முக்கியமானது என்னவென்றால் யார் என்ன பாராட்டு தெரிவித்தாலும் அது நமக்குத் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கப்பட்டதல்ல, ஹோட்டல் முழுவதுக்குமான பாராட்டு என்பதாகக் கருத வேண்டும். உண்மையும் அதுதான். இப்படிக் கருதப் பழகிக்கொண்டால் எந்தச் சந்தர்ப்பத்திலும் உணர்ச்சி வசப்படாமல் தாக்குபிடிக்கலாம்'' என்று கூறுகிறார் புரோத்திமா.

''சுத்தமான உச்சரிப்பு, பணியில் அப்பழுக்கற்ற திருத்தம், எப்போதும் சிரித்த முகம் — இவைதான் மூன்று முக்கியத் தேவைகள்'' என்கிறார்கள் பார்க் ஷெராட்டனில் வரவேற்பாளர்களாகப் பணியாற்றும் பெண்கள்.

பல வரவேற்பாளர்களைச் சந்தித்துப் பேசியதில் சில விஷயங்கள் தெளிவாயின:

இவர்கள் வாடிக்கையாளர்களைப் புன்

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



ஏனெனில், காம்ப்ளான், குழந்தைகளுக்கு அன்றாடம் தேவைப்படும் அத்யாவசிய ஊட்டச்சத்தை வழங்குகிறது.

குழந்தைகளின் வளர்ச்சிப் பருவம் சாதாரணமாக 15 அல்லது 16 வயதிலே நிறைவு பெறுகிறது. இந்த வளர்ச்சிக்கு அடிப்படையான ஊட்டச்சத்து, புரதமாகும். ஆகவே, உங்கள் குழந்தைகளுக்கு இப்போது காம்ப்ளான் மிகமிக அவசியம். புரதச் சத்துக்களிலேயே தலைசிறந்த பால்-புரதம் (20%) கொண்டது காம்ப்ளான். மேலும் 22 ஆதார உணவுச்சத்துக்களும் காம்ப்ளானில் உள்ளன.

குழந்தைகள் ஆசையோடு கேட்டு அருந்தும் சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.



23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை

காம்ப்ளான்®

GX/62/203 TAM

திட்டமிட்ட பரிபூரண உணவு

சிரிப்புடன் வரவேற்பவர்கள் மட்டும் அல்ல. வேறு பல பொறுப்பான வேலைகளையும் சிரித்தபடி செய்பவர்கள். பணியாற்றும் நிறுவனத்தின் 'இமேஜ்' ஐ உயர்த்துவதும் காப்பாற்றுவதும் இவர்கள் கையில்தான் இருக்கிறது. நிறுவனத்தின் எந்தத் துறையில், எந்த மூலையில், என்ன தவறு நேர்ந்தாலும், அதற்கு நேரடியாக இவர்கள் பொறுப்பல்லவென்றாலும் அதனால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் அதிருப்தியைத் தாங்கிக் கொள்பவர்கள் இவர்கள்தான்.

உதாரணத்துக்கு ஓர் உரையாடல்:

வாடிக்கையாளர்: மேலதிகாரி இருக்கிறாரா?

ரிசப்ஷனிஸ்ட்: இல்லை.

வா: வெளியே போயிருக்கிறாரா?

ரிசப்: ஆமாம்.

வா: எப்போ வருவார்?

ரிசப்: ஸாரி! தெரியாது.

வா: எங்கே போயிருக்கிறார்?

ரிசப்: மன்னிக்கணும், தெரியாது...

இதற்குமேல் பொறுமையிழந்து வாடிக்கையாளர் பேசும் ஏச்சுக்களைச் சொல்லாமல் இருப்பதே மேல்! சொல்லாமல் கொள்ளாமல் மேலதிகாரி வெளியே போய் விட்டால் அதற்கு ரிசப்ஷனிஸ்ட் எவ்வகையில் பொறுப்பு...?

பொதுவாக ரிஸப்ஷனிஸ்ட் என்றாலே பெண்களைத்தான் எண்ணிப் பார்க்கிறோம். அவர்களுக்குத்தான் பொறுமையுடனும் மாறாத புன்னகையுடனும் எந்தவித இக்கட்டான நிலையையும் சமாளிக்கும் குண இயல்பு உண்டு என்று கருதுகிறோம். பெண்களை வரவேற்பாளர்களாக அமர்த்துவது குறித்து சில பெண்ணுரிமை அமைப்புக்கள் ஆட்சேபணை தெரிவிப்பதுண்டு. இதற்கு எதிர்வாதமாக வீட்டில் கூட பெண்கள்தானே விருந்தோம்பல் செய்கிறார்கள் என்று சொல்வோர் உண்டு. சில ஹோட்டல் ரிசப்ஷன்களில் ஆண் வரவேற்பாளர்களும் காணப்படுகிறார்கள். பொதுவான சிந்தனைக்கு மாறுபட்ட கருத்தாக, ''எங்கள் அலுவலகத்தில் பெண் ரிசப்ஷனிஸ்ட் இருந்த போது ஒரே குறைகள்தான்'' என்கிறார் ஒரு பிரபல மருந்துகள் தயாரிப்பு நிறுவனத்தின் பெர்சானல் மானேஜர். ''இப்போது ஆண் ரிசப்ஷனிஸ்ட்தான். வேலை ஒழுங்காக நடக்கிறது. வீண் அரட்டை இல்லை. ஏதேனும் தவறு நடந்தாலும் கண்ணைக் கசக்குவார்களே என்ற பயமில்லாமல் அவர்களைச் சுதந்திரமாகக் கோபித்துக் கண்டிக்கவும் முடிகிறது'' என்கிறார் அவர்!

— நிர்மலா சக்கரவர்த்தி

அட்டை வண்ணப்படம், படங்கள்:
ரமணன். (நன்றி: பார்க் ஷெராடன்)

முதற் கடவுள்

அன்னை பராசக்தி கைலாயத்துச் சித்திரக்கூடத்தைப் பார்வையிடுகையில் 'ஓம்' என்ற எழுத்தில் அவரது விழி மலர்கள் லயிக்க, அப்போது உதித்தவரே பிள்ளையார் என்கிறது ஸ்கந்த புராணம். கணபதி வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்கள் 'க' என்பதை அறிவின் முதலெழுத்தாகவும், 'ண' என்பதை அறிவின் இறுதி எல்லையாகவும் பொருள் கொண்டு, 'கணபதி,' அறிவின் முதலுக்கும் இறுதிக்கும் தலைவராகிய முதற்கடவுள் என்கின்றனர்.

கணநாதனின் சில அபூர்வத் தோற்றங்கள்:

பால கணபதி: நான்கு கைகளுள் ஒன்றில் வாழைப்பழம், இரண்டாவதில் மாம்பழம்,





மூன்றாவதில் பலாப்பழம், நான்காவதில் கரும்பு ஏந்தி, துதிக்கையில் கொழுக்கட்டையுடன், அருள் பாலிக்கிறார். "கலாவத பூமி சம்ரக்ஷக" என்று பூமிக்கு இயற்கை வளங்களை அருள்பவராகவும், "கலாவத புத்தி பேஷக" என்று அறிவு வறட்சியை நீக்குபவராகவும் வணங்கப்படுகிறார்.

வல்லப மஹா கணபதி: சிவனுடைய அர்த்தநாரீசுவரத் திருக்கோலத்தைப் போலவே ஆண்மை, பெண்மை — இரு தத்துவங்களையும் ஒருசேரக் காட்டுவதாகக்

கூறப்படுகிறது. விஷ்ணு, சிவன், மன்மதன், வராஹம் ஆகியோருடைய ஆயுதங்களான சக்கரம், சூலம், கரும்பு, கதை இவற்றை முறையே நான்கு வலது திருக்கரங்களிலும், லக்ஷ்மி, பார்வதி, ரதி, பூதேவி ஆகியோருடைய கரங்களை அலங்கரிக்கும் தாமரை, பாசம், உத்பல மலர், நெற்கதிர் இவற்றை நான்கு இடது திருக்கரங்களிலும் வைத்துக் கொண்டிருக்கிறார். முன் இரு கரங்களுள்



வலது கையில் மாதுளம் பழம். இடது கை வல்லபை தேவியை அணைத்தபடி உள்ளது. வல்லபையின் இடது கரத்தில் உடைந்த தந்தம் இருக்கிறது.

பஞ்சமுக கணபதி: ஆக்கல், அளித்தல், நீக்கல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருதிகளையும் உள்ளடக்கிய மூலாதார மூர்த்தி இவர். ஐந்து யானை முகங்களுடைய இவரே சிம்மத்தின் மேல் அமர்ந்து வரும் ஹேரம்ப கணபதியாகவும் சித்திரிக்கப்படுகிறார். பொதுவாக யானையை அடக்கி அதன் தலையில் கஜகேசரியாகச் சிங்கம் உட்காருவது தான் சொல்லப்படுகிறது. அந்தச் சிம்மத்தையும் அடக்கி ஆள வல்லவராக இங்கே விநாயகப் பெருமான் காட்சி தருகிறார்.

ஜப்பானிய கணபதி: ஜப்பான் நாட்டு கியோடா நகரத்தில் உள்ள டைகோஜி மடாலயத்தில் ஒரு மிகப் பழைய படம் உள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்தப் படம் ஓர் அபூர்வ, அழகிய விநாயகர் உருவம். தொப்பை, தொந்தி இல்லாத இந்த விநாயகரின் ஒரு கையில் கோடரியும் மற்றொரு கையில் ஒரு முள்ளங்கியும் உள்ளன. 'பினாயகா,' 'ஷோடன்,' 'காங்கிடன்' என்ற பெயர்களில் விநாயகரைப் பல நூற்றாண்டுகளாக வணங்கி வருகின்றனர் ஜப்பானியர்!

விநாயகர் வடிவம், மெக்ஸிகோ, எகிப்து, ரோம், கிரீஸ், சீனா, மங்கோலியா, கம்போடியா போன்ற தேசங்களிலும் வழிபாட்டுக்குரியதாகக் கருதப்படுகிறது.



தொகுப்பு: **நிர்மலா சக்கரவர்த்தி**

தகவல்கள் உதவி: **மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள்.**

ஓவியங்கள்: **மணிவேல்.**

வண்ணப்படம்: **ரமணன்.**

(நன்றி: டாக்டர் எம். ஜி. வரதராஜன்)





"நான் சாகவில்லை!"

COUNT DOWN — 20

"ஏன்ன முடிவு செய்தாய்?'' என்று கேட்டார் அருள்தாஸ் நம்பிக்கையோடு.

அமீர் ஜவஹர் நித்திரை காணாத கண்களால் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

''நீங்கள் என்னை எப்படி சித்திரவதை செய்தாலும் சரி, நான் எதுவும் சொல்லப் போவதில்லை. சொல்வதற்கு என்னிடம் ஒன்றுமில்லை.''

''ஸாரி அமீர். நாங்களும் உன்னை விடுவதாக இல்லை.''

அமீர் ஜவஹர் நாக்கால், வறண்டு போயிருந்த, வெடித்திருந்த உதடுகளை ஒரு முறை ஈரப்படுத்திக் கொண்டான்.

''என் தங்கைக்கு நான் ஒரு போன் செய்து கொள்ளலாமா?''

''அச்சுதன்!''

அச்சுதன் புத்தாடையுடன் நெற்றியில் புது சந்தனக் கீற்றுடன் அறையில் பிரவேசித்தான். அவன் கையில் ஒரு சாம்பல் நிற டெலிஃபோன். ரிசீவரை எடுத்து அவனே டயல் செய்து, ரிசீவரை அமீர் ஜவஹரிடம் நீட்டினான்.

எதிர்முனையில் சாந்தினி, தழைந்த, தவித்த குரலில் பேசியது ரிசீவர் வழியே ஒழுகியது.

''நான் வர நேரமாகும் சாந்தினி. இரண்டு நாள், மூன்று நாள் ஆனால் கூடப் பயப்படாதே. ஜாக்கிரதையாக இரு. இந்தியாவில் தந்திரக்காரர்கள் அதிகம்.''

அச்சுதன் தொடர்பைத் துண்டித்தான். வெளியேறினான்.

''அமீர். உன் நண்பன் ஒருவனைப் பார்க்கிறாயா?'' என்று கேட்டார் கர்னல்.

அஞ்சனா மைக்கேல் ராஜ்

அமீர் ஜவஹர் நிமிர்ந்த போது, அறைக்குள் ஒருவன் உந்தித் தள்ளப்பட்டான்.

''இவனைத் தெரிகிறதா பார். பெயர் மல்ஹோத்ரா. இந்திய ராணுவ ரகசியம் என்று சில போட்டோக்களை நேற்று இரவு உன்னிடம் ஒப்படைத்தானே. அவன்தான்.''

''தெரியாது. இவனை நான் முன்னே பின்னே பார்த்ததேயில்லை.''

''நீ களைப்பாக இருக்கிறாய். உன் இரத்த அழுத்தம் வெகுவாகக் கூடியிருக்கிறது. அதனால்தான் அவசரப்பட்டுப் பொய்களை அடுக்குகிறாய். நேற்று நானும், கேப்டன் யாதவும் பேசியதை ஒட்டுக் கேட்க மல்ஹோத்ரா பயன்படுத்தினானே பட்டன் மைக்ரோ போன். அதைப் போன்ற மைக்குகள் உன் கடையின் சுவரில், ஜன்னல் கம்பியில், டெலிஃபோனில், மேஜைக்கடியில், பாத்ரூமில் இன்னும் எங்கெங்கே புதைக்கப்பட்டிருக்கின்றன என்று உனக்குத் தெரியாது! நீயும் மல்ஹோத்ராவும் பேசியதை என் ரூமில் ரிசீவரில் கேட்டதால்தான், உடனே சாந்தினி சௌக்கிற்கு அச்சுதனை அனுப்ப முடிந்தது.''

அச்சுதன் மல்ஹோத்ராவின் கையைப் பற்றி வெளியே இழுத்துப் போனான்.

''இப்போது கூட நீ உண்மையைப் பேச மாட்டாய். அப்படித்தானே? இந்த ஃபோட்டோ ஆல்பத்தை நீ அவசியம் பார்த்தே ஆக வேண்டும். இந்தா. பார்.''

கர்னல் அருள்தாஸ் இத்தனை நேரம் மடியில் வைத்திருந்த ஓர் ஆல்பத்தை அமீர் ஜவஹரிடம் தூக்கிப் போட்டார்.

அமீர் ஜவஹர் அதை அலட்சியமாகத் திறந்தான்.

முதல் புகைப்படத்தைப் பார்த்ததுமே அவனுடைய முகத்துத் தசைகள் இறுகுவதைக் கர்னல் கவனித்தார். சக்கர நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து அவனைச் சுவாரஸ்யத்துடன் பார்த்தார்.

அமீர் ஜவஹர் அந்தப் புகைப்படத்தை இமை கொட்டாமல் கண்டான்.

அப்பா.

அம்மா.

அவன்.

அம்மாவின் மடியில் குட்டித் தங்கை

ஒற்றன் என்பவன் இறுதிவரை ரஹஸ்ய மனிதனாகவே தொடர வேண்டும். எப்போது முகமூடி கிழிக்கப்படுகிறானோ, அந்தத் தருணத்திலேயே அவன் தோல்வியடைகிறான். தன் தாய் நாட்டிற்கு உபயோகமில்லாதவனாகிறான்.

— லாரன்ஸ். ஜே. ரெட்லிங்கர்.



சாந்தினி.

பின்னணியில் அவர்களது பங்களாதேஷ் வீட்டு முகப்பும், அதில் படர்ந்திருந்த பச்சைக் கொடிகளும்!

மேஜர் நாசர் அவனிடம் அடிக்கடி காட்டியிருந்த புகைப்படம்.

''அந்த ஃபோட்டோவில் இருப்பவர்களை அடையாளம் தெரிகிறதா அமீர்?''

''என் அம்மா'' என்றான் அமீர் ஜவஹர் முகத்தில் உணர்ச்சிகள் கொந்தளிக்க.

''இந்திய நாய்கள் அவள் ரத்தத்தை நக்கிக் குடித்தன. என் அப்பாவைக் கடித்துக் குதறின. நான் மறக்க மாட்டேன். வாழ்நாள் முழுக்க நினைவு வைத்திருப்பேன்.'' அமீர் ஜவஹரின் கண்களில் காழ்ப்பு இருந்தது.

''நீ பொய்யாக நம்பிக் கொண்டிருப்பது மாறப் போகிறது ஜவஹர். ஆல்பத்தில் இன்னொரு போட்டோ இருக்கிறது பார்த்தாயா? பேப்பர் கட்டிங். பாகிஸ்தான் சிப்பாய்களிடத்தில் ஒரு பெண் சிக்கி அலங்கோலமாகக் கிடக்கிறாள் பார். அந்த வருஷத்துச் சிறந்த போட்டோ என்று பரிசு வாங்கிய போட்டோ அது. எடுத்தது ஒரு பத்திரிகை நிருபர். அந்த போட்டோவை நீ கொஞ்சம் கவனமாகப் பார். கீழே கிடக்கும் அந்தப் பெண் யார்?''

அமீர் ஜவஹர் வியர்த்தான். கண்கள் இடுங்கின. பத்தொன்பது வருடப் பழுப்பேறிய பத்திரிகைத் தாளில் கூட அவனுக்கு அவனுடைய அம்மாவை அடையாளம் புரிந்தது. கேமிராவை இயக்கிய நேரம் ஆவேசத்துடன் திரும்பிப் பார்த்த சிப்பாயையும், அம்மாவைக் கொடுமைப்படுத்திக் கொண்

டிருந்த மற்ற சிப்பாய்களையும் உடனே அடையாளம் புரிந்தது. அத்தனை பேரும் பாகிஸ்தானிய சிப்பாய்கள்.

''நோ... நான் நம்ப மாட்டேன். யூ ஆர் சீட்டிங் மீ! இது நீங்கள் செய்யும் தந்திரம்!'' — அமீர் ஜவஹரின் குரல் எலி உண்ணாத பூனையின் குரல் போல் மெலிந்திருந்தது.

இத்தனை நேரம் பாறையாக இருந்த வனை அந்தப் போட்டோக்கள் மிருதுவாக்கத் துவங்கியிருந்ததைக் கர்னல் கவனித்தார்.

''நீ நம்ப வேண்டாம். போட்டோக்களில் எத்தனையோ திருட்டுத்தனங்கள் செய்ய முடியும் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். போர்க்களத்திற்கே சென்று போட்டோ எடுத்த அந்த பெங்காலி பத்திரிகை நிருபன் பொய். அவன் பட்ட அடிகள், காலில் வாங்கிய குண்டடி எல்லாம் பொய். ரைட். நீ என்னை நம்ப வேண்டாம். இந்த போட்டோவை நம்ப வேண்டாம். ஆனால் அமீர்... பதினெட்டு வருடங்களுக்கு மேலாக உன்னைப் பார்க்க வேண்டும் என்று இந்தியாவில் ஒருவர் காத்திருக்கிறார். அவரை நீ அவசியம் பார்க்க வேண்டும்!''

அச்சுதன் அமீர் ஜவஹரை நெருங்கி ஆல்பத்தை வாங்கிக் கொண்டான்.

தூரத்தே வளைந்த வானம். அதில் சலவை செய்யும் சூரிய சலவைக்காரன். வழி தவறிய மேகங்கள். மேகங்களுக்கு மேலே பறந்த இந்தியன் ஏர்லைன்ஸின் அலுமினியப் பட்சி.

மாருதி வேன் சீரான வேகத்தில் கன்னாட் பிளேஸை நெருங்கியது.

மையத்திலிருந்த நந்தவனத்தைச் சுற்றி வட்டமிட்டு, சூரிய கிரணங்கள் போல் பிரிந்த தார் ரஸ்தாக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விரைந்தது. இன்னும் சில இடது வலதுகளில் திரும்பி ஒரு சிறிய வீட்டின் முன் நின்றது.

வார்ப்பிரும்புக் கிராதிகள். கேட்டிற்குப் பின்னே கறுப்புத் தாரிட்ட பாதை. நிழலை இறைப்பதற்காகப் பந்தலிட்டு நின்ற கரும் பச்சை மரங்கள். சமமில்லாத ஈரப் புல் தரை. பட்டை பட்டையாகத் திறக்கக்கூடிய அமைப்பில் மரக் கதவு. மஞ்சள் மங்கிய சுண்ணாம்புச் சுவர்கள். களையிழந்த கண்ணாடிகளைக் கொண்ட ஜன்னல்கள்.

வேனிலிருந்து அச்சுதன் அவசரமாக இறங்கிச் சக்கர வண்டியில் கர்னல் அருள்தாஸை அமர்த்தினான்.

அமீர் ஜவஹரின் மனத்தில் இருப்புக் கொள்ளாத ஓர் எதிர்பார்ப்பு வியாபித்திருந்தது. தப்பிக்க முயலவில்லை. முயற்சி செய்தால் சுட்டிருப்பார்கள். இல்லையா, சாந்தினியைப் பணயப்பொருளாகப் பயன்படுத்தியிருப்பார்கள். தன்னைச் சுற்றிலும் ஒரு மாயக் கூண்டு பின்னப்படுவது போல் ஒரு வேதனை. அந்த வீட்டில் அவனை எதிர்கொள்ள ஏதோ சோகம் காத்திருக்கிறது என்ற உள்மன வண்டின் ரீங்காரம்.

கதவு தட்டப்பட்டு ஒருவன் திறந்தான். கர்னலைப் பார்த்ததும் வயதாகிச் சுருங்கிப் போன முகத்தில் மேலும் சுருக்கங்களுடன் காவிப் பற்களைக் காட்டி வசீகரமாகச் சிரித்தான்.

உயரமான கூரை. அங்கங்கே ஒட்டியிருந்த ஒட்டடை. நாட்டிய முத்திரைக்கு வளைந்த கை போல் வளைந்து ஏறிய மரப் படிகள்.

மரப்படிகளின் பின்னே மறைந்திருந்த ஒரு கதவு தட்டப்பட்டுத் திறக்கப்பட்டது. கதவு திறந்தவன் ஒதுங்கி வெளியேறினான்.

''ஜவஹர் வரு...'' என்றான் அச்சுதன்.

அமீர் ஜவஹர் மிகுந்த தயக்கத்துடன் அறைக்குள் நுழைந்தான்.

ஜன்னல் கண்ணாடிகளில் சூரியன் ஏறியிருந்தது. சூரிய வெளிச்சத்தில் தூசு மின்மினிக்களைப் போலப் பறந்தது. சதுரமான அறையின் மூலையில் சுவரை ஒட்டிப் போடப்பட்டிருந்த கட்டிலில் போர்வை அசைந்தது. நெளிந்தது. ஒருக்களித்து ஒரு முகம் திரும்பி அவர்களைப் பார்த்தது.

சக்கர நாற்காலியின் கிய்ங்க், கிய்ங்க் அந்த முகத்தில் பிரகாசத்தைக் கொண்டு வந்தது.

''சலீம்'' என்று கர்னல் அழைத்தார். அவர் குரலில் இவ்வளவு கருணையா?

அந்த மனிதருக்கு ஐம்பது வயதிருக்கலாம். அதற்குள் இமைகள் கூட நரைத்துப் போயிருந்தன. கசக்கிய காகிதத்தைப் போல முகத்தில் சுருக்கங்கள்.

''யார் வந்திருக்கிறது பார் சலீம்.''

அந்தக் கண்கள். அவற்றை நான் எங்கோ பார்த்திருக்கிறேன். அமீர் ஜவஹர் சலீமால் இழுக்கப்பட்டான். கட்டிலை நெருங்கினான்.

போர்வைக்குள்ளிருந்து ஒரு தோல் போர்த்திய கை நீண்டது. எலும்பு விரல்கள்

''பொரிசோட வந்திருக்கேன், சார்!''

''பொரிசா...? எதுக்கு...? ''

''கொஞ்சம், 'குறைச்ச' சம்திங் வாங்கிப்பீங்கன்'னுதான்...!''

— ஆர். அப்துல் சலாம்



அமீர் ஜவஹரைத் தொட்டன.

''அமீர்'' என்றார் அந்த மனிதர். வேற்று கிரகத்திலிருந்து வருவது போல் உள்ளடங்கிய குரல். ''என்றாவது ஒரு நாள் உன்னை அழைத்து வந்து காட்டுவதாகக் கர்னல் சொல்லிக் கொண்டிருந்தார். உன்னைப் பார்க்கும் போது அப்படியே உன் அம்மாவைப் பார்ப்பது போல இருக்கிறது.''

அமீர் ஜவஹர் அவரைக் குழப்பமாகப் பார்த்தான். மிகவும் பரிச்சயப்பட்டவரைப் போலத் தோன்றிய அவர், கொஞ்சம் கூட அடையாளம் காண முடியாதவர் போலவும் இருந்தார்.

''என்னை மறந்து விட்டாயா அமீர்? மறந்திருக்கும். மூன்று வயதில் பிரிந்தவனுக்கு எப்படி நினைவிருக்க முடியும்?''

அமீர் ஜவஹர் அவரிடமிருந்து பார்வையை விலக்கி கர்னல் அருள்தாஸைக் கேள்வியாகப் பார்த்தான்.

''உன் அப்பா.''

அமீர் ஜவஹரின் உடல் சிலிர்த்தது. சலீமின் விரல்கள் அவன் விரல்களைக் கோர்த்து நெரித்தன. அருகே இழுத்தன.

அமீர் ஜவஹர் கட்டிலில் போர்வைக் குவியலுக்குப் பக்கத்தில் அமர்ந்தான். அவனுள் நம்பிக்கையும், நம்பிக்கையின்மையும் அலைமோதின.

அப்பா!

அப்பா என்றால் அவனுக்கு ஒரே ஒரு காட்சிதான் நினைவுக்கு வரும்.

அது சூரிய வெளிச்சம் அறையும் ஒரு முற்றம். அந்த முற்றத்தில் அவனைத் தோள் மேல் சுமந்து, அவன் இரு கால்களையும் மார்பில் மோத விட்டு, 'யா அல்லாஹ்' என்று மகிழ்ச்சிக் கூத்தாடும் அப்பா. அப்படி அவர் கூத்தாடும் போது, அவனுடைய அடித் தொடையை உறுத்தும் அவருடைய மேல் முதுகின் மரு.

''நான் சாகவில்லை'' என்றார் சலீம் வேதனையான சிரிப்புடன்.

அமீர் ஜவஹர் அவருடைய கழுத்திற்குக் கீழே கைகொடுத்து அவரை மெல்ல உட்கார வைத்தான்.

''அப்பா'' என்றான்.

நிஜமாகவே என் அப்பாதானா? அப்பாதான். அப்பாதான்! இத்தனை வருடங்களுக்குப் பின்னால், அன்னிய தேசத்தில், விரும்பத்தகாத சூழ்நிலையில் இப்படி ஒரு சந்திப்பா? அவன் கண்களில் நீர்த் திரை.

''கர்னல்...'' என்றார் சலீம் தழுதழுத்த குரலில். ''என் மகனுடன் நான் தனியே பேசலாமா கர்னல்?''

கர்னல் அச்சுதனின் முகத்தைப் பார்த்தார்.

அச்சுதன் அவர் உட்கார்ந்திருந்த சக்கர வண்டியைக் கதவை நோக்கி உருட்டினான்.

சலீம் விரல்களை உயர்த்தி 'அமீர்

உங்கள் அரசியல் ஞானம் எப்படி...?

1. இந்திய அரசியலில், லாட்டரிச் சீட்டு ஊழல் காரணமாய்ப் பதவி விலகிய முதலமைச்சர் யார்?
2. இதுவரை மிக அதிக தடவை பிளவு பட்டுள்ள அரசியல் கட்சி எது?
3. 1980 இல் இந்திய சரித்திரத்திலேயே முதல் தடவையாய் ஜனதா மந்திரி சபையை அப்படியே காங்கிரஸ் மந்திரிசபையாய் மாற்றிய முதல் அமைச்சர் யார்?
4. மொத்த எண்ணிக்கையான 218 சட்டமன்ற தொகுதிகளில் 216 இல் போட்டியிட்டு அனைத்திலும் தோற்ற கட்சி எது?
5. அந்துலே பதவி விலகக்காரணமான ஊழல் எது சம்பந்தமானது?
6. ஹரிஜனங்கள் படுகொலை, பத்திரிகையாளர்களைப் பயமுறுத்திப் பழிவாங்குவது — இவற்றில் முன்னணியில் உள்ள மாநிலம் எது?
7. ''திட்டக்கமிஷன் என்பது கோமாளிகளின் கூட்டம்'' இப்படிச் சொன்ன அரசியல் தலைவர் யார்?
8. அரசாங்கத்தின் சிவப்பு நாடா முறையினால் **சாமானியன்** எவ்வளவு தூரம் பாதிக்கப் படுகிறான் என்று எடுத்துக் காட்டி, தேசிய விருது பெற்ற படம் எது?
9. ஒரே தொகுதியிலிருந்து அதிகபட்ச தடவை தேர்ந்தெடுக்கப் பட்டுச் சாதனை படைத்த எம். பி. யார்?
10. எம். ஜி. ஆரால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட எஸ். டி. சோமசுந்தரம் ஆரம்பித்த கட்சியின் பெயர் என்ன?
11. மத்திய மந்திரி உன்னி கிருஷ்ணன் எந்த கட்சியைச் சேர்ந்தவர்?
12. மத்திய மந்திரிகள், டி. வி. யில் பொது மக்களின் கேள்விகளுக்கு நேருக்கு நேர் பதில் சொல்லும் நிகழ்ச்சியின் பெயர் என்ன?

விடைகள் 22ம் பக்கம்





அரசியல் குவிஸ் விடைகள்:

1. அர்ஜுன் சிங்
2. காங்கிரஸ்
3. பஜன் லால்
4. ஆந்திராவில், பாஸ்கர ராவின் கட்சி (பிரஜாஸ்வம்ய தெலுங்கு தேசம்)
5. சிமெண்ட்
6. பீகார்
7. ராஜீவ் காந்தி
8. தபரணகதா
9. ஜகஜீவன் ராம் (சசராம், பீகார்)
10. நமது கழகம்
11. காங்கிரஸ் (எஸ்)
12. ஜனவாணி

தொகுப்பு: மௌஷ்மி.

ஜவஹரின் பழசாகாத சருமத்தை வருடினார். அவர் கன்னங்கள் இரண்டிலும் உப்பு நீர்ப் பயணம்.

''உன்னைப் பார்ப்பதற்காகத்தான் உயிரைக் கையில் பிடித்து வைத்திருந்தேன் பேட்டா. சாந்தினி எப்படி, எப்படியிருக்கிறாள்?''

''அப்பா... நீங்கள்... இந்தியர்களால்... அடிபட்டு...''

''இல்லை... இல்லை. இந்தியர்கள் இல்லை. இந்தியர்கள் இல்லை'' என்று தலையை அசைத்து அசைத்துப் பேசினார் சலீம். ''நான் சாகக் கிடந்தேன். சாகவில்லை அமீர். சாகவில்லை. பங்களாதேஷின் சுதந்திரத்திற்காகப் போராடிய முக்தி பாஹினி அமைப்பில் நானும் இருந்தேன் அமீர். பாகிஸ்தான் நம்மைக் கொடூரமாகத் தாக்கியது. பாகிஸ்தான் சிப்பாய்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள்.. அவர்கள்.. ஒநாய்களாக மாறியிருந்தார்கள். வீட்டிற்கு வீடு புகுந்து அடுப்பையும், பாத்திரங்களையும், கண்ணாடிகளையும் நொறுக்கினார்கள். பெண்களை இழுத்து அவமானப்படுத்தினார்கள். கோழை ஆண்களைத் துரத்திக் கொன்றார்கள். அந்த நாள் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது அமீர்.''

அவருடைய மூச்சு அதிகப் பேச்சினால் தவித்தது.

''உன் அம்மா நமக்கெல்லாம் சமைத்து வைத்து, அடுப்பை அணைத்திருந்தாள். நான் முற்றத்தில் உன்னைத் தோளில் சுமந்திருந்தேன். சாந்தினி தரையில் சிரித்துக் கொண்டு, நிலா போல் தவழ்ந்து கொண்டிருந்தாள். அவர்கள் நான்கு பேர். கதவை 'பயனெட்'டால் உடைத்துத் திறந்தார்கள். உன் அம்மாவின் மேல் பாய்ந்து.. அவளை..'' அவருடைய மெல்லிய குரல் விசும்பியது. திக்கியது. தயங்கியது.

''அப்பா'' என்று அமீர் ஜவஹர் அவருடைய கையை இறுகப் பற்றிக் கொண்டான். அவனுடைய இதயத்தில் ஒரு பெரிய மலைப் பிஞ்சு ஏறி அமர்ந்தது.

''நான் உன்னைக் கீழே இறக்கி விட்டு, ஒரு விறகுக் கட்டையைத் தூக்கினேன் — அவர்களை எதிர்க்க. அவர்கள் துப்பாக்கியைத் திருப்பி அடித்தார்கள். பயனெட்டால் குத்திக் கிழித்தார்கள். வாசல் மிதியடி போல் நினைத்து ஒவ்வொருவரும் மிலிட்டரி பூட்ஸோடு என் மேல் ஏறி நடந்தார்கள். நான் மயங்கிப் போயிருந்தேன்...

''என்னைக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கண்டு எடுத்தது இந்தியர்கள்தான். தேடிய போது நீங்கள் இரண்டு பேரும் இல்லை. பாகிஸ்தான் ஆர்மியைச் சேர்ந்த யாரோ உங்களைத் தூக்கிப் போனதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள்...

''இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டேன். அகதிதானே என்று என்னை அநாதையாக்கி விடவில்லை இந்திய அரசாங்கம். முறிந்த எலும்புகளை ஒன்று சேர்த்து வைத்தார்கள். எனக்குத் தேவைப்பட்ட ரத்தத்தைக் கொடுத்தார்கள். நான் எப்படியோ பிழைத்துக் கொண்டு விட்டேன்... இப்போது என் உடலில் இந்த மண்ணின் ரத்தமும் கலந்திருக்கிறது.''

''அப்பா..!''

''நீ இந்தியாவிற்கெதிராக ஒற்று வேலை செய்ய வந்திருக்கிறாயாமே, அமீர், நிஜமா?''

அமீர் ஜவஹர் தலையைக் குனிந்து கொண்டான்.

''வேண்டாம் அமீர். இந்தியா உன் தந்தையைக் காப்பாற்றி இருக்கிறது. உன் நாட்டையே காப்பாற்றி இருக்கிறது. உன் தாய் நாடு பங்களாதேஷ்தான். பாகிஸ்தான் இல்லை...''

அமீர் ஜவஹர் அப்பாவின் விரல்களை விலக்கி விட்டு மெல்ல எழுந்தான். அறையை விட்டு வெளியே வந்தான். கர்னலைப் பார்த்துச் சொன்னான்:

''கர்னல், உள்ளே வாருங்கள். நான் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்.''

(தொடரும்)

சுஜாதா

சுதாகர் கடிதம் எழுதியிருந்தான்.

அன்புள்ள திவா,

இந்தக் கடிதம் கண்டதும் உடனே நீ புறப்பட்டு வந்து அம்மாவை அழைத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு 'டெபுட்டேஷனில்' செல்லும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. பாலா கூட வரப் போவதால் அம்மாவைப் பார்த்துக் கொள்ள இங்கே ஆளில்லை. அதனால் இந்தக் கடிதம் கண்டவுடன் கூடிய சீக்கிரம் தவறாமல் புறப்பட்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் திரும்பி வந்தவுடன் அம்மாவை அழைத்துக் கொண்டு விடுவேன்.

அங்கு சித்ரா, குழந்தைகள் சௌக்கியம் என நம்புகிறேன்.

அன்புடன்,
சுதா.

திவாகர் தன் மனைவியிடம் கடிதத்தைக் காட்டுவதற்குத் தக்க சந்தர்ப்பத்தை யோசித்தான். காலை சித்ரா ரொம்ப பிஸியாக இருப்பாள். குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் பண்ண வேண்டும். இவனுக்கு எட்டரைக்குச் சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும். அதற்குச் சமையல் மற்றும் ப்ளாஸ்கில் காப்பி; பிள்ளைகளுக்கு வெண்ணெய் தடவிய ரொட்டி; பாட்டிலில் தண்ணீர் அனைத்தும் அனுப்பி முடித்துச் சோர்ந்து விடுவாள். கோபம் கோபமாக வரும். காலை வேண்டாம். மத்தியானம் ஆபீஸிலிருந்துமாடி வீட்டுக்கு போன் பண்ணிக் கூப்பிடலாம். ஆனால் மற்றவர் போனில் இந்த சமாசாரத்தை விவரமாகப் பேச முடியாது மாலை குழந்தைகள் திரும்பி வந்து டிபன் கோக்கோ அட்டகாசம். இரவு படுத்த நிமிஷமே அசதியில் தூங்கிப் போய்



தாய்-2

விடுவாள். எப்போதுதான் சொல்வது?

இன்று வெள்ளிக்கிழமை. கோவிலுக்குப் போவார்கள். அப்போது சொல்லத் தீர்மானித்தான். அர்ச்சனை பண்ணிவிட்டுக் கற்பூர வெளிச்சத்தில் அம்மனிடம், "தாயே! இப்படியே வெச்சிரும்மா போதும்"னு மாங்கல்யத்தில் சித்ரா மஞ்சள் தொட்டுக் கொண்ட போது சொன்னான்: "அண்ணா லெட்டர் எழுதியிருக்கான்."

"என்னவாம்? உங்கம்மாவை இங்கே 'டம்ப்' பண்ணப் போறார் அதுதானே?" அந்த வார்த்தை அவனுக்குக் கோபம் உண்டாக்கினாலும் சண்டை போட இது தருணமல்ல. இவள் ஒத்துழைப்பு வேண்டும்.

"அவன் ஃபாரின் போகப் போறானாம். டெபுட்டேஷன் முடிந்த கையோட திருப்பி அழைச்சுக்கறேன்னு..."

துவஜஸ்தம்பத்தின் அருகில் நின்று திரும்பி அவனைப் பார்த்து, "வருஷா வருஷம் இதையேதான் சொல்லிண்டிருக்கார் உங்க தமையனார். ஏதாவது ஒரு சாக்கு. அவர்தான் டெபுட்டேஷன் போறார். அவ? அவ டில்லிலதானே இருக்கப் போறா?"

"அவளும் போறாளாம் கூட."

"அதனால?"

"அம்மா வேற எங்கே போவா சித்ரா?"

"உங்க அம்மாவையும் 'டெபுட்டேஷன்' கூட்டிண்டு போகச் சொல்லுங்கோ!"

"நடக்கிற காரியமா அது? என்ன?" என்றான் கோபத்தை விழுங்கிக் கொண்டு.

"எது எப்படியோ உங்க அம்மாவை அத்தனை சீக்கிரம் கூப்பிட்டு வெச்சுக்க நான் தயாராக இல்லை. வீட்டில வேலை எனக்கு இடுப்பு ஒடியறது. அவர் வேறு வந்து ஒரு நாள் கோதுமைச் சாதம் ஒரு நாள் பயத்தம் கஞ்சின்னு என்னால மன்னாட முடியாது. போய்ப் பதினஞ்சு நாள் கூட ஆகலை, உடனே அனுப்பறேன்னா என்ன அநியாயம்!"

"ஒண்ணரை மாசம் ஆச்சு சித்ரா."

"சரி! வருஷத்திலே ஒண்ணரை மாசம் தான் அந்த பாலாமணி வெச்சுப்பாளாமா? அப்புறம் அவா ஃபாரின் போய்டுவா, நான் பதினோரு மாசம் லோல் படணும்."





இப்போதே எழுதுங்கள்
மத்யமர் — வாசகர்
விமர்சனப் போட்டி!

'தாய்' — II இன்னொரு பரிமாணத்தில் தாயைப் பற்றி எழுதியிருக்கிறார் சுஜாதா. இக்கதை உங்களை ஏன் கவர்ந்தது? எப்படி பாதித்தது....? அஞ்சலட்டையில் எழுதிக் கல்கி அலுவலகத்துக்கு உடனே அனுப்புங்கள்.

பிரசுரமாகும் விமர்சனங்களுக்கு ரூ. 25 பரிசு. மிகச் சிறந்த விமர்சனத்துக்கு ஐம்பது ரூபாய்!

முடிவு தேதி: 30.8.90.

"இப்படியெல்லாம் ஒரு கணக்கா, சித்ரா?"

"பாருங்கோ! எனக்கு உங்கம்மாவை வெச்சுக்கறதுக்கு ஆட்சேபணை இல்லை. வருஷத்தில ஆறு மாசம்னா சரி. வருஷம் முழுக்க இல்லை! இந்த ட்ரிக் அவா வருஷா வருஷம் பண்றா. நீங்களும் அசமஞ்சம் மாதிரி ஒப்புத்துக்கறீங்க!"

திவா மௌனமானான். யோசித்துப் பார்த்தால் பெரும்பாலும் அம்மா இவனிடம் இருந்திருக்கிறாள். இந்த டெபுட்டேஷன் அஸ்திரத்தை மூன்றாவது முறை பிரயோகிக்கிறான் சுதாகர். சித்ரா சொல்வதில் உள்ள பாழாய்ப் போன நியாயம் தெரிகிறது. ஆனால் அதற்கெல்லாம் இந்த உறவுப் பிணைப்புக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டுமா? அம்மா எத்தனை முறை சொல்லியிருக்கிறாள்: "என்னை இப்படி அல்லாட வெக்காதீங்கடா! யாராவது ஒருத்தன்கிட்டே பர்மனண்ட்டா இருந்துடறேன். இன்னும் கொஞ்ச நாள்ப்பா...!"

"பாருங்கோ இந்தத் தடவை கட் அண்ட் ரைட்டாச் சொல்லிடுங்கோ. இப்ப இல்லை! அவ்வளவுதான்! குடுகுடுன்னு போய் அழைச்சுண்டு வந்துடாதீங்கோ. இருபத்து நாலு மணி நேரமும் சிசுருஷை பண்ண த்ராணி இல்லை எனக்கு."

"என்ன சித்ரா நீ! அவ என்ன கேக்கறா?"

"உங்களுக்குத் தெரியாது. நீங்க பாட்டுக்கு ஆபீஸ் போயிடுவீங்க. உங்கம்மா வரிக்கு வரி சொல்லிக் காட்டுவா. பாலா மணின்னா ஒஸ்தி. நைசா வாழைப்பழத்தில ஊசி ஏத்தறா மாதிரி என் குழந்தைகளைக் கிண்டல் பண்ணுவா! அன்னிக்கு விசிறிக் கட்டையை உங்கள்ட்ட எடுத்துக் கொடுத்தாளோ என்னை அடிக்கிறதுக்கு?"

"பொய்!"

"உங்களுக்குப் பழசெல்லாம் ஞாபகமே இருக்காது. எதுக்குத் தர்க்கம் பண்ணணும்? சொல்லிட்டேன்! ஜூன் மாசம் போனா... இனிமே ஜனவரி மாசம் கூட்டிண்டு வாங்கோ, வெச்சுக்கலாம்!"

"இப்படிச் சொல்லிட்டா எப்படி?"

"இப்படித்தான்."

அதற்கப்புறம் அவர்கள் மௌனமாக வீட்டுக்கு நடந்தார்கள்.

மறுநாள் ஆபீசில் சுதாகரிடமிருந்து போன் வந்தது. "லெட்டர் கிடைச்சுதா?"

"என்ன லெட்டர்?"

"அம்மாவை அழைச்சுண்டு போக..."

"ஓ, அதுவா? அது இப்ப சௌகரியமில்லை, சுதா..."

"என்ன சௌகரியமில்லை! நான் டெபுட்டேஷன்ல போகணும்பா!"

"ஒவ்வொரு தடவையும் நீ இதையேதான் சொல்லிண்டிருக்கே!"

"திவா! நாம நம்ம பொண்டாட்டி பேச்சைக் கேக்க வேண்டாம். நமக்குள்ள இதை ஸார்ட் அவுட் பண்ணலாம் என்ன?"

— அவன் கோபம் ட்ரங்க் காலிலும் தெளிவாக ஒலித்தது.

"இந்தத் தடவை நிச்சயமா டெபுட்டேஷன் லெட்டரே வந்திருக்கு. மணிலாவுக்கு. வேணா அந்த லெட்டரை ஜெராக்ஸ் எடுத்து அனுப்பட்டுமா?"

"அதெல்லாம் வேண்டாம்."

"எப்ப வர்றே?"

"பார்க்கலாம்."

"நான் கொண்டு வந்து விடணுமா? சொல்லு."

"இல்லை."

"நீ என்ன பண்றே உடனே சென்ட்ரல் போய்..."

"பார்க்கலாம்" என்று போனை வைத்து விட்டான். சற்று நேரத்தில் அது மறுபடி ஒலித்தது. "ஸார் உங்க பிரதர்."

"என்ன?"

"என்ன பதில் சொல்லாம வெச்சுட்டே, கட்டாயடுத்தா?"

"அதான் பேசியாச்சே."

"அப்ப என்னிக்கு வர்றே. நான் வேணா டிக்கெட் வாங்கி அனுப்பவா. இங்கிருந்து ரிஸர்வ் பண்ணலாம்."

"வேண்டாம்."

"அப்ப டிக்கெட் வாங்கினப்புறம் போன்

பண்றயா, ஸ்டேஷனுக்கு வர்றேன்.''

''ம்.''

சாயங்காலம் வீட்டுக்குப் போனபோது ''என்ன சொன்னார் உங்க பிரதர்?'' என்றாள் சித்ரா.

''ஏன்?''

''அந்த ராணி — மேனா மினுக்கி — எனக்கு போன் பண்ணியிருந்தா மாடி வீட்டில். 'சித்ரா டார்லிங் ஒரு ரெண்டு மாசத்துக்குப் பார்த்துண்டா போதும் நான் திரும்பி வந்துடுவேன். வந்த உடனே அம்மாவை அனுப்பிச்சுடலாம்...' என்ன பொய்யி! போன தடவையும் இதேதான் சொன்னா. இதோ வந்திடுத்து ஆர்டர்; இதோ இந்த நிமிஷம் கிளம்பறோம்னு எல்லாம் பொய்யி! அண்ணா என்ன சொன்னார்?''

''இதேதான். நான் ஒண்ணும் பிடி கொடுத்துப் பேசலை.''

''பிடி என்ன பிடி? மாட்டேன் முடியாதுன்னு நேராச் சொல்றது!''

''எங்கே போவா சித்ரா? அர்த்தமில்லாம பேசறியே. எங்க ரெண்டு பேரை விட்டா அவளுக்கு வேற யார் இருக்கா, சித்ரா! வயசான காலத்தில அவளை இப்படி அல்லாட வைக்கறது ரொம்பத் தப்பு இல்லையா? என்ன இன்னும் கொஞ்ச நாள் இருக்கப் போறா...''

''நீங்க சொல்றது அத்தனையும் உங்க அண்ணாவையும் மன்னியையும் கேக்க வேண்டியது! என்ன அப்படி டெபுட்டேஷன்? என்ன அவசரம்? ஒரு நாலு மாசம் கழிச்சுப் போகட்டுமே இவ? இந்த டெபுட்டேஷன்கிறதே ஒரு ட்ரிக்கு! மறுபடி அம்மாவை நம்மகிட்ட அனுப்ப ஒரு ஏற்பாடு! இந்தத் தட்வை நீங்க மசியக் கூடாது! நான் மாட்டேம்பா.''

''என் மனைவி விளம்பரம் கொடுத்திருக்கா! வீட்டை விட்டு ஓடி வந்த நான் உடனே வீடு திரும்பணுமாம்!''

''ஓ! உங்க பிரிவைத் தாங்க முடியலையாமா?''

''ஊஹூம்! ஹோட்டலில் சாப்பிட்டுக் கட்டுப்படியாகலையாம்!''

— வேதபுரி எஸ். இரமேஷ்.



''வேணும்னா ஓர் ஆள் போட்டுக்கலாம்.''

''ஆளா! பணம் கொட்டிக் கிடக்கா இங்கே?''

''அண்ணாவை அனுப்பச் சொல்றேன்.''

''உங்கண்ணாவா? ஹ! ஆளும் வேண்டாம், தேளும் வேண்டாம். உங்க அம்மாவும் வேண்டாம்! இந்த ஏமாத்து வேலையை, தலையில மிளகாய் அரைக்கிறதை அவா நிறுத்தியே ஆகணும்.''

திவாகருக்குச் செய்வது என்ன என்று தெரியவில்லை. அண்ணா கொஞ்ச நாள் பார்த்து விட்டுச் சட்டென்று கொண்டு விட்டு விடுவான்... எப்படியாவது சித்ராவைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பேசிப் பேசிச் சம்மதிக்க வைக்க வேண்டும். அதற்கு வெங்கடேச மாமாதான் சரி, என்று கோட்டைக்கு போன் செய்தான். ''மாமா, வீட்டில் ஒரு சின்ன க்ரைசிஸ் சாயங்காலம் வர்றீங்களா?''

வெங்கடேசன் அம்மாவுக்குச் சற்றுத் தூரத்து உறவு.

''தாராளமா! என்ன விஷயம் சொல்லு...''

''விவரமா வீட்டில் சொல்றேன். நான கூப்பிட்டதாச் சொல்லாதீங்கோ. சும்மா காஷுவலா வர்றாப்பல வாங்கோ என்ன?''

''சரிப்பா.''

சாயங்காலம் க்வார்ட்டர்லி ரிப்போர்ட் முடிக்க வேண்டியிருந்தது. வீட்டுக்குப் போக ஏழுமணி ஆகிவிட்டது. போனதும்தான் வெங்கடேசமாமாவை அழைத்திருக்கிறோம் என்பது நினைவுக்கு வந்தது.

அவர் கூடத்தில் சோபாவில் உட்கார்ந்து, இருக்கிற பத்திரிகைகளையெல்லாம் படித்து முடித்திருந்தார். மேசையில் காலிக் கோப்பையும் தட்டும் வைத்திருந்தது. சித்ராவையோ குழந்தைகளையோ காணோம்.

''எங்க அவாளெல்லாம்?''

''கோவிலுக்குப் போறேன்னு போயிருக்கா.''

''உங்களைத் தனியா விட்டுட்டா?''

''அதனால என்ன நீ ட்ரஸ் மாத்திண்டு வா!''

திவாகருக்குக் கடும் கோபம் வந்தது. இந்த மாதிரித்தான் பலவிதங்களில் தன் கோபத்தைக் காட்டுவாள். என் வீட்டு மனுஷர்கள் என்றாலே அலட்சியம்தான்.

''சமையலறையில் ஃப்ளாஸ்கில் காப்பி வெச்சிருக்காளாம்'' என்றார் மாமா சகஜமாக. கை கால் முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு, அவர் எதிரே வந்து உட்கார்ந்தான். ''சித்ரா ஏதாவது சொன்னாளா



நமது நாட்டில் மறைந்த அரசியல் தலைவர்களின் நினைவாகச் சிலைகள், நினைவிடங்கள் அமைப்பது தெரியும். ஆனால் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான கென்னடிக்கு இஸ்ரேல் நாட்டில் ஒரு புது வகையான நினைவுச் சின்னம் உருவாக்கினார்கள். ஜூடியா என்ற மலைப் பகுதியில் பத்து லட்சம் மரங்களைக் கொண்ட ஒரு காடு! புதிதாக வளர்க்கப்பட்ட அந்தக் காட்டுக்குக் கென்னடியின் பெயரைச் சூட்டினார்கள்.

— மதுரை எஸ். சாகுல் ஹமீது.

அதைப் பத்தி?''

''சொன்னாளே! சுதாகர் கடுதாசி எழுதி போன் மேல போன் போடறானாம். உங்கம்மாவை அழைச்சுண்டு போறதுக்கு...''

''இவளுக்கு இஷ்டமில்லை மாமா! எப்படி கன்வின்ஸ் பண்றதுன்னே தெரியலை. எங்க அம்மா எங்கே போவா? சொல்லுங்க! அவன் பண்றதும் சரியில்லைதான். ஒரு மாசம் ஒண்ணரை மாசம் வெச்சுண்டுட்டு எங்கிட்ட ஏதாவது சாக்குச் சொல்லி அனுப்பிச்சுர்றான். இவளுக்குக் குழந்தைகளை என்னை, அம்மாவை எல்லாரையும் சமாளிக்கத் திணர்றா!''

''திவா உன் ப்ராப்ளம் இன்னிக்கு இந்தத் தேசத்தோட ஒவ்வொரு குடும்பத்திலயும் இருக்கு... இது இந்தச் சமூகத்தினுடைய மாறுதலால் ட்ரான்ஸிஷன் ப்ராப்ளம் இது. குடும்பம்கிறதுக்கு அர்த்தம் மாறிண்டிருக்கு. கூட்டுக் குடும்பம்கிறது அழிஞ்சுண்டு இருக்கு. இதுக்குப் பல்வேறு காரணங்கள். வீடுகள் அளவில் சின்னதாயிண்டிருக்கு. ஜனங்களுக்குப் பொறுமை குறைஞ்சிண்டிருக்கு. சுயநலம் அதிகமாகி, பெரியவர்களுக்கு மரியாதை குறைஞ்சிடுத்து. எத்தனையோ காரணங்கள்...

''ஆனா உன் கேஸ்ல, அதிர்ஷ்டவசமாப் பிரச்னைக்கு உன்னையும் உன் அண்ணனையும் மீறின ஒரு தீர்வு கிடைக்கும் போல இருக்கு.''

''என்ன சொல்றீங்க, புரியலை?''

''உங்கம்மா தனியா இருக்கத் தீர்மானிக்கலாம்.''

''எப்படி? எங்க?''

''எங்க வேணும்னா! ஒரு சமையற்காரி, ஒரு வேலைக்காரனைப் போட்டுண்டு ஒரு வீட்டை எடுத்துண்டு நிம்மதியா இருக்கலாம்.''

''என்ன பேத்தறீங்க? அதுக்குப் பணம் எவ்வளவு ஆகும் தெரியுமா, மாசம்?''

''ரெண்டாயிரமா? மூவாயிரமா? ஐயாயிரமா?''

''அம்மாவுக்கு ஃபேமிலி பென்ஷன் எவ்வளவு வருது தெரியுமா. அறுநூறு ரூபாய்!''

''அதை நான் சொல்லலை. உங்கம்மாவுக்குத் தாத்தா வழியா ஒரு சொத்து ரொம்ப நாள் லிட்டிகேஷன்ல இருந்தது. என் கஸின் லேட் துரைசாமி, உங்கம்மாவுடைய பிரதர், அவனுடைய ஸன்ஸ் ரெண்டு பேர். அவர்களையெல்லாம் உனக்குப் பழக்கமில்லை. அவங்க ரெண்டு பேரும் அவங்க சித்தப்பா ஸ்ரீனிவாசன் மேல கேஸ் போட்டு, சுப்ரீம் கோர்ட்டு வரை போச்சு. அது இப்பத்தான் தீர்ப்பாயிருக்கு. பிதுரார்ஜித சொத்தாயிருக்கிறதாலயும் தாத்தா 1960லதான் இறந்ததாலயும் பெண் வாரிசான உங்கம்மாவுக்குப் பங்கு உண்டுன்னு தீர்ப்பாகியிருக்கு. அதுக்கு டிக்ரி வாங்கிண்டா உங்கம்மாவுக்குப் பணம் குறைந்த பட்சம் எட்டு லட்சமாவது வரும். அக்கடான்னு திருச்சிராப்பள்ளியில் ஒரு வீட்டை எடுத்துண்டு வேலைக்காரன் சமையல்காரனை வெச்சுண்டு இரண்டு பிள்ளைங்களுக்கும் தொந்தரவில்லாம இருக்கலாம். உங்க பிரச்னை தீர்ந்து போச்சு திவா. உங்கண்ணன் டெபுடேஷன்ல போகலாம். நீயும் நிம்மதியா இருக்கலாம்.''

''இது சுதாகருக்குத் தெரியுமா, மாமா?''

''நான் இன்னும் எழுதலை. நேத்திக்குத் தானே தீர்ப்பு ஆகியிருக்கு. ஒருவேளை நரசு சொல்லியிருக்கலாம். அவன் டில்லியிலே தானே இருக்கான்.''

''பக்காவா இது?''

''ஆமாப்பா. நீ எப்ப வந்தே?'' என்றார் உள்ளே வந்த சித்ராவைப் பார்த்து.

''அப்பவே வந்துட்டேன் பேசிண்டு இருக்கேளேன்னு டிஸ்டர்ப் பண்ணலை.''

''மாமா, நான் இதைப் பத்தி விவரமாச் சுதாகருக்கு லெட்டர் எழுதிடறேன். நீங்க சொன்னது நல்ல யோசனை.''

''என்ன யோசனை?'' என்றாள் சித்ரா.

சொன்னான்.

ராத்திரியே மவுண்ட் ரோடு டெலிகிராப் ஆபீசுக்குப் போய் அண்ணனுக்குத் தந்தி கொடுத்தான்.

STARTING BY TOMORROW'S GRAND TRUNK TO TAKE MOTHER. — DIVAKAR.

வீட்டுக்குத் திரும்பி வந்த போது அவனுக்குத் தந்தி காத்திருந்தது.

CHANGED MY PLANS REGARDING DEPUTATION. MOTHER STAYS WITH US. — SUDHAKAR.

சிவகாமியின் சபதம்

ஏழாம் அத்தியாயம்

நிலா முற்றம்

திருவெண்காட்டு...

திரு யனரிடமும் சிவகாமியிடமும் விடை பெற்றுக் கொண்ட பிறகு மகேந்திர சக்கரவர்த்தியும் மாமல்லரும் குதிரைகளைத் திருப்பி அதிவேகமாய் விட்டுக் கொண்டு போய், அரண்மனையை அடைந்தார்கள். அவர்களைக் கண்டதும் அரண்மனை வாசலில் காவல்புரிந்து கொண்டிருந்த வீரர்கள், ''வாழ்க! வாழ்க! சக்கரவர்த்திப் பெருமான் வாழ்க! மாமல்ல மகா வீரர் வாழ்க!'' என்று கோஷித்துக் கொண்டு அவர்களுக்கு வணங்கி வழிவிட்டு நின்றார்கள். காவலர்களுடைய வாழ்த்து ஒலியுடன் அங்கே வரிசை வரிசையாக நின்ற குதிரைகளின் கனைப்பு ஒலியும் சேர்ந்தது. அரண்மனை முன் வாசலைத் தாண்டி அவர்கள் உள்ளே நுழைந்ததும் அங்கேயிருந்த விசாலமான நிலா முற்றத்தில் வீரர்கள் பலர் அணிவகுத்து நிற்பது தெரிந்தது. சக்கரவர்த்தியையும் குமார பல்லவரையும் கண்டதும் அந்த வீரர்களும் ஜயகோஷம் செய்தார்கள். எல்லோருக்கும் முன்னால் நின்ற ஒருவர் மட்டும் தனியே பிரிந்து முன்னால் வந்து பணிவுடன் நிற்க, சக்கரவர்த்தி அவரைப் பார்த்து, ''சேனாபதி! தூதர்களுக்கு எல்லா விஷயமும் சொல்லியாகி விட்டதா! புறப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

''ஆம், பிரபு! எல்லோருக்கும் சொல்லியாகிவிட்டது. அவரவர்களும் இன்னின்ன திக்குக்குச் செல்ல வேண்டுமென்று தெரிவித்து விட்டேன். எல்லாரும் கிளம்ப ஆயத்தமாய்த் தங்களுடைய கட்டளைக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்று சேனாபதி கூறினார்.

சக்கரவர்த்தி நரசிம்ம வர்மரைப் பார்த்து, ''குழந்தாய்! உன் தாயார் கவலையுடன் இருப்பாள். அவளிடம் சென்று விஷயம் இன்னதென்று தெரியப்படுத்து. இருவரும் போஜனத்தை முடித்துக் கொண்டு, மேல் மாடத்துக்குச் செல்லுங்கள். இந்தத் தூதர்களை அனுப்பிவிட்டு நானும் அங்கு வந்து சேருகிறேன்'' என்றார்.

வெகுகாலம் சமணராயிருந்த காரணத்தினால் சக்கரவர்த்தி இரவில் போஜனம் செய்வதில்லை. சைவரான பிறகும் அவர் இரவில் உணவு அருந்தும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை.

''ஆகட்டும், அப்பா! இதோ போகிறேன். ஆனால், எல்லாப் படைகளும் வந்து சேரும் வரையில் காத்திருக்க வேண்டுமா? ஆயத்தமாயிருக்கும் படைகள் உடனே போருக்குப் புறப்படலாமல்லவா?''

சக்கரவர்த்தி புன்னகையுடன், ''அதைப் பற்றி யோசிக்கலாம். குழந்தாய்! நீ இப்போது தாயாரைப் போய்ப் பார்!'' என்றார்.

மாமல்லர் போன பிறகு, மகேந்திரர் சேனாபதியைப் பார்த்து, ''கலிப்பகையாரே! தூதுவர்களிடம் சொல்லி அனுப்ப வேண்டிய செய்தி இது: தொண்டை மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் உள்ள ஒவ்வொரு கோட்டத்திலும் ஆயிரம் வீரர் அடங்கிய படைகளைத் திரட்டி ஆயத்தமாய் வைத்திருக்க வேண்டியது. மறுபடியும் செய்தி அனுப்பியவுடனே படை புறப்படச் சித்தமாயிருக்க வேண்டும். நான் சொல்வது தெரிகிறதா?'' என்றார்.

''தெரிகிறது, பிரபு!''

''கோட்டையைப் பத்திரப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு எல்லாம் செய்தாகி விட்டதல்லவா?''

''கிழக்குக் கோட்டை வாசலைத் தவிர மற்ற மூன்று வாசல்களையும் அடைக்கச் சொல்லி விட்டேன். அப்புறம் துறவறத்தாரைத் தவிர வேறு யாரையும் விசாரியாமல் கோட்டைக்குள் விடக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறேன். வெளியே போகிறவர்களையும் கவனிக்கச் சொல்லியிருக்கிறேன். நகருக்குள்ளேயும் யார் பேரிலாவது சந்தேகத்துக்கு இடமிருந்தால் சிறைப்படுத்திக் காவலில் வைக்கச் சொல்லியிருக்கிறேன்.''

''கோட்டை சுவரெல்லாம் பழுது பார்த்திருக்கிறதா? சேனாபதி! பல்லவ சாம்ராஜ்யம் நிலைத்து நிற்பது இந்தக் காஞ்சிக் கோட்டையின் பாதுகாப்பையே பொறுத்திருக்கலாம்.''

''பல்லவ சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்குக் காவேரி முதல் கிருஷ்ணா நதி வரையில் லட்சோப லட்சம் வீரர்கள் காத்திருக்கிறார்கள், பிரபு!''

''உண்மைதான்! ஆனால், அவர்கள் வெறும் கையினால் சண்டை போட முடியாதல்லவா? அந்த லட்சோப லட்சம் வீரர்களுக்கும் வேண்டிய வேல்களும் வாள்களும் எங்கே?'' என்றார் சக்கரவர்த்தி.

சேனாபதி கலிப்பகையார் மௌனம் சாதித்தார்.

''கீழைச் சோழ நாட்டில் வாளும் வேலும் நன்றாய்ச் செய்வார்கள் போலிருக்கிறது. யானைமேல் எறியப்பட்ட வேலை நீர் பார்த்தீரா?''

''இல்லை பிரபு!''

''மாமல்லனிடம் அது இருக்கிறது. 'மாமாத்திரர்' என்று எழுதியிருக்கிறது. 'மாமாத்திரர்' என்ற பட்டம் கீழைச் சோழ நாட்டிற்கு உரியதல்லவா!''

''ஆம், பல்லவேந்திரா!''

''அந்த வேலை எறிந்தவன் கீழைச் சோழ நாட்டானாய்த்தானிருக்க வேண்டும். அம்மாதிரி வேல் எறியக்கூடிய வீரர்கள் ஆயிரம் பேர் இருந்தால் இந்தக் கோட்டைக் காவலைப் பற்றிக் கவலையில்லை!''

''பல்லவ சைனியத்தில் எத்தனையோ ஆயிரம் வேல் வீரர்கள் இருக்கிறார்கள், பிரபு!''

''அந்த வேலை எறிந்தவன் பதினாயிரத்தில் ஒரு வீரன்; அவனை அவசியம் கண்டு பிடிக்க வேண்டும்.''

சேனாபதி மௌனமாயிருந்தார்.

''இன்னும் ஒரு விஷயம்: காவித்துணி அணிந்தவர்களைப் பற்றிய கட்டளையை மாற்ற வேண்டும். ஆயனரையும் அவர் மகளையும் பார்த்துவிட்டு நாங்கள் திரும்பிய போது ஒரு சந்தின் முனையில் ஒரு பிக்ஷு நிற்பதைப் பார்த்தேன். சட்டென்று அவர் நிழலில் மறைந்து கொண்டார்.''

''கட்டளை என்ன பிரபு?''

''இராஜ விஹாரத்தின் மேல் கவனம் வைத்து, புதிதாக வந்திருக்கும் புத்த பிக்ஷு யார் என்று பார்க்கவேண்டும்.''

''உடனே ஏற்பாடு செய்கிறேன்.''

பிறகு, சேனாபதி கலிப்பகையார் ஒவ்வொரு தூதராக அழைத்து இவரிவர் இன்னின்ன கோட்டத்துக்குப் போகிறார் என்று சக்கரவர்த்தியிடம் தெரியப்படுத்தினார். தூதர்கள் தனித் தனியே சக்கரவர்த்திக்கு வணங்கி விடை பெற்றுக் கொண்டு தத்தம் குதிரை மீதேறி விரைந்து சென்றார்கள்.

எட்டாம் அத்தியாயம்


புவன மகாதேவி

மாமல்லர் தந்தையின் சொற்படி அரண்மனை நிலா முற்றத்தைக் கடந்து சென்று, உள் வாசலை நெருங்கியதும் குதிரை மீதிருந்து இறங்கினார். அங்கே சித்தமாய்க் காத்திருந்த பணியாட்கள் குதிரையைப் பிடித்து அப்பாலே கொண்டு சென்றார்கள்.

பிறகு, மாமல்லர் விசாலமான அந்த அழகிய அரண்மனைக்குள் பிரவேசித்து, தீபம் ஏந்துவோர் தம்மைப் பின் தொடர்ந்து வருவதற்குத் திணறும்படியாக, அவ்வளவு விரைவாக நடந்து சென்றார்.

புதிதாக அந்த அரண்மனைக்குள் பிரவேசிக்கிறவர்கள் அங்கே குறுக்கு நெடுக்குமாகச் சென்ற நடைபாதைகளில் வழி கண்டு பிடித்துச் செல்வது அசாத்தியமாயிருக்கும். நரசிம்மர் அந்தப் பாதைகளின் வழியாக வளைந்து வளைந்து சென்று அரண்மனை அந்தப்புரத்தை அடைந்தார். அங்கே சிற்ப வேலைகளினால் சிறப்படைந்த ஒரு வாசலை அவர் அணுகியதும், ''குழந்தாய்! வந்தாயா?'' என்று உள்ளேயிருந்து ஒரு

அமரர் கல்கி



குரல் கேட்டது.

பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்தரசியான புவன மகாதேவி அந்தப்புர வாசற்படியில் வந்து நின்றார். அவருடைய, கம்பீரமான தோற்றமும் முதிர்ந்த சௌந்தர்ய வதனமும், "திருபுவன சக்கரவர்த்தினி" என்று பல்லவ சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் அவரைக் கொண்டாடுவது முற்றும் பொருந்தும் என்று தெரியப்படுத்தின.


"அம்மா!" என்ற குரலுடன் அருகில் வந்த குமாரனைச் சக்கரவர்த்தினி இரு கைகளாலும் அணைத்துக் கொண்டு, "குழந்தாய்! இன்றைக்கு...." என்று ஏ தோ சொல்லத் தொடங்குவதற்குள், மாமல்லர்,

"அம்மா! உங்களை ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு வரம் தர வேண்டும்!" என்றார்.

புவனமகாதேவியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"வரமா? நல்லது. கேள்! தருகிறேன். அதற்குப் பிரதியாக நானும் ஒரு வரம் கேட்பேன். அதை நீ தர வேண்டும்!" என்று அன்பு கனிந்த குரலில் கூறினார்.

மாமல்லர், "பிள்ளை அன்னையிடம் வரம் கேட்பது நியாயம். பிள்ளையிடம் தாய் வரம் கேட்பது எங்கேயாவது உண்டா? முடியவே முடியாது!" என்றதும், புவன மகாதேவியின் முகத்தில் புன்னகை மறைந்



தது.

இருவரும் உள்ளே சென்றார்கள்.

நரசிம்மர் தமது தலை அணியையும் ஆபரணங்களையும் எடுத்து வைத்துவிட்டுக் கால் கை சுத்தம் செய்து கொண்டு வந்தார். பிறகு இருவரும் அந்தப்புரப் பூஜா மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள். அங்கே, மத்தியில் நடராஜமூர்த்தியின் திருவுருவம் திவ்ய அலங்காரங்களுடன் விளங்கியது. பின்புறச் சுவர்களில் சிவபெருமானுடைய பல வடிவங்களும், பால கோபாலனுடைய லீலைகளும் விதவிதமான வர்ணங்களில் அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன.

பூஜையெல்லாம் முன்னமே முடிந்தபடியால், தாயும் மகனும் அந்தத் திருவுருவத்தை வழிபட்டுவிட்டு வெளியே வந்து போஜன மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள்.

உணவருந்த உட்கார்ந்ததும் புவன மகாதேவி, "குழந்தாய்! ஏதோ முக்கியமான செய்தி வந்திருக்கிறதாம்! கோட்டை வாசல் எல்லாம் சாத்தியாகி விட்டதாம். அரண்மனையெல்லாம் அல்லோலகல்லோலப் படு



''கால் கிலோ காப்பித் தூள் என்ன விலை...?''

''பதிமூன்று ரூபாய்ங்க...!''



''விலை ஏறிடிச்சா...?''

''ஆமாங்க...''

''குறையுமா?''

''பாதியா வாங்கினா...!''

— எஸ். ஜெயப்ரியா.

கிறது. எனக்கு மட்டும் ஒன்றுமே தெரியவில்லை; நீயாவது சொல்லக் கூடாதா? பெண்கள் என்றால் மட்டமானவர்கள். அவர்களுக்கு ஒன்றுமே தெரிய வேண்டியதில்லையென்பதாக நீ கூடவா எண்ணம் வைத்திருக்கிறாய்?'' என்றார்.

மாமல்லர் உணவு பரிமாறிக் கொண்டிருந்த பணியாட்களைப் பார்த்து விட்டு, ''அம்மா! சாப்பிட்டானதும் மேல் மாடத்துக்குப் போய் எல்லா விவரங்களும் சொல்கிறேன். ஆனால், ஒன்று மட்டும் இப்போதே கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் தினந்தோறும் நான் வந்த பிறகுதான் தாங்கள் இராப் போஜனம் செய்வது என்று வைத்துக் கொள்ளக்கூடாது. அந்த வழக்கத்தை இன்றோடு நிறுத்திவிட வேண்டும்'' என்றார்.

சக்கரவர்த்தினி குமாரனை அன்பு ததும்பிய கண்களால் பார்த்துப் புன்னகை புரிந்தார். ஆனால், மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை.

காஞ்சி அரண்மனையில் பகல் போஜனம் ராஜரீக சம்பிரதாயங்களுடன் ஆடம்பரமாய் நடப்பது வழக்கம். பெரிய சாம்ராஜ்ய உத்தியோகஸ்தர்கள், சிவனடியார்கள், வைஷ்ணவப் பெரியார்கள், பிரசித்தி பெற்ற கலைஞர்கள், தமிழ்க் கவிஞர்கள், வடமொழிப் பண்டிதர்கள் முதலியோர் விருந்தாளிகளாக அழைக்கப்படுவது உண்டு.

எனவே, பகல் போஜன நேரத்தில் அரண்மனைவாசிகள் ஒருவரோடொருவர் அளவளாவுதல் இயலாத காரியம்.

மற்றும் பகல் நேரமெல்லாம் சக்கரவர்த்தியும் குமாரரும் ராஜரீக காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள்.

எனவே தாயும் பிள்ளையும் சந்திப்பதற்கு இராப் போஜன நேரத்தை சக்கரவர்த்தி திட்டம் செய்திருந்தார்.

அதற்குப் பிறகு அரண்மனைமேல் உப்பரிகையின் நிலாமாடத்தில் அவர்கள் மூன்று பேரும் சந்தித்துப் பேசுவது வழக்கமாயிருந்தது.

இன்றைக்குச் சாப்பாடு ஆனதும் தாயும் புதல்வனும் மேல் உப்பரிகைக்குச் சென்று நிலா மாடத்தில் அமைந்திருந்த பளிங்குக் கல் மேடையில் அமர்ந்தார்கள்.

பால் நிலவில் மூழ்கியிருந்த காஞ்சி நகரமானது அன்றிரவு என்றுமில்லாத அமைதி பெற்று விளங்கிற்று.

நரசிம்மவர்மருடைய மனம் அந் நகரின் கீழ்க் கோட்டை வாசலுக்குச் சென்றது. இப்போது அந்தக் கோட்டை வாசலைக் கடந்து ஒரு சிவிகை போய்க்கொண்டிருக்கும். அந்தச் சிவிகையில் ஆயனரும் அவர் மகளும் அமர்ந்திருப்பார்கள்.

ஆகா! அவர்களுக்குத்தான் இன்றைக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வந்தது! மதயானையின் மீது வேல் எறிந்து அவர்களைக் காப்பாற்றிய வீரன் யாராக இருப்பான்?.....

புதல்வன், தானே பேசுவான் என்று புவன மகாதேவி சிறிது நேரம் காத்திருந்தார். அவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து விட்டான் என்பதைத் தெரிந்து கொண்டு, ''குழந்தாய்!'' என்றார்.

உடனே மாமல்லர் திடீரென்று கனவு கலைந்தவர் போல் திடுக்கிட்டுத் தாயாரைப் பார்த்தார்.

''அம்மா! அம்மா! நான் உங்களிடம் கேட்க விரும்பிய வரத்தைக் கேட்டே விடுகிறேன். உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். என்னைக் 'குழந்தாய்' என்று கூப்பிடாதீர்கள். நான் இன்னும் பச்சைக் குழந்தையா? பல்லவ ராஜ்யத்திலுள்ள புகழ் வாய்ந்த மல்லர்களையெல்லாம் ஜயித்து 'மாமல்லன்' என்று பட்டம் பெற்ற பிறகும், என்னைக் 'குழந்தை!' 'குழந்தை' என்றால் நான் என்ன செய்கிறது? அப்பாவோ இன்னும் என்னைத் தொட்டிலில் கிடக்கும் குழந்தையாகவே எண்ணி நடத்துகிறார்! உங்கள் இரண்டு பேருக்கும் இடையில் நான் அகப்பட்டுக் கொண்டு....''

''அதற்கு என்ன செய்யலாம்? பெற்றோர்களுக்கு மகன் எப்போதும் குழந்தைதான்'' என்ற குரலைக் கேட்டுத் தாயும் மகனும் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களுக்குத் தெரியாமல் மகேந்திர சக்கரவர்த்தி பின்னால் வந்து நிற்பதைத் தெரிந்து கொண்டு இருவரும் பயபக்தியுடன் எழுந்து நின்றார்கள்.

மகேந்திர மாணிக்க மேடையில் அமர்ந்ததும் புவன மகாதேவியும் மாமல்லரும் உட்கார்ந்தார்கள். "தேவி! குழந்தை ஏதாவது சொன்னானா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"இன்னும் ஒன்றும் சொல்லவில்லை. என்பேரிலும் உங்கள் பேரிலும் குறைதான் சொல்லிக் கொண்டிருந்தான்!"

"குறை சொல்லாமல் வேறு என்ன சொல்லட்டும், அப்பா! பல்லவ ராஜ்யத்தில் அந்நியர் பிரவேசித்த செய்தி கிடைத்த பிறகு நாம் வெறுமனே கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதா? சேனாபதி கலிப்பகையார் சேனை திரட்டுவதற்குள் கலியுகமே முடிந்துவிடும் போலிருக்கிறதே? இத்தனை நேரம் நமது சைனியம் போருக்குக் கிளம்பியிருக்க வேண்டாமா?" என்று கொதித்தார் மாமல்லர்.

"பல்லவ ராஜ்யத்தில் அந்நியர் பிரவேசித்தார்களா? இது என்ன?" என்று புவன மகாதேவி வியப்பும் அவநம்பிக்கையும் தொனித்த குரலில் கேட்டார்.

"ஆம், தேவி! அற்ப சொற்பமாகப் பிரவேசிக்கவில்லை. பெரும் படைகளுடன் திடீரென்று பிரவேசித்திருக்கிறார்கள்...."

"பல்லவேந்திரா! மந்திராலோசனை சபையில் நான் மட்டும் வாயைத் திறக்காமல் இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறீர்கள்? எல்லாரும் ஏதோ பேசிய போது என் மனம் கொதித்த கொதிப்பை மிகவும் முயன்று அடக்கிக் கொண்டிருந்தேன்...."

மாமல்லரின் பேச்சை மறுத்துச் சக்கரவர்த்தி தமது பட்ட மகிஷியைப் பார்த்துச் சொன்னார்: "தேவி! நரசிம்மன் இன்னும் குழந்தையாகத்தான் இருக்கிறான். வந்திருக்கும் யுத்தம் எப்பேர்ப்பட்டதென்பதை அவன் அறியவில்லை. இரண்டு பேரும் கேளுங்கள். வாதாபி மன்னன் புலிகேசி பெரும் படைகளுடன் துங்கபத்திரை நதியைக் கடந்து நமது ராஜ்யத்துக்குள் பிரவேசித்திருக்கிறான். அவனுடைய சைனியத்தில் லட்சக்கணக்கான வீரர்கள் இருக்கிறார்களாம். ஆயிரக் கணக்கில் யானைகள் இருக்கின்றனவாம். பெரிய காளைகள் பூட்டிய நூற்றுக்கணக்கான வண்டிகள் தொடர்ந்து வருகின்றனவாம். பதினாயிரக்கணக்கான குதிரை வீரர்கள் வருகிறார்களாம். வெகு காலமாகவே புலிகேசி இந்த யுத்த ஏற்பாடுகளைச் செய்து வந்திருக்கிறான். நமது ஒற்றர்கள் எப்படியோ ஏமாந்து போயிருக்கிறார்கள். நமது எல்லைக் காவல் படைகளைப் புலிகேசியின் ராட்சத சைனியம் வெகு சீக்கிரத்தில் முறியடித்துவிட்டு அதிவேகமாக முன்னேறி வருகிறதாம். அந்தச் சைனியத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய படை பலம் தற்போது நம்மிடம் இல்லை. ஆங்காங்குள்ள நம் படைகள் பின்வாங்கி வந்து கொண்டிருக்கின்றன. பல்லவ ராஜ்யத்துக்கு வந்திருக்கும் அபாயம் மிகப் பெரியது. ஆனாலும், நெற்றிக் கண்ணைத் திறந்து திரிபுரத்தை எரித்த பினாகபாணியின் அருளினால் முடிவில் நமக்குத்தான் வெற்றி கிடைக்கப் போகிறது. அதைப் பற்றிச் சந்தேகம் வேண்டியதில்லை!"

தந்தை பேசி முடிக்கும் வரையில் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த நரசிம்மர், "அப்பா! பல்லவ சைனியம் பின்வாங்கி வருகிறதா? இது என்ன அவமானம்? இப்போது எனக்கு அநுமதி கொடுங்கள். அப்பா! நம்மிடம் தற்சமயம் ஆயத்தமாயிருக்கும் படைகளை அழைத்துக் கொண்டு புறப்படுகிறேன்!" என்றார்.

"பொறு நரசிம்மா, பொறு! பல்லவ சைனியத்தை நீ நடத்திச் செல்லும்படியான காலம் வரும். அது வரையில் பொறுமையுடன் நான் சொல்வதைக் கேட்டு நட. இன்றிரவு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. என்னுடன் வருகிறாயா?"

"கேட்க வேண்டுமா? வருகிறேன், அப்பா."

"தேவி! நரசிம்மனை இன்று முதல் நான் 'குழந்தை'யாக நடத்தப் போவதில்லை. சகாவாகவே நடத்தப்போகிறேன். மந்திராலோசனைகளில் கலந்து கொள்ளும் உரிமையையும் இன்று முதல் அவனுக்கு அளிக்கிறேன். நீயும் இனிமேல் அவனைக் 'குழந்தை' என்று அழைக்க வேண்டாம்!" என்றார் சக்கரவர்த்தி.

புவன மகாதேவியைப் படுப்பதற்குப் போகச் சொல்லிவிட்டுத் தந்தையும் மகனும் அரண்மனையிலிருந்து வெளியேறிச் சென்றார்கள்.

(தொடரும்)

பாரதி மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில் வாழ்த்துச் செய்திகளைப் படித்த ராஜாஜி, சுத்தானந்த பாரதியின் செய்தியில் ஒரு பகுதியைப் படித்துவிட்டு "இதற்கு மேல் பேஹாக் ராகம் தெரிந்தவர்கள் படிக்கலாம்" என்று கூறி அக் கடிதத்தைச் சபையோர் முன் நீட்டினார்! சபையில் ஒரே சிரிப்பு. சுத்தானந்த பாரதி பேஹாக் ராகத்தில் ஒரு வாழ்த்துப் பாடல் அனுப்பியிருந்தார். தம்மால் பாட முடியாது என்பதால் ராஜாஜி அப்படி குறிப்பிட்டார்.

— எஸ். முகம்மது யூசுப்.



புதிய சரித்திரம்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — ரூ. 375/- மூன்றாம் பரிசு பெறும் கதை-2

"என்ன மருதவீரா...? நம்ம சேரி சனம் என்னைக்கும் இல்லாம வெள்ளையும், சொள்ளையுமா விருந்துக்குக் கௌம்பி டிச்சு... நீ இன்னும் குந்திகினு இருக்கியே... ஏன், வரலியா?''

போஜனத்துக்குச் சென்று கொண்டிருந்த கொட்டாப்புளி தாத்தாவின் பேச்சைக் கேட்டு, கரிசல் காட்டில் பிளந்து கிடக்கும் பூமியைப் போன்ற ஒரு வறட்டுச் சிரிப்பை உதிர்த்தான் மதுரவீரன்.

''ஏந்தாத்தா! யாரோ கலைட்டர் வாரா கன்னு. இந்த ஊர் பெருசுக எல்லாம் அவுக தோளோட தோளா நம்மளையும் குந்தவச்சி, ஒரு கொழம்பு, ஒரு ரசம், ஒரு கூட்டு, ஒரு பாவசம்னு எலையில் போட்டு மைக்குக்கும் முன்னாடி — 'ஜாதி ஒழியணும், இருள் விலகணும் — எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு தாய் மக்கள்னு சோடா' குடுக்கிற வரைக்கும் பேசி, கலைட்டர் போன உடனே, எச்சக் கையைக் கழுவி, எலையைக் குப்பைத் தொட்டியில் வீசுறது மாதிரி, நம்மளை வழக்கம் போல் வெலக்கி வைக்கப் போறாங்க... எதுக்கு? ஒரு நா கூத்துக்கு மீசையை வப்பானேன்? ராசா நெனப்புல நடப்பானேன்...? எனக்கென்னமோ இந்தப் போலித்தனம் புடிக்கலே... நீங்க போய்ட்டு வாங்க...''

ஓரடி நெருங்கி அவன் அருகே வந்த கொட்டாப்புளி தாத்தா — ''மருதவீரா... கேவலம் பாவசத்துக்கும் பந்தி சோத்துக்குந் தான் நம்ம சேரிசனம் விழாவுக்குப் போயிருக்குன்னு நெனைக்கிறியா...? இல்லேப்பா, நம்ம சாதியில் பொறந்து, இந்த நாட்டு சட்ட திட்டங்களை இயற்றி, நம்ம சாதி மேம்பாட்டுக்காகப்போராடின அந்தமாவீரன் அம்பேத்கரோட சிலையைத் திறக்கிறாரு. அம்பேத்கார் முகத்தைச் சிலையிலயாவது பாத்துப்புட்டு வந்துறணும்னுதாம்பா...

''ஒண்ணு சொல்றேன், கேட்டுக்க... உன்னை மாதிரி துடிப்புள்ள இளைஞர்களெல்லாம் திண்ணையில் குந்திக்கிட்டு வெட்டித்தனமா வசனம் பேசிக்கிட்டு இருக்கக்கூடாது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சமுதாயத்தின் மரமண்டையில் ஒறைக்கிறமாதிரி அடிக்கணும். அந்தமாதிரி அடிச்சதனால்தான் இன்னைக்கும் நம்ம கூட அம்பேத்கர் வாழ்ந்துக்கிட்டிருக்கார். சரி, சரி... வர்றியா, வரலையா? சொல்லு, நான் போறேன்!''

சற்றுயோசித்தமதுரவீரன், ''நீங்கபோங்க தாத்தா, நான் பின்னால் வர்றேன்!'' என்றான்.

*அ*ம்பேத்கரின் உருவச்சிலை திறக்கப் பட்டிருக்க... மைக்கின் முன்னால் கலெக்டர் பேசிக் கொண்டிருந்தார்...

''அமரர் அம்பேத்கர், காந்திய வழியில் ஜாதி மதங்களை வெட்டி எறியப் புறப்பட்ட முதல் கோடரி. அந்தக் கோடரியின் வெட்டுக்களினால் ஜாதி மதத்தின் ஆணிவேர்கள் ஆட்டம் கண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

''அவர் கண்ட அந்த ஒன்றுபட்ட சமுதாயம் உருவாகி விட்டது என்பதற்கு ஜாதி மதங்களை மறந்து இங்கே கூடியுள்ள நாமே சாட்சி. அமரர் அம்பேத்கர் கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சமபந்தி போஜனத்திலே சகோதரத்துவமாய் அமரப் போகும் நாமே அத்தாட்சி.

இனி நாம் அனைவரும் ஓரினத்தில் நிற்போம். ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்குவோம்.''

— பேசி முடித்த கலெக்டர் அமர்ந்ததும் கூட்டத்தில் எழுந்த கரவொலி அடங்க வெகு

பாண்டியன்

அறிமுக எழுத்தாளர்

நேரமாகியது.

அதன் பிறகு அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர், நாட்டாண்மைக்காரர், பெரிய பண்ணை, சிறிய பண்ணை — கிராம சேவகர் என்று முக்கிய தலைகள் எல்லாம் ''களைய வேண்டும் ஜாதியை'' என்ற புராணத்தையே பாடினார்கள்.

அந்தப் பேச்சு சேரி மக்களின் இதயங்களைச் 'சித்திரை மாதத்துச் சில்லென்ற காற்று போல் இதமாய் வருடியது.

ஆனால் மதுரவீரனின் உள்ளம் மட்டும் அடித்துக் கொண்டது. 'விழலுக்கு இறைத்த நீர் இது' என்று...

சமபந்தி போஜனம் ஆரம்பமாகியது.

காலில் கிடக்கும் செருப்பைக் கம்கட்டில் வைத்துக்கொண்டு, கிராமத்துத்தெருக்களில் கூனிய முதுகோடு ஓரத்தில் ஒதுங்கிச் செல்லும் சேரி மக்கள்... நிமிர்ந்த நெஞ்சோடு, இடுப்பில் கிடக்கும் துண்டு தோளில் தொங்க, தொடத் தயங்கியவர்களின் தொடைகளைத் தொட்டபடி உட்கார்ந்திருந்தனர்.

கலெக்டருக்கு அடுத்து அமர்ந்திருந்தான் மதுரவீரன்.

அனைத்து இலைகளிலும் பாயசம் பரிமாறப்பட்டது. அப்போதுதான் கொட்டாப்புளி தாத்தாவின் நினைவு மதுரவீரனுக்கு வந்தது.

எட்டிப் பார்த்தான் எந்தப் பக்கத்திலும் அந்தப் பிரகாசமான சூரியத் தலையைக் காண முடியவில்லை.



''சரி, செழும் எங்கேயாவது ஓரமாக் குந்தியிருக்கும்'' —என்ற நினைவோடு பாயசத்தில் கையை வைத்தான்.

அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

''கொட்டாப்புளித் தாத்தா, ஆத்துக்கும் அப்பால செத்துக் கெடக்காக.'' — அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்தான் ஒரு சிறுவன்.

''**பா**ம்பு தீண்டியிருக்கு. உசுரு போயி ஒரு மணி நேரத்துக்கும் மேலிருக்கும்.''

வைத்தியரின் வார்த்தையைக் கேட்டதும் மதுரவீரனுக்குத் தன்னையும் மீறிக் கண்ணீர் கசிந்தது.

அந்தச் சேரி மக்கள், இல்லை, இல்லை, அந்த ஊர் மக்கள் எவருக்குமே கிட்டாத ஒரு சிறப்பு கொட்டாப்புளி தாத்தாவுக்குக் கிடைத்தது.

சேரி மக்களின் துக்கங்களிலே ஊர் மக்கள் பங்கெடுத்துக் கொள்வது என்பது இதுவரை இல்லாத ஒன்று. ஆனால் ஊர் மக்கள் அனைவரும் திரண்டிருக்க, அதனினும் சிறப்பாக — கலெக்டர் அவர்கள் தலைமையில் — கொட்டாப்புளி தாத்தாவின் இறுதி ஊர்வலம்...

தாத்தாவைக் கிடத்தியிருந்த பச்சை மூங்கிலின் தலைப்பாகத்தைப் பிடித்தபடி மதுரவீரன் நடந்து கொண்டிருந்தான். அதற்குப் பின்னே உண்மையான துக்கத்துடன் சேரி மக்கள்...

முன்னே சென்று கொண்டிருந்த கலெக்டர், ''எந்தப் பக்கமாப் போறது?'' —இரண்டு வழியாகப் பிரிந்து சென்ற அந்தப் பாதையின் விளிம்பில் நின்று வினவினார்.

''பீச்ச கையால போங்க, அதுதான் சேரிச் சுடுகாடு... சோத்து கையால, நம்ம ஜன ஊர்ச் சுடுகாடு இருக்கு... நீங்க பீச்ச கையால போங்க...!'' — பஞ்சாயத்துத் தலைவர் கலெக்டர் அருகில் ஓடிவந்து கூறினார்.

கலெக்டர் பீச்ச கைப்பக்கம் திரும்பிச் சேரிச் சுடுகாட்டை நோக்கி நடக்க, கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது.

அப்பொழுதுதான் தாத்தாவின் அந்தக் கடைசிச் சொற்கள் மதுரவீரனின் நெஞ்சத்திலே சம்மட்டி என அடித்தன.

''சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் சமுதாயத்தின் மரமண்டையில் ஒரைக்கிறது மாதிரி அடிக்கணும்...''

ஆணித்தரமாக ஊர்க் கூட்டம் செல்லும் சேரிச் சுடுகாட்டு வழியை விட்டு ஊர்ச் சுடுகாட்டின் சோற்றுக்கைப் பாதையை நோக்கித் தடம் பதித்தான் மதுரவீரன்...!

பாடையின் மற்ற மூன்று முனைகளைப் பிடித்திருந்தமற்றமூவரும்ஊர்க்கூட்டத்தைப் பின் தொடர முயற்சிசெய்தும்...கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் மிதந்து செல்லும் தூசு துரும்பினைப் போல் மதுரவீரனின் வழியே தங்களையும் மீறிச் சென்றார்கள்.

ஊர்க்கூட்டம் ஸ்தம்பித்து நின்றது.

''என்ன, மதுரவீரா, மூக்கு முட்டக் குடிச்சுப்புட்டையாக்கும், பாடையைச் சோத்துக் கைப்பக்கம் இந்தத் தள்ளு தள்ளுறே?'' — பாடை தூக்கி வந்த ஒருவன் வினவினான்.

தவித்துக் கொண்டிருந்த மதுரவீரனின் நெஞ்சிலிருந்து வார்த்தைகள் எரிமலையாய் வெடித்துச் சிதறின.

''ஆமாம். பாடையை நான்தான் தள்ளினேன்...! ஏன்? இங்கே இருக்கிற கலைட்டர் ஐயாவா இருக்கட்டும், ஊர்ப் பெரிய மனுசங்களா இருக்கட்டும், ஊர்ச் சனங்களா இருக்கட்டும், எல்லோருக்கும் சொல்றேன் கேட்டுக்குங்க... ஜாதியை ஒழிக்கப் போறேன்னு சொல்லித்தான் சமபந்தி போஜனம் நடத்துனீங்க. ஆனா... பந்தியில ஒக்காந்த எங்க எச்சக்கை காயறதுக்குள்ளே, செத்துப் போன தாத்தாவோட பொணத்தை எரிக்கிறதுல நீங்க பிரிவினை காட்டிட்டீங்க... அரசியல் லாபத்துக்காக இந்த மாதிரி சமபந்தி போஜனங்கிற பெயர்ல நீங்க எங்களுக்கு ஆசை காட்டி எங்களை மோசடி செய்யறதை ஒரு காலும் ஒத்துக்க மாட்டோம்.''

வழிந்த கண்ணீரைத் துடைத்த மதுரவீரன், கூட்டத்தினரை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திடமாகச் சொன்னான்: 'சமபந்தி போஜனம் நடத்தினது உண்மைதான். அதுக்கும், அண்ணல் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவுக்கும் தலைமை தாங்கினது நான்தான்'னு கலைட்டர் ஐயா மார் தட்டிக்கிட்டு வந்தார்னா... அவர் மைக்குக்கு முன்னாடி பேசின ஒவ்வொரு வார்த்தையையும் அவர் மனசறிஞ்சு பேசினது உண்மைன்னா... நிச்சயம் தாத்தாவோட பொணத்தை என் உயிர் போனாலும் ஊர்ச் சுடுகாட்டில எரிக்காம விடமாட்டேன்... இது சத்தியம்...! என்னடா, பேசாம இருக்கீங்க, சொல்லுங்களேண்டா!''

சேரி ஜனங்கள் அனைவரும் புதிய தெம்

''மன்னா... தயவு செய்து எனக்குப் 'பரிசில்' வேண்டாம்!''

''ஏன், புலவரே...? ''

''தாங்கள் தரப் போகும் பரிசிலுக்கு.. மேலேயே, நான் 'கையூட்டுத் தர வேண்டியிருக்கு...!''

— ஆர். அப்துல் சலாம்.



போடு. "ஆமா... இது சத்தியம்!" என்று முழங்கி நிற்க...

ஊர் மக்கள் அனைவரும் ஆத்திரம் கொப்புளிக்கக் கொதித்தெழுந்தனர்.

"சேரிப் பொணம் நம்ம சுடுகாட்டிலயா?" —

"கலைட்டர் ஐயாவையே கண்டபடி, தாறுமாறாப் பேசுற அந்தப் பயலைக் கட்டுங்கடா ஆலமரத்திலே" — பஞ்சாயத்துத் தலைவரின் குரல் ஓங்கிக் கேட்டது.

"ஏய் யாருப்பா அது...? உயிரே போனாலும் சேரிப் பொணத்தை ஊர்ச் சுடுகாட்டிலே எரிக்காம விடமாட்டேன்னு சபதம் பண்ணது...? இந்தாப்பா, ஒண்ணு சொல்றேன், கேட்டுக்க. ஏதோ மீட்டிங் போட்டுக் கூடியிருக்கிற சனம் கைதட்டணுங்கிறதுக்காக ஆயிரம் பேசுவோம். பெரிய மனிதரோட பொறந்த நாள். அதை முன்னிட்டு அவுங்க இனத்தோட ஒருநாள் ஒண்ணா உட்கார்ந்து சமபந்தி நடத்தினோம்னா... அதுக்காக ஒரேயடியாச் சம்பந்தி முறை வச்சி வெத்தலை பாக்கா மாத்திக்க முடியும்! ஒங்க பரம்பரை என்ன? ஊர்ப் பரம்பரை என்ன...?" — வார்த்தைகள் தடித்தன.

"ஏய்... உங்க ஆத்தா உன்னை ஒருத்தனுக்குப் பெத்தது உண்மைன்னா, உன் சத்தியத்தை நிறைவேத்திக் காட்டுடா பார்த்திடுறேன்... நானெல்லாம் என்ன சேலை கட்டிக்கிட்டு வந்திருக்கேன்னு பார்த்தியா?"

—கலெக்டரின் வார்த்தை அனைவரையும் வாய்மூட வைத்தது. ஊர் மக்களுக்கு அது தேனாய் இனித்தது. ஆனால் சேரி மக்களுக்கோ, தீயாய்ச் சுட்டது.

சேரிப் பெரியவர்கள் இருவர் ஓடி வந்து மதுரவீரனின் காதுகளில் முணுமுணுத்தனர். அவர்களின் அறிவுரையை ஏற்கும் நிலையில் அவன் இல்லை.

"ஏய்...!" — என்று கர்ஜித்தான்.

அவன் விட்ட அந்த மூங்கில் முகப்பை வேறொருவன் தாங்கிக் கொண்டான்.

"யோவ் கலைட்டரே! என்ன கேட்டே?— நீ கேட்டதை நான் செஞ்சுக் காட்டலேன்னா... என் ஆத்தா பழிகாரி ஆயிடுவாய்யா...! அவ பெத்த உடம்பு, அவ மானம் காக்க உதவலேன்னா, இருந்தென்ன போயென்ன...? இந்த ஊர்ச்சனம் எல்லாத்துக்கும் சொல்றேன். கீழ்ச் சாதின்னு எங்களைக் கேவலமாப் பேசுறீங்க... ஆனா, நாங்க அறுத்துப் போட்ட நெல்லைத்தான் நீங்க சாப்பிட்டு உசுரு பொழைக்குறீங்க...ஒண்ணு கேக்குறேன். இறுதியாத்திரை முடிஞ்சி உங்களைப் பொணக் கொட்டாயில வச்சிக் கொள்ளிப் போட்டதுக்கப்புறம் நீங்க வெந்தீங்களா, வேகலையாங்கிறதைப் பாக்க உங்க சொந்த சாதிக்காரன் எவன்யா கூட இருக்கான்...? ஆனா, உங்க எலும்பை நாய் நரி இழுத்துக்கிட்டுப் போகக் கூடாதுன்னு ராவு பூரா காவ காக்குறது நாங்கதான்... உங்களுக்குக் கால் செருப்பை விடக் கேவலமா உழைக்கிற எங்களைக் கேவல



''எரிபொருள் சிக்கனத்தை வலியுறுத்தி நம்ம கட்சியிலும் ஏதாவது நடவடிக்கை எடுத்து ஆகணுங்க!''

''சரி... இனிமேல் நம்ம கட்சியில் யாரும் தீக்குளிக்கக் கூடாதுன்னு அறிக்கை விட்டுடுங்க!''

— கோபிகா எஸ். முரளி.

மாவா பாக்குறீங்க? உங்க சமுதாயத்தில இருந்து தெனம் தெனம் சாவுறதைவிட, ஒரேயடியாச் செத்துப் போறது எவ்வளவோ மேலு! தூ...! விலகிப் போங்க, இந்தக் கொட்டாப்புளித் தாத்தாவை நானே கொண்டு போய் ஊர்ச் சுடுகாட்டுல கொள்ளி வச்சி, 'என்னை ஒருத்தனுக்குத்தான் எங்க ஆத்தா பெத்திருக்காங்கிறதை நிரூபிச்சுக் காட்டுறேன்!''

உலகத்தையே எதிர்க்கும் துணிவுடன் தாத்தாவைப் பாடையிலிருந்து தன் கைகளில் அள்ளி எடுத்தான் மதுரவீரன்.

''ஐயா, பொணத்தோட ஊர்ச்சுடுகாட்டை நோக்கி நடக்குறான்...'' — ஊர்ச்சனம் கொதித்தது.

''அட, இருங்கய்யா... கொள்ளியா வச்சுட்டான்! துப்பாக்கியோட, போலீசு என் உத்தரவுக்காகக் காத்திருக்கு! அந்தச் சேரிப் பயலுக்கு எவ்வளவு தூரத்துக்குத்தான் தெம்பு இருக்குன்னு பார்ப்பமே?'' என்று அவர்களை அடக்கினார் கலெக்டர்.

''ஐயா, பொணத்தை ஊர்ச் சுடுகாட்டு மேடையில் கிடத்திட்டான்...!'' — சுடுகாட்டைச் சுற்றி நின்ற ஊராரின் கண்கள் அகல விரிந்தன.

கலெக்டர் தம் பாதுகாப்புத் துப்பாக்கியை உதவியாளரிடமிருந்து வாங்கினார்.

ஓர் ஓரத்தில் குவிந்து கிடந்த வரட்டிகள், எரிந்தும் எரியாமலும் கிடந்த விறகுகள் இவற்றை அள்ளினான் மதுரவீரன்.

தமது துப்பாக்கியில் ரவைகளைப் பொருத்தினார் கலெக்டர்.

கடைசி வரட்டியை வைத்துத் தாத்தாவின் முகத்தை மூடினான் மதுரவீரன்.

கலெக்டரின் துப்பாக்கி மதுரவீரனைக் குறிபார்த்து நின்றது.

''ஐயா, தீப்பெட்டியைக் கொளுத்திட்டான்'' — பஞ்சாயத்துத் தலைவரின் குரலில் நடுக்கம் தெரிந்தது.

''ஒன்...'' — கலெக்டரின் குரல் உத்தரவைப் பிறப்பித்தது.

காவலர்கள் அனைவரும் தங்கள் துப்பாக்கியை உயர்த்தினர்.

காற்று கூட வீசப் பயந்து... எங்கும் அமைதி நிலவியது.

''ஐயா... பொணத்துக்கிட்ட கொண்டுகிட்டுப் போறான்...''

''ட்டூ...''

''ஐயா, கொள்ளி வச்சிட்...''

''த்ரீ...''

துப்பாக்கிகள் வெடிக்கும் சப்தம் வானைப் பிளந்தது. ஊர் மக்கள் சேரி மக்கள் அனைவரது கண்களும் பயத்துடன் மெல்லத் திறந்தன.

கொட்டாப்புளி தாத்தாவின் உடல் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

அருகே, மரணத்தின் மடியில் தலை வைத்த போதும், மனம் கலங்காத மதுரவீரன்...

அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

அனைவரும் தங்கள் நிலை உணரச் சற்றுத் தாமதமாகியது.

வானத்தைப் பார்த்து வெடித்த துப்பாக்கிகள் அனைத்தும் ஊர் மக்களைப் பார்த்துத் திரும்பின.

கலெக்டரின் வாயிலிருந்து வார்த்தைகள் உத்தரவுகளாய் உதிர்ந்தன.

''நான் அரசாங்க ஊழியன், சட்டத்தின் பிரதிநிதி... எனக்கு மனித பேதமோ, இன பேதமோ கிடையாது — அனைவரும் சமம்... இனி இந்தச் சமுதாயத்தைப் பொறுத்த வரையிலும், எவரேனும் பிரிவினையை உண்டாக்க நினைச்சீங்கன்னா, அவங்களைக் கண்டவுடன் சுட நான் உத்தரவிட்டிருக்கேன். இந்தக் கிராமத்தில் அமைதி ஏற்பட்டு, சமத்துவ நிலை உருவாகிறவரையிலும் காவல் துறை இங்கே தனது கடமையைச் செயலாற்றும்.''

மதுரவீரனின் அருகில் வந்து அவனைக் கட்டிப்பிடித்து — ''உன்னை மாதிரி அடிமை உணர்ச்சியற்ற இளைஞர்கள்தான் இந்த நாட்டுக்குத் தேவை. தாழ்த்தப்பட்ட ஒவ்வொரு சமுதாயத்தின் மூலை முடுக்கிலேயும் உன்னுடைய குரல் எதிரொலிக்கணும்... உனக்கு நிச்சயம் அரசாங்கத்தின் பாராட்டுக் கிடைக்கும்... இனி, உன்னைப் பார்த்தாவது உன் சமுதாயத்துக்கு உணர்ச்சிகள் வரட்டும்... நான் வர்றேன்...'' என்றார்.

கலெக்டரின் ஜீப் புறப்பட்டுச் சென்றது.

அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களும், புகைப்படக்காரர்களும், புதிய சரித்திரத்தின் கதாநாயகனாய் மதுரவீரனைச் சிருஷ்டித்தனர்.

"**உ**றங்காப்புலி அண்ணே! காதை இப்படிக் கொண்டா. எங்க யூனிட்டுல, நடிகர் சிவகுமாரைத் தேடிட்டு ஒரு சின்ன பொண்ணு வந்து விஷ் பண்ணுச்சு! பதிலுக்குச் சிவகுமாரும் விஷ்பண்ணினாரு. சார் கிளம்பறப்போ அந்தப் பொண்ணு திடீர்னு ''சார் நான் மீனா! உங்க படத்துல குழந்தை நட்சத்திரமா நடிச்சிருக்கேன்''னுச்சா, உடனே சிவகுமாருக்கு ஆச்சரியம் தாங்கலை! 'அன்புள்ள ரஜினிகாந்'துல குழந்தையா ஆக்ட் பண்ணுச்சே அந்தப் பொண்ணு தாண்ணே! கடைசியா சிவாஜி சார் கூட 'லட்சுமி வந்தாச்சு'ல குழந்தையா வந்துச்சு! இப்படி குழந்தையா ஐம்பது படத்துல நடிச்சிருக்கு. அப்புறம் ஒரு நாலு வருஷம் பள்ளிக் கூடம் போயிட்டு வந்துட்டு, இப்ப ஹீரோயினா நடிக்க வந்திருக்கு! அந்தப் பொண்ணு நல்லா பேசுதுப்பா! வெயிட்டான கேரெக்டர்லெ நடிக்கணும்னு ஆசையாம்! சும்மா பொம்மை மாதிரி கதாநாயகனுங்க கூட காதல் வசனம் பேசிட்டுப் போக இஷ்டமில்லைனுச்சு! சிடியில பொறந்து வளர்ந்த பொண்ணா இருந்தாலும் 'கிராமத்துப் பெண்' ரோல்ல அசத்தலா ஆக்ட் கொடுக்குதாம். எனக் கென்னவோ ராதிகா, ரேவதி லிஸ்ட்ல இதுவும் வந்துடும்னுதோணுது! இந்தப் பொண்ணோட அம்மா யார் தெரியுமா? காங்கிரஸ் மூப்பனார் கோஷ்டி ராஜ் மல்லிகா. இப்ப அம்மா, பொண்ணுக்காக கட்சி வேலையெல்லாம் கொறைச்சுக் கிட்டாங்களாம்!

"**உ**ப்பிலி சாமி! நீ அரசியல்னு சொல்லாங்காட்டி எனக்குக் கபால்னு நம்ம வாத்தியார் ஞாபகம் வந்தது. 'அண்ணா என் தெய்வம்'னு ஒரு படம் துவங்கினாரு பாருடா? அப்ப அவருக்குத் தங்கையா நடிக்க ஆள் தேடிட்டிருந்தாரு. அப்பத்தான் 'முத்தியால முக்கு'னு ஒரு படத்துல நடிச்சு நேஷனல் அவார்டு வாங்கியிருந்தாங்க நடிகை சங்கீதா! உடனே வாத்தியார் அந்த அம்மாவைத் தன் படத்துக்குப் புக் பண்ணிட்டாரு! வாத்தியார் முதலமைச்சரானதாலே அந்தப் படம் பாதிலே நின்னு போச்சே! இப்ப வாத்தியார் ஆசீர்வாதத்தோட பாக்கியராஜ் அந்தப் படத்தைத்தான் 'அவசரப் போலீஸ் நூறு'ங்கற பேர்ல எடுக்கிறார். சங்கீதா இதுல நடிக்கப் போறாங்க....

"**அ**ண்ணன் படத்தைத் தம்பி முடிக்கிறாருன்னு சொல்ல வர்றீங்க, உறங்காப் புலியண்ணே.... தம்பிமாருங்களுக்காக அக்கா துட்டு போட்டுப் படமெடுக்கறதுக்கு என்னா சொல்றீங்க....? ஜெயப்ரதா அம்மா பெரிய புரொட்யூசர் ஆயிட்டாங்கல்ல... அவங்க தம்பி ராஜ்குமாரை 'ஜின்னா'ன்ற தெலுங்கு படத்துல போட்டிருக்காங்க. இன்னொரு தம்பி ராஜ்பாபு 'திருட்டுப் புருஷன்' படத்துல வர்ற நாலு ஹீரோவுல ஒருத்தரு! இது தமிழ், தெலுங்கு இரண்டுலையும் வருமாம்...

''ஜெயப்ரதா அம்மா ஜெயிச்சா சரிதான் தம்பி!''

— எஸ். பாலு.

சிவகுமார் சார், நான்தான் மீனா...



சிற்றில்

காப்பான் அழிக்கத் தொடங்கில் எங்கள்
கவலை எவரோடு இனியுரைப்போம்
ஐயா, நினது வழியடிமை!
அடியேம் சிற்றில் சிதையேலே
அலை முத்தெறியும் திருச்செந்தூர்
அரசே! சிற்றில் சிதையேலே.

— திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்

நிலா காய்கிறது. கடற்கரையில் இத்தனை கூட்டம் இருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. எனக்கு எல்லாமும் வியப்புத்தான். என்னைத் தவிர எல்லா மனிதர்கள் மேலேயும் எனக்குப் பிரியம்தான். அன்புதான். அது எதனாலோ தெரியவில்லை. என்னை மட்டும் நான் இப்படியாக வெறுக்கிறேன்.


இப்படி நிலாவொளியில் நிற்பது எனக்குப் பிடிக்கிறது. எல்லார் மேலும் நிலவின் வெளிச்சம். என்னமோ அத்தனை பேரையும் வெளிச்ச இழையால் பின்னிவிடுவது போல். இத்தனை பேர் என்னைச் சுற்றி இருந்தும் நான் மட்டும் மனசு உள்ளொடுங்கி, தனிமைப்பட்டுக் கிடக்கின்றேன். வெறும் வெம்பல்.

என்னருகில் இருக்கும் ஹிந்திக்காரப் பெண் மணல்வீடு கட்டுகிறாள். எனக்கு வேடிக்கையாய் இருக்கிறது. அவள் மணல் வீடு கட்டுவதை அவளது குழந்தை இடுப்பில் கைவைத்தபடி, ஓர் எஜமானி போல் வேடிக்கை பார்க்கிறது. மேற்பார்வையிடுகிறது. மணல் கூம்பு சரியும் போதெல்லாம் "மம்மி...." என்று எச்சரிக்கிறது. அவள் சிற்றிலைச் சீர்ப்படுத்துகிறாள். அது புன்முறுவலுடன் நிற்கிறது.

சிறுமியின் அப்பா வேர்க்கடலை தின்று கொண்டிருந்தான். பேன்டை முழங்காலுக்கு மேலாக மடித்துவிட்டுக் கொண்டு ஈடுபாடில்லாமல் இயந்திரமாகக் கடலை கொறித்தான். குழந்தைக்குக் கொஞ்சம் கூடத் தராமல் எப்படியோ அவனால் தின்ன முடிகிறது. குழந்தை அவனிடம் ஓடிவந்து, அவனது கால்முட்டியில் தலை சாய்த்து அம்மாவைக் கேலி செய்து கைகொட்டிக் கெக்கலிக்கிறது. குழந்தையின் அசைவுகளால் வேர்க்கடலை சிந்தாமல் இருக்க, பொட்டலத்தைத் தள்ளிப் பிடித்தான்.

குழந்தைக்காக வாங்கிய ப லூ ன எடுத்து மணற்கூம்பில் சொருகி அகம் மகிழ்ந்தாள். ஒரு குச்சியின் இரண்டு பக்கமும் பந்துபந்தாக இரண்டு பலூன்கள். ஒன்று வெளிர் பச்சை. மற்றொன்று மஞ்சள். நிலா வெளிச்சத்தில் இலேசான நிறமயக்கம். அவள் ரசிக்கிறவேளையில் அந்தக் குழந்தை ஓடிப் போய்ப் பலூனைப் பிடுங்கிக் கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்துவிட்டு, போக்கிரித்தனமாகச் சிரிக்கிறது. அவள் ஹிந்தியில் எதையோ சொல்லி இருவரிடமும் கெஞ்சுகிறாள். அவன் வேர்க்கடலையை நாய்முன் வீசுவது போல் பலூனை எடுத்து அவளிடம் வீசினான். மனைவியின் அல்லது குழந்தையின் செயல்கள் அவனுள் எந்த சலனங்களையும் ஏற்படுத்தவில்லை!

சற்றுத் தூரத்திலேயே விழுந்துவிட்ட



பலூனை அவள் படுத்துக் கைநீட்டி எடுத்து மீண்டும் மணல் வீட்டில் சொருகினாள். குழந்தை மீண்டும் அதை எடுக்க வந்தபோது கத்தினாள். 'இவளைக் கட்டுப் படுத்துங்களேன்' என்பதுபோல முறையிட்டாள். குழந்தையைத் துரத்த மணலை அள்ளி வீசினாள். கொஞ்ச தூரம் ஓடிப் போன குழந்தை, இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்தபடி திரும்பிவந்து கால் விரல்களில் மணலைத் தோண்டி இறைத்தது. அவள் கத்தினாள். அதில் சந்தோஷம் தெறித்தது.

இத்தனை நேரமாக இல்லாத பெரிய அலை எழுந்து, கரையைத் தாண்டி வந்து ஜனங்களைத் தீண்டியது. அங்கே சல சலப்பு, சந்தோஷக் கூச்சல். குழந்தையின் பாதங்கள் நனைந்துவிட்டன. அவள் பைஜாமாவின் பெரும் பகுதி நனைந்து விட்டது. அவள் வெட்கப்பட்டாள். ஆனால் அந்த இடத்தை விட்டு எழவில்லை. அலை நனைத்த ஈரமணலைக் கொண்டு மணல் வீட்டை மெழுகினாள்.

கணவனை, மகளை, ஆழ்ந்திருக்கும் மனிதர்களை அனைவரையும் மறந்து என்னைப்போலவே தனிமைப்பட்டு மணல் வீட்டுக்கு வாசல் தோண்டினாள். மணல் வீடு கட்டும் போது இருந்த வேகம் வாசல் தோண்டுவதிலில்லை. வாசல் தோண்டும் போது உறுதியுடன் நிதானமாகச் செயல் பட்டாள். உதட்டைக் கடித்துக் கொண்டு தோண்டினாள். வாசல் வைக்க முடியாத படி மண் சரிந்து கொண்டேயிருந்தது. ஈரமற்ற பெருமணல் இறுகி நிற்கவில்லை. அதற்காக அவள் முகத்தில் வருத்தம் இல்லை.

அவள் முகம் எனக்குச் சொல்கிறது: 'இனிமை கெட்டுப் போகாமல் தனிமைப் பட்டு இருப்பதுதான் வாழ்வின் ரகசியம்' என்று. அவளைப் போல நானும் அந்த மணல் வீட்டின் எதிரில் அமர்ந்து வாசல் தோண்ட வேண்டும் என்று தோன்றுகிறது. இன்னொன்றும் தோன்றுகிறது.... குழந்தையைப்போல மணலில் கால்பரப்பி, முழங்கையில் மண் படிய, முகத்தைத் துடைத்துத் துடைத்துக் கன்னக் கதுப்புகளிலும் மணல் படிந்திருக்கும் அவளைப் பார்க்கும் போது அடக்கமாட்டாமல் தோன்றுகிறது.... குழந்தையாகிவிட்ட அந்த தாயைக் கைகூப்பி வணங்க வேண்டுமென்று.

இந்த மனநிலையை அப்படியே இருத்திக் கொள்ள விரும்பி அந்த இடத்தைவிட்டு வேகமாக வெளிநடப்புச் செய்தேன். அலைகளின் ஓசை, கூட்டத்தினரின் சலசலப்பு, நிலவொளியில் எனது நிழல்..... எல்லாமும் தேய்ந்து மறைய, மின்வெளிச்ச சாலையை நோக்கி நடந்தேன்.

முகிலன்



அருள்வாக்கு

நாம் போடுகிற பிள்ளையார் சுழி ஒரு சின்ன எழுத்தின் மூலம் விக்னேச்வரரை ஸங்கேதமாகத்தான் காட்டுகிறது. வெளிப்படையாகப் பிள்ளையார் பேரைத் தெரிவிக்கவில்லை. ஆனால் பழங்காலச் சுவடிகளைப் பார்த்தால் அவற்றின் ஆரம்பத்தில் வெளிப்படையாகவே 'ஸ்ரீ கணாதிபதயே நம:''

எந்தக் காரியத்துக்குமே முதலில் கணபதிப் பிரஸாதத்தைப் பிரார்த்திக்க வேண்டுமென்றாலும், இந்த எழுத்து வேலையில் மட்டும் அவருக்கு எதனால் தனி முக்கியத்துவம் என்று யோசித்துப் பார்த்தேன். 'இங்கே முதலில் ஸரஸ்வதியைச் சொல்லாமல் பிள்ளையாரை ஏன் சொல்ல வேண்டும்?' என்று நினைத்தேன். அவரைச் சொல்லும் போதும் விநாயகர் விக்நேசுவரர், வக்ரதுண்டர், ஹேரம்பர் முதலான மற்ற எந்தப் பெயரையும் போடாமல் ''கணாதிபதி'' என்றே எந்தச் சுவடியிலும் போட்டிருப்பது ஏன் என்று யோசித்தேன். வித்வான்களுடன் 'டிஸ்கஸ்' பண்ணினதில் ஒரு மாதிரி புரிந்தது. ''கண'' என்ற வார்த்தைக்கு உள்ள அநேக அர்த்தங்களில் பாஷா ஸம்பந்தமாகவே ஒன்று இருக்கிறது. ஒரே விதிக்குக் கீழே எல்லா தாதுக்கள் அல்லது வார்த்தைகளை ஒரு ''கணம்'' என்று தொகுத்து வியாகரணத்தில் கொடுத்திருக்கிறது. இந்த கணங்களுக்கெல்லாம் அதிபதிதான் கணாதிபதி. பரமேச்வரனுடைய பூதகணங்களுக்குத் தலைவரானதால் கணபதி, கணாதிபதி, கணேசர், கணநாதர் என்றெல்லாம் அவருக்குப் பெயர் இருப்பதோடு பத ஸமூஹங்களுக்கெல்லாம் தலைவர் என்ற அர்த்தத்திலும் இப்படிப் பெயர் பெற்றிருப்பதால்தான் கணாதிபதயே நம: என்று போட்டு எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்.

விநாயகர் ப்ரணவ ஸ்வரூபம் என்றால், அந்த ப்ரணவம்தானே ஸகல சப்தங்களுக்கும் வார்த்தைகளுக்கும் ஆதாரம்? அதனால் அவரைப் பத ஸமூஹங்களின் அதிபதியாகக் கொண்டு, எழுத ஆரம்பிக்கும்போது முதலில் நமஸ்காரம் தெரிவிப்பது பொருத்தந்தான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அதிர்ஷ்ட

அதிர்ச்சியிலிருந்து வடிவேலு மீளும் வரை ரமணி மௌனமாக அவனையே பார்த்துக் காத்திருந்தான்.

"சார், சார்... என்ன சொன்னீங்க? நாங்க ரெண்டு பேரும் ஒரே பெண்ணோட கழுத்திலே தாலி கட்டியிருக்கோமா?"

ரமணி புன்முறுவலித்தான்.

"நீ திருநீர்மலைக் கோயில்லே கிட்டத்தட்ட ரெண்டு வருஷங்கள் முன்னாடி தனத்துக்கு மாலை போட்டே. நீ இப்பப் பார்த்தியே அவன், ரங்கன். சில மாசங்களுக்கு முன்னாலே கந்தசாமிக் கோவில்ல என் கண் முன்னாலே தாலி கட்டினான். அவங்க கல்யாணம் கோவில் ரிஜிஸ்டர்ல கூட பதிவாகியிருக்கு."

"என் கல்யாணமும் பதிவாகியிருக்கு சார்!" என்ற வடிவேலு, "தனம் ஏன் இப்படிச் செய்தான்னு எனக்குப் புரியலே" என்றான்.

"சட்டப்படி அவ ஒரு பெரிய குத்தம் செய்திருக்கா, வடிவேலு. ஆனா அவ ஜெயிலுக்குப் போகணும்னு நான் கருவலே. என் சிநேகிதன் ரங்கனுக்கு அவகிட்டேர்ந்து விடுதலை கிடைக்கணும். அவ்வளவுதான்."

வடிவேலு சிந்தனையில் ஆழ்ந்தவனைப் போலத் தலைகுனிந்து நின்றான்.

ரமணி தொடர்ந்தான்.

"நீ ஏன் தனத்தை விட்டுப் பிரிஞ்சு வாழறே."



"காரணத்தைக் கேட்காதீங்க சார்."

"ஏன்?"

"அசிங்கம்."

"தெரியும்."

"என்ன சார் தெரியும்?"

"இந்த எட்டு மாசத்துக்குள்ளே பிராட்வேயில் இருக்கிற ஒரு லேடி டாக்டர் ரெண்டு தடவை அவ வயத்தைச் சுத்தம் செய்திருக்கா."

"இதே காரணம்தான் சார் என்னை அவளிடமிருந்து பிரித்தது. அவ கையில் ஐயாயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்துட்டு வந்துட்டேன்."

"அவ செய்ஞ்ச தப்புக்கு நீ அபராதம் கட்டினியா? விசித்திரமா இருக்கு."

"உங்களுக்கு அவ அப்பனைப் பத்தித் தெரியாது."

"மயில்சாமியை எனக்குத் தெரிஞ்ச அளவு உனக்குத் தெரிய நியாயமில்லை. அவன் நான் வேலை செய்யற ஆபீஸ்லே வாட்ச்மேனா இருந்தவன்" என்ற ரமணி, "ஆமாம், தனத்தை நீ எப்படித் தேர்ந்தெடுக்க நேரிட்டது?" என்று கேட்டான்.

"என்னோட அம்மாவின் ஒண்ணு விட்ட தாய் மாமன் மயில்சாமி. ராணுவத்தில் இருந்தவன். தனம் பன்னிரண்டு வயசுப் பொண்ணா இருக்கறப்ப, அவ அம்மா காலமானா. தாயில்லாத பொண்ணுன்னு என் அம்மா இறங்கினா. ஆனா அவ எப்படிப்பட்ட பொண்ணுன்னு அப்புறமாத் தான் தெரிஞ்சுது."

"சட்டப்படி இப்பவும் தனம்தான் உன் மனைவி. சட்ட ரீதியா நீ ஏன் விடுதலை வாங்கிக் கொள்ளக் கூடாது?"

"செய்யலாம் சார்.. ஆனா கோர்ட்டு, வக்கீல்னு ஒரே ரோதனையாப் போயிடும். நான் ஃபாக்டரிக்குப் போவேனா, இல்லே கோர்ட் படி ஏறி இறங்குவேனா? அதுவுமில்லாம இதுக்கெல்லாம் பணம் வேண்டாமா?"

"வேலையை விட்டுடு."

"விட்டுட்டு?"

"உன் கையில் தொழில் இருக்கு. உன் மனசிலே சுத்தம் இருக்கு. உன் உடம்பில் தெம்பு இருக்கு. சொந்தத் தொழில் ஆரம்பி."

"என்ன சார் விளையாடறீங்களா?

தேவதை 20

பாங்க்ல கடன் கேட்கப் போனா, ஆயிரம் கேள்வி கேட்க்றான். நூறு தடவை நடக்க வைக்கிறான். கடைசியிலே கையை விரிக்கிறான்... கோர்ட்டு செலவுக்கே பணம் இல்லேன்னு சொல்றேன், நீங்க என்னடான்னா....''

''அவசரப்படாதே, வடிவேலு. பாங்க் தராத கடனை நான் வாங்கித் தர்றேன். இன்னியிலிருந்து சொந்தத் தொழில் பத்தியே சிந்தனையா இரு.... நீ 'ஓகே'ன்னு சொன்ன மறுநாள், முதல் தவணையா முப்பதாயிரம் ரூபா கொண்டு வர்றேன். நீ. உன் மெக்கானிக் ஷாப் ஆரம்பிக்கிற அன்னிக்கு ரெண்டாவது தவணை இருபதாயிரம். ஒரு வருஷத்துக்கு அப்புறம் மாசா மாசம் உன் சக்திக்குத் தகுந்தாப்ல கடனைத் திருப்பிக் கொடு. நயா பைசா வட்டி வேண்டாம்.''

வடிவேலு மூச்சடைத்துப் போய் நின்றான். பிறகு மெல்லச் சமாளித்துக் கொண்டு, ''நீங்க இவ்வளவு தூரம் உதவி செய்ய முன் வர்றத்துக்கு ஒரே காரணம், உங்க சிநேகிதனுக்கு விடுதலை வேணும்ங்கறதுதான்! இல்லியா?'' என்றான்.

''தப்பு வடிவேலு. என் சிநேகிதன் நாளைக்குப் போலீஸ்லே புகார் கொடுத்தாலோ அல்லது நேராக் கோர்ட்டுக்கே போனாலோ, மூணு நாள்ளே என் ரங்கனுக்குத் தனத்துக்கிட்டேந்து விடுதலை கிடைச்சுடும். ஆனா நான் அப்படிச் செய்ஞ்சா, போலீசும் கோர்ட்டும் முதல் சாட்சியா யாரைக் கூப்பிடுவாங்க தெரியுமா? உன்னைத்தான், வடிவேலு! உன்னாலே அங்கே வந்து பொய் சொல்ல முடியுமா?''

''அப்ப எதுக்கு இந்த உதவி?''

''உன்னைப் பத்தி நான் விசாரிச்சேன், வடிவேலு. உன் தாத்தா அவரோட அப்பா எல்லோரும் ரொம்ப வசதியோட வாழ்ந்தவங்கன்னு தெரிஞ்சுது. உன் அப்பா சின்ன வயசில ரொம்ப ரொம்ப விளையாடி எல்லா சொத்துக்களையும் அழிச்சார்ன்னு தெரிஞ்சுது. இப்ப நீ இருக்கிற வீடு உன் அம்மா பேர்ல இருக்கு. அது அவளுக்குச் சீதன்மா வந்த சொத்து. அதை உன் அப்பாவாலே விக்கவும் முடியாது. அடமானமா வைச்சுப் பணம் புரட்டவும் முடியாது. இப்படிப்பட்ட குடும்பத்தில் வந்தவன் ஒருத்தன் தன்னோட அப்பா செய்ஞ்ச தவறுகளுக்காகக் கஷ்டப்படறான். இதைத் தவிர்க்க முடியாது. ஆனா ஒரு நல்லவனோட வாழ்க்கை ஏன் ஒரு தறுதலைப் பெண்ணாலே நாசமாகணும்?'' யோசிச்சுப் பாரு. உன் பரம்பரைப் பேரைக் காப்பாத்த இப்ப உனக்கு வழி இல்லே. அந்த வழியை நான் ஏற்பாடு செய்யறேன். அவ்வளவுதான். ரங்கனை மாதிரி நீயும் ஒரு பெண்ணாலே பாதிக்கப்பட்டவன். இதுவும் ஒரு காரணம்!''

''இப்ப நீங்க சொன்ன அம்பதாயிரத்தை இந்த ரங்கன்தானே கொடுக்கப் போறான்?''

''ஆமாம்.'' என்ற ரமணி, ''ஆனா இதெல்லாம் அவனுக்கு ஒண்ணும் தெரியாது. அவன் ஒரு அப்பாவி. சாது. அவனும் அவனோட லாட்டரி பரிசுப் பணமும் இப்ப என் பொறுப்பிலே இருக்கு. யார் கண்டா, அவன் மேலும் சில லட்சங்களை மூலதனமாப் போட்டா உன் மெக்கானிக் ஷாப் ஒரு ஃபாக்டரியாகவே கூட மாறிடலாம். நீ ரங்கனோட கூட்டாளியா ஆயிடலாம்.''

''வேணாம் சார், அவன் லட்சாதிபதியாகவே இருக்கட்டும். நான் என் சிநேகிதன் கபாலிகிட்ட கலந்தாலோசிச்சு முடிவு சொல்றேன்.''

''அப்ப விவாகரத்து?''

''சொல்றேன்.''

டாக்டர் திருமலை தினந்தோறும் இரண்டு தடவை வந்து ரங்கனைப் பார்த்து



விட்டுப் போனார். உள்ளுக்குள்ளே நீண்ட காலமாக ஒளிந்திருந்து அவ்வப்போது நிழலை மட்டும் காட்டிக் கொண்டிருந்த பூதம் இப்போது தலை நீட்டி விட்டது.

ரங்கன் சிரமமில்லாமல் சுவாசிக்கப் பிராண வாயு அடங்கிய சிலிண்டரை வைத்தார்கள். ரங்கன் பயந்து போனான்.

''ரமணி சார், எனக்குப் பயமா இருக்கு. நான் செத்துப் போயிடுவேனா, ரமணி சார்?''

''பயப்படாதே ரங்கா... இத்தனை நாளா நீ பியூனா இருந்தப்ப இந்த வியாதி தலை தூக்கித்தா? நீ எப்ப லட்சாதிபதியாவேன்னு அது காத்துட்டிருந்த மாதிரி இப்ப வந்திருக்கு. உன் பணத்திலே கொஞ்சம் செலவழிய வேண்டாம்? அதான் கடவுள் ஒரு பக்கம் கொடுத்து இன்னொரு பக்கம் தன் காணிக்கையை வாங்கிக்கிறார்.''

''சார் என் பணம் பாங்க்குக்கு வந்துட்டுதா?''

''முந்தா நான் சனிக்கிழமை உன் கணக்குக்கு எல்லாப் பணமும் வந்தாச்சு.''

''இருபத்தஞ்சு லட்சமுமா?''

''இல்லே. வருமான வரி, ஏஜெண்ட் கமிஷன்னு கழிவுகள் போக பதிமூணு லட்சத்து அம்பதாயிரம் ரூபா'' என்ற ரமணி, ''ஸிஸ்டர் நீங்க டியூபை ஃபிக்ஸ் பண்ணுங்க!'' என்றான், நின்று கொண்டிருந்த நர்ஸைப் பார்த்து.

''ஒரு நிமிஷம், ரமணி சார்.''

''என்ன ரங்கா?''

''நான் சொன்னா நீங்க என்னைத் திட்டக் கூடாது.''

''என்ன, சொல்லு.''

''நம்ப முதலாளி சொன்னார், நான் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாயாவது கொடுக்கணும்னு.''

''தெரியும். எங்கிட்டேயும் சொன்னார்.''

''மொதல்ல நீங்க அதை வாங்கிக்கணும்.''

''நீ நம்ப சிநேகிதத்துக்கு விலை பேசறியா, ரங்கா?''

''இல்லே ரமணி சார். உங்க இடத்தில வேறே யாராவது இருந்திருந்தால் எனக்குப் பைசா கெடைச்சிருக்காது!''

''அப்படீன்னா, நான் உன்னை ஏமாத்தாம இருந்ததுக்கு எனக்குப் பரிசு கொடுக்கிறே, இல்லே?''

''சார், சார்...'' திடீரென்று இருமல் தாக்க, மூச்சு அடைக்க, ரங்கன் திணறிப் போனான்.

அவன் மீண்டும் சமாளித்து ஒரு நிலைக்கு வரும் வரை காத்திருந்த ரமணி, ''இதோ ஸிஸ்டர் இப்ப உனக்கு ஆக்ஸிஜன் கொடுக்கப் போறா... அதுக்கு முன்னாடி ஒண்ணே ஒண்ணு சொல்லிடறேன், ரங்கா. நான் லட்சம் ரூபா வாங்கிக்கிறேன். ஆனா அதுக்கு அப்புறம் நீ யாரோ நான் யாரோ! தனம், மயில்சாமி உன் அண்ணன் லிங்கம் எல்லாரையும் நீயே சமாளிச்சுக்கணும்! என்ன, புரியறதா? ஸிஸ்டர்! ப்ளீஸ் கோ ஆன் வித் யுவர் ஜாப்!'' என்றான்.

தனக்குள் பொங்கி வந்த உணர்ச்சிகளை ரங்கனால் கொட்ட முடியவில்லை.

குழாயைப் பொருத்திய பிறகு, பிராண வாயு உள்ளே செல்லுகையில், தன் உடல் நிலை முழுதுமே குணமாகி விட்டதான பிரமை பிறந்தது. கண்களை மூடிக் கொண்டிருந்தவன்,

''ரமணி சார்!'' என்று மெல்லிய குரலில் அழைத்தான்.

பதில் வராமற் போகவே கண்களைத் திறந்தான்.

ரமணி அங்கே இல்லை.

நர்ஸும் போயாகி விட்டது.

ரங்கன் தனக்குள் அழ ஆரம்பித்தான். கண்முன் யார் யாரெல்லாமோ வந்து போனார்கள்.

மயில்சாமி உறுமினான்.

தனம் கழுத்தை நெரித்தாள்.

அண்ணன் சிவலிங்கமும் அண்ணியுமாக அவனுடைய இரு கைகளையும் ஒடித்தார்கள்.

நாட்கள் நகர்ந்தன.

ரங்கன் மீண்டும் பழையபடி நடமாடலானான். தனக்கு எப்பேர்ப்பட்ட வியாதி வந்திருக்கிறது என்று அவனுக்கு இன்னும் தெரியவில்லை. முன்பெல்லாம் வெயிலில் நீண்ட நேரம் நடந்து வியர்த்தாலோ, அல்லது குளிர்காலத்தில் அதிகாலை நேரத்தில் கண் விழித்தாலோ திடீரென்று மூச்சுத் திணறும். இது அவனுடைய பதினாறாவது வயதில் ஆரம்பித்தது. கும்பகோணம் டாக்டர், ஒரு சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். மூச்சுத் திணறல் வரும்போதெல்லாம் பயமில்லாமல் மாத்திரையை விழுங்குவான். திணறல் பத்துப் பதினைந்து நிமிடங்களில் நின்று விடும். சென்னை வந்த



''இவரு ஆட்டோ ஓட்டியபடியே சட்டக் கல்லூரியில் படிச்சு வக்கீலாயிருக்கணுமே...?''

''அட, இவ்வளவு கரெக்டா எப்படிச் சொல்றீங்க?''

''சட்டத்தோட சின்னச் சின்ன இடைவெளிகளிலேயும் பூந்து வெளிலே வர்றாரே, அதை வைச்சுத்தான்!''

— வேதபுரி, எஸ். இரமேஷ்.



''எவனோ, 'புது செருப்பை' அடிச்சிட்டுப் போயிட்டாண்டி!

''எதுக்கு, வருத்தப்படறீங்க? போன வாட்டி... ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டு நீங்க அடிச்சிட்டு வந்ததுதானே?''

— ஆர். அப்துல் சலாம்.

பிறகும் அதே மாத்திரைகள் உதவி செய்தன. ஆனால் இப்போது பிராணவாயு செலுத்தும் அளவுக்கு சுவாசக் குழாய் பலவீனமாகி விட்டது. என்ன செய்ய?

இப்போது ரங்கன் பயப்படவில்லை. கை நிறையப் பணம் இருக்கிறது. கூப்பிட்ட குரலுக்கு டாக்டரும் நர்சும் இருக்கிறார்கள். மூச்சு விடக் கொஞ்சம் சிரமம் இருந்தாலும் பிராண வாயு வந்து விடும். எல்லாவற்றிற்கும் மேலாக ரமணி இருக்கிறான்.

அன்று மாலு அவனைப் பார்க்க வந்தாள். ரங்கனுக்குப் பெருமையாக இருந்தது.

''வாங்க, மாலு அம்மா... வாங்க.''

''எப்படி இருக்கே ரங்கா? ரமணி சொன்னார் நீ ஒரு வாரமா படுக்கையில் கிடந்துட்டேன்னு. ஆக்ஸிஜன் கூடக் கொடுத்தாங்களாம்!''

''எல்லாம் ரமணி சார் செய்த ஏற்பாடு, மாலு அம்மா.

மாலு பையிலிருந்து ஆறு சாத்துக்குடிப் பழங்களை எடுத்து அவனருகே வைத்தாள்.

''இதெல்லாம் எதுக்கு, மாலு அம்மா?''

''உரிச்சு சுளை சுளையாத் திங்கத்தான்! நான் வரட்டுமா?''

''சரிம்மா, ரமணி சார் என்ன செய்யறார்?''

''நீ செக் புக்லே கையெழுத்து போட்டியே, நினைவு இருக்கா?''

''ஆமாம். டாக்டர் செலவு, அப்புறம் அந்தக் கழுதைக்குக் கொடுக்கன்னெல்லாம் சொன்னாரு. அதான் செக்கிலே கையெழுத்துப் போட்டேன். அவ்வப்போது பணம் எடுக்கத் தோதா இருக்க. ரமணி சார் பட்டணத்திலேயும் என் பேர்ல கணக்கு ஆரம்பிக்கச் சொன்னாரு. சேலம் பாங்க்லேர்ந்து இந்த பாங்க்குக்கு அப்பப்ப பணம் வந்துகிட்டேயிருக்கும் மாலு அம்மா.''

''இதெல்லாம் எனக்குத் தெரிஞ்சதுதான் ரங்கா.. ஆனா உனக்குத் தெரியாத ஒரு விஷயத்தை நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்க, மாலு அம்மா.''

''மாலு அம்மான்னு கூப்பிடறதை நிறுத்தினாத்தான் சொல்லுவேன்.''

''வேறே எப்படி அம்மா நான் உங்களை அழைப்பேன்.''

''மிஸ். மாலு... இல்லே மாலு மிஸ்.''

''சரிம்மா'' என்ற ரங்கன் புன்முறுவலித்தான். பிறகு, ''இப்பச் சொல்லுங்க'' என்றான்.

''என் அம்மா அப்பா ரெண்டு பேரும் ரமணியோட அம்மா அப்பாவைப் பார்க்க வரப் போறாங்க... அதுவும் நாளை மறுநாள் வெள்ளிக் கிழமை அன்னிக்கு!''

''எதுக்கும்மா?''

மாலுவுக்குக் கோபம் வந்தது.

''என்ன ரங்கா இது கூடவாத் தெரியாது? எங்க வீட்டு மனுஷங்க எதுக்கு ரமணி வீட்டு மனுஷங்களைப் பார்க்க வருவாங்க? பொழுது போகாமயா?''

''இப்பப் புரியுது, மாலு மிஸ்... கல்யாண விஷயமாத்தானே?''

''கரெக்ட்.''

''என்னிக்கு முகூர்த்தம்?''

''எங்க வீட்ல அவசரப்படறாங்க. ஆனா ரமணி, தான் காத்திட்டிருக்கணும்னு சொல்றார்.''

''ஏன் ரமணி சார் அப்படிச் சொல்லணும்?''

''நீ நினைச்சா அவர் மனசை மாத்த முடியும்?''

''எப்படிம்மா?''

''கெஞ்சு. அழு. மனசு உடைஞ்சு போயிடும்னு சொல்லு. மாலு தற்கொலை பண்ணிப்பான்னு பயமுறுத்து.''

''இதுக்கெல்லாம் அவர் அசர மாட்டார், மாலு மிஸ். வேறே ஏதானும் ஒரு வழி சொல்லுங்களேன்.''

''இப்படிச் செய்யறியா?''

''எப்படி?''

''மறுபடியும் தனத்தோட வாழப் போறேன்னு சொல்லு. எல்லாப் பணத்தையும் அவ பேருக்கும் சேர்ந்து பாங்க் கணக்கிலே வைச்சுக்க முடிவு செய்ஞ்சுட்டதாச் சொல்லு.''

''மாலு மிஸ், அது பொய் இல்லியா? நான் விவாகரத்துக்காகக் காத்துட்டிருக்கேன்னு அவருக்குத் தெரியுமே?''

''நீ உன் மனசை மாத்திக்கிட்டதாச் சொல்லு. நாங்க மாலை மாத்திக்கிறதை நீ கண் குளிரப் பார்க்க வேண்டாமா? ரமணி சார் உனக்காக உசிரையே கொடுக்கிறார். நீ எனக்காக இந்த உதவி செய்ய மாட்டாயா?''

''நீங்க வேறே, ரமணி சார் வேறே இல்லேம்மா. நானும் என் உசிரையே கொடுத்தாவது உங்க கலியாணத்துக்கு ஏற்பாடு செய்யப் பார்க்கிறேன்!'' என்றான் ரங்கன்.

மாலு அவனைப் புன்முறுவலுடன் பார்த்தாள்.

''ரொம்பத் தாங்க்ஸ், ரங்கா!'' என்றாள்.

(தொடரும்)

ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி

20

சாந்தி ஆசனம்

பத்மாசனம் தொடங்கி சர்வாங்காசனம் வரை பல ஆசனங்களைப் பற்றிக் கூறியிருக்கிறேன். இவற்றில் எல்லாம் முக்கியமான, பொதுவான விஷயங்கள் சில உண்டு:

எந்த ஆசனத்தையும் முரட்டுத்தனமாக 'இதோ செய்து காட்டுகிறேன் பார்!' என்று சவாலாக ஏற்றுச் செய்யக் கூடாது. உடலையும் உள்ளத்தையும் நம் வசப்படுத்துவதில் படிப்படியாக முன்னேற வேண்டும். வலி தோன்றினால் நிறுத்தி, இடைவெளி விட்டு, மீண்டும் முயற்சி செய்ய வேண்டும். மறுநாள் தொடர வேண்டும்.

ஏற்கெனவே நோயுள்ளவர்கள், ஆபரேஷன் செய்து கொண்டவர்கள் போன்றோர், யோகாசன நிபுணர்களின், மற்றும் டாக்டர்களின் யோசனைப்படி நடந்து கொள்வதே நல்லது. மற்றவர்களும் யோகாசன நிலையம் ஏதேனும் அருகில் இருந்தால், அங்கே சென்று, 'நாம் சரியாகத்தான் செய்கிறோமா' என்று நேரில் கேட்டு அறிந்து கொள்ளலாம்; திருத்திக் கொள்ளலாம்.

கர்ப்பிணிகள் புதிதாக எந்த ஆசனமும் செய்யக் கூடாது. ஏற்கெனவே செய்து வருகிறவர்கள், கர்ப்பமுற்றால் ஒவ்வொரு ஆசனமும் எத்தனை மாத காலம் வரை செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ, அந்த அளவுக்கு மட்டுமே செய்ய வேண்டும்.


ஒவ்வொரு ஆசனத்தையும் நிதானமாகச் செய்ய வேண்டும். அவசரமோ, பரபரப்போ, வேகமோ காட்டக் கூடாது. மனமும் உடலும் அமைதியில் குவிய வேண்டும்.

ஒவ்வொரு ஆசனம் செய்து முடித்த பிறகும் குறைந்தபட்சம் ஒரு நிமிஷம் ஓய்வு கொள்ள வேண்டும். அன்றைய போதுக்கு ஆசனங்கள் செய்து முடித்த பிறகும் சற்று நீண்ட ஓய்வு அவசியம். இந்த ஓய்வு எடுப்பது எப்படி என்பதைத்தான் இந்த வாரம் கூறப் போகிறேன். வேறு பல ஆசனங்கள் பற்றிக் கூற வேண்டியது பாக்கியிருக்கிறது என்றாலும், இப்போதே பலர் இந்தக் கட்டுரைகளைப் படித்து விட்டு ஆசனம் செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்பதால், ஒவ்வொரு நாளும் கடைசியாகச் செய்ய வேண்டிய 'சாந்தி ஆசனம்' பற்றி இப்போதே கூற வேண்டியிருக்கிறது. இந்த சாந்தி ஆசனத்தை ''சவாசனம்'' என்றும் சொல்வார்கள். பெயரைக் கண்டு பயந்து விட வேண்டாம். பிடிக்கவில்லை எனில், ''சாந்தி ஆசனம்'' என்றே கூறி விட்டுப் போகலாமே!

சாந்தி ஆசனத்தை, அன்றையப் போதுக்கு எல்லா ஆசனங்களையும் செய்து முடித்த பிறகு, ஓய்வுக்காகவும் சாந்திக்காகவும் கடைசியாகச் செய்ய வேண்டும். ஆசனங்களினால் பெற்ற பலனைப் பூரணமாக அனுபவிக்க இதைச் செய்தே ஆக வேண்டும். நீங்கள் இப்போது ஓர் ஆசனம் செய்தாலும், இரண்டு செய்தாலும்... ...பத்து ஆசனங்கள் செய்தாலும் கட்டாயமாகக் கடைசியாக இந்தச் சாந்தி ஆசனத்தைச் செய்யவும். என்ன அவசரமானாலும் இதை விட்டு விடாமல் செய்தே ஆக வேண்டும்.

'இது சுலபம்தானே, வெறுமே படுத்திருப்பது ஒரு கஷ்டமா?' என்று பலர் நினைக்கலாம். பார்க்கத்தான் சுலபம்; செய்வது கஷ்டம். இந்த ஆசனம் பூரணமாகச் சித்தியாகப் பலருக்கு ஆறு மாதம் ஆகும்; சிலருக்கு ஒரு வருஷம் கூட ஆகும்! அவரவர் மனோபலத்தைப் பொறுத்தது

விரிப்பில் மல்லாந்து படுக்கவும். இரண்டு கால்களும் சேர்ந்தாற்போல் நீட்டி வைக்கவும். கைகளைப் பக்கத்தில் உடலை ஒட்டினாற்போல் வைத்துக் கொள்ளவும். உள்ளங்கையும் விரல்களும் தன்னிச்சையாகப் பாதி மூடியும் மூடாமலும் இருக்கலாம். கழுத்து வளையாமல், நேராக இருக்க வேண்டும். முகம், மேல் கூரையை நோக்க, நேராய் இருக்க வேண்டும். கண்களை முழுதுமாக மூடிக் கொள்ளலாம்; ஆனால் இமைகளை



இருக்கக் கூடாது. இமைகள் எப்படியோ, அவ்வாறே உடலின் எல்லா உறுப்புக்களும்— விறைப்பே கூடாது. சுபாவப்படி விட்டு விட வேண்டும். உடல் முழுவதையும் இவ்வாறு தளர்த்தி, நெகிழ விட வேண்டும். சற்றுக் கூட எந்த உறுப்பும் விறைப்பாய், பிகுவாய் இருக்கக் கூடாது. இது முதல் படி.

மனசை வேறெதிலும் செல்ல விடாமல், எதையும் நினைக்காமல், எந்த எண்ணத்தையும் மனத்தில் நுழைய விடாமல் தடுக்கவும். உடல் அவயவங்கள் ஒவ்வொன்றையும் மனத்தினால் கீழ்வருமாறு பாவித்து அனுபவிக்கவும்: தென்றல் உடல் மீது படர்வது போலும், அதனால் ஒவ்வொரு உறுப்பும் இன்பம் அடைவது போலும் நினைக்கவும். நமது உடலின் நலிவு, களைப்பு எல்லாம் தீர்ந்து, பூரண சுகமாய், இன்பமாய் இருப்பதாக மனத்தினால் எண்ண வேண்டும். இது இரண்டாம் படி.

அதே இன்ப நினைவுடன், அதே நிலைமை கலையாமல், அவயவங்கள் ஒவ்வொன்றையும் நினைக்க வேண்டும். ஒவ்வொரு அங்கமாக நினைத்து, அந்தந்த அங்கத்துக்குத் தக்க 'சாந்தி ஜெபம்' செய்து, ஊக்கமும் உற்சாகமும் அளித்துக் கடமைகளையும் நினைவூட்டி, பிறகு, அதற்கு ஓய்வு தருவதாக எண்ண வேண்டும். வாய் திறவாமல் ஒவ்வொரு உறுப்புடனும் மானசீகமாகப் பேச வேண்டும். முக்கியமான விஷயம்: மனம், உடலின் உள் உறுப்புக்களையே வரிசையாக எண்ண வேண்டும். புற உறுப்புக்களை நினைக்கக் கூடாது. இதைத்தான் சாந்தி ஜெபம் என்பது:

''பாதங்களே தளர்வீர்களாக, ஓம் சாந்தி! கெண்டைக் கால்களே பலம் அடைவீர்களாக, தளர்ந்து, ஓய்வு பெறுவீர்களாக; ஓம் சாந்தி! முழங்கால்களே! விழிப்பாய் இருங்கள்! எந்த நீரையும் சேர விடாதீர்கள். மூட்டுவலி உண்டாக இடம் தராதீர்கள்; ஓம் சாந்தி! துடைகளே, தளர்வீர்களாக; உங்களுக்கு ஓய்வு அளிக்கிறேன்; ஓம் சாந்தி! மலக்குடலே! உன்னிடம் சேரும் மலங்களை ஒழுங்காக, நேரம் தவறாமல் வெளியே தள்ளுவாயாக. மலச் சிக்கலே ஒழிந்து போ! ஓம் சாந்தி! சிறுகுடலே, நீ உத்தமன். ஆகாரத்திலுள்ள சத்துக்களை நன்றாகக் கிரகித்து ரத்தத்துடன் கலப்பாயாக. ஓம் சாந்தி! வயிறே! இரைப் பையே! உன்னை வருத்தி எடுக்க மாட்டேன். அளவான ஆகாரத்தை நேரப்படி சாப்பிடுவேன். நீயும் எனக்கு ஒத்துழைப்புத் தா. ஓம் சாந்தி!...'' என்று இப்படியே தொடர்ந்து நுரையீரல், கல்லீரல், பான்கிரியாஸ், நாளமில்லாச் சுரப்பிகள், சிறுநீர்கங்கள், இருதயம், மூளை வரையில்... ஒவ்வொரு உறுப்பையும் நினைத்துப் பார்த்து, வாழ்த்தி; அதன் கடமைகளை நினைவூட்டி; தளர்ந்து ஓய்வு எடுக்கக் கோரி, பிறகு 'சாந்தி' சொல்ல வேண்டும்.

''மூளையே வாழ்க! உன் ஆணையால் சகலமும் நடக்கிறது. இதோ, அமைதி அளிக்கிறேன். சாந்தி அளிக்கிறேன்!'' என்று கூறுவதுடன் மூன்றாம் நிலை முடிவடைகிறது.

பிறகு, நான்காவது நிலையில் மனத்தைப் புருவ மத்தியில் நிறுத்தி, தியானத்தில் இருக்க வேண்டும். தியானத்தில் இருக்கும் போது குத்து விளக்கின் தீபச் சுடரை மட்டும் எண்ணலாம். அல்லது, 'ஓம்' என்னும் பிரணவம், பிரகாசத்துடன் ஒளிர்வது போல் நினைக்கலாம். மலர்ந்த தாமரையைக் கருதலாம். இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டும் புருவ மத்தியில் இருப்பதாக மானசீகமாக எண்ணி, 'ராம ராம' என்றோ, 'ஓம் நமச்சிவாய' என்றோ, 'முருகா முருகா' என்றோ 'நாராயணா,' என்றோ, அவரவர் விருப்பப்படி நிதானமாக, அமைதியாகக் கூறி வரலாம். இறை உணர்வு இல்லாதவர்கள் கூட, ''ஓம் சாந்தி; ஓம் சாந்தி'' என்று ஜெபிக்கலாம்!

(தொடரும்)

மாதம் ஒரு தொகுதி

தாரமங்கலம் தொகுதி வாசகர்களே!

விரைவிலேயே உங்கள் தொகுதியை 'விசிட்' செய்யப் போகிறோம். எனவே, உங்கள் தொகுதி பற்றிய குறைகள், அதன் மேம்பாட்டுக்கான யோசனைகள், உங்கள் எம். எல். ஏ. கே. அர்ஜுனன் உங்களுக்கு என்ன செய்துள்ளார், அல்லது செய்ய வேண்டும்... போன்றவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். நேரில் வந்து பார்ப்பதோடு எம். எல். ஏ.வையும் சந்தித்துப் பேசுவோம்.

'மாதம் ஒரு தொகுதி' என்று குறிப்பிட்டு நீங்கள் எழுதும் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்துசேரக் கடைசி நாள்: 31.8.90.

— ஆசிரியர்



வட்டமேஜை

* அஞ்சலியாக நடித்த ஷாமிலி அசத்தவில்லை: அசைத்திருக்கிறார் — மனித இதயங்களை. மூளை வளர்ச்சியில்லாத மனிதர்களைப் பார்க்கும் போதெல்லாம் 'அஞ்சலி' நினைவுதான் வருகிறது. மணிரத்னம் ஒரு ஜீனியஸ்.

சேலம் — 1. கே. பி. சுப்ரமணியன்.

* 'அஞ்சலி' உருவானது பற்றி மணிரத்னம் விளக்கியிருக்கும் நிகழ்ச்சிகள் மனத்தைக் கனமாக்கின. பலரும் இது போன்று, நாட்டுக்குத் தேவையான — நல்ல கருத்துக்களைத் திரைப்படம் மூலம் சொல்ல வருவார்களேயானால் மிகவும் நன்றாய் இருக்கும். சிந்தனையைத் தூண்டும் வகையில் சமூகப் பிரச்னையைச் சொன்ன மணிரத்தினத்துக்குப் பாராட்டுக்கள்.

மதுரை — 1. பிரபாகர் ப்ரியன்.

* மணிரத்தினத்தின் பேட்டியைப் படிக்கையில், அவர் அந்தக் குழந்தையின் பாத்திரமும், நடிப்பும் இயற்கையாய் அமைவதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்று புரிந்தது. அஞ்சலி பாத்திரத்தை மக்களிடையே நல்ல வரவேற்பு பெறச் செய்ததையும் மனதாரப் பாராட்டத் தோன்றுகிறது. புகைப்படங்களும் அட்டையும் அருமை.

தஞ்சாவூர் — 1. ஆர். ராம்சந்தர்.

* ''அடவி திவட்டியலு'' — சினிமா பற்றிய விளக்கமும், அந்தப் படத்தின் பின்னணியும் ஒவ்வொரு வாசகரின் நெஞ்சத்திலும் ஒரு பாதிப்பை உண்டாக்கியிருக்கும் என்று சொல்லலாம். பாரத தேசத்தின் பாழாய்ப் போன அரசியல்வாதிகளின் அயோக்கியத்தனமான அணுகுமுறையினால் ஒரு தீவிரவாதக் கூட்டம் நக்ஸலைட்டுகள் என்கின்ற பெயரில் உருவாகியிருப்பது ஒரு பரிதாபமான நிலை. நக்ஸலைட்டுகள் தனியாக அரசாங்கம் நடத்துகிறார்கள் என்பதெல்லாம் ஒப்புக் கொள்ள முடியாத விஷயம். எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகச் செயல்பட்டு, இந்த வன்முறைக் கும்பலை அடக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கோப்பனூர்புதூர். என். ரங்கசாமி.

* வி. பி. சிங்கின் நடவடிக்கையைப் பாராட்டியது மட்டுமல்லாமல், தேசிய அரசு அமைக்கலாம் என்றும் பிரதமருக்குத் தலையங்கத்தில் கோடிட்டுக் காட்டி இருப்பது போற்றுதலுக்குரியது!

சங்கராபுரம். கே. மகேஷ்.

* கபில்தேவைத் தட்டியும், தொ(ல்)லைக் காட்சியைக் குட்டியும் போடப்பட்ட கார்ட்டூனில் கபில்தேவை இடது கை ஆட்டக்காரராக்கி வரைந்துள்ள தவறுக்காக... கிட்டே வாருங்கள் ஒரு குட்டு வைக்கிறேன்.

சென்னை — 28. எம். தியாகராஜன்.

* தாய், வெள்ளி விழாப் பெண்கள் ஆகிய இரண்டு கதைகளிலுமே தாய்மைப் பண்பு சிறந்து விளங்குகிறது. 'தாய்' சிறுகதையில் தோல்வி தழுவிய தாய்மை, 'வெள்ளி விழாப் பெண்கள்' கதையில் வெற்றி தழுவிய, எதிர்பார்ப்பு நிறைவேறிய தாய்மைப் பண்பு.

மதுரை — 7. எஸ். திருமலை.

* 'வெள்ளி விழாப் பெண்கள்' மிக மிக அபூர்வமான சிறுகதை. பார்த்துப் பார்த்துக் கதை பண்ணி, நகாசு வேலை செய்து, வெகு அருமையாகப் படைத்துள்ளார் சத்தியப்ரியன். கதையில் கனம் நிரம்பி, கருத்து இழைகிறது. மகளிரின் விடுதலை என்னும் கருத்தைப் படிப்படியாக உயர்த்தி, நுல்லியமாக எடுத்துக்காட்டிய அவருடைய சாமர்த்தியத்துக்குப் பாராட்டுக்கள்.

திருச்சி — 21. ம. ந. ராமசாமி.

* வியாண்டர் பயஸ் பேட்டி சைனில் ஜூனியராக இருந்தாலும் எண்ணத்தில் பயஸை ஒரு ஸீனியராகக் காட்டியது. 'முடிவு முக்கியமல்ல முயற்சிதான் முக்கியம்' என்ற வாக்கியம் கீதையை நினைவுபடுத்தியது. அவருக்கு நல்வாழ்த்துக்கள்!

மாடம்பிள்ளை தர்மம். ஜ. செல். வாசு.

* குறையைக் கூறுங்கள் களையக் காத்திருக்கிறோம் என்று மனமுவந்து திருச்சி நகர சபைத் தலைவர் கூறியதோடு நில்லாமல், நமது நிருபருடன் ஜூனியர் இன்ஜினியரையும் அனுப்பி, நிலைமையை நேரில் காண வைத்த அவரின் பெருந்தன்மையைப் பாராட்டியே ஆக வேண்டும்.

திருச்சி — 2. ஆற்காடு எழிலன்.

* 'தமிழுக்கும் அமுதென்று பேர்' — சிறந்த படைப்பு. பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவையொட்டி பொருத்தமாக வெளியாகியிருக்கும் அற்புதமான எழுத்தோவியம்... பரிசு பெற்ற ஜெயபிரபாவுக்கும், பரிசு தந்த உங்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.


பூனா — 4. ஆண்டாள் பிரியதர்சினி.

* என்னதான் அந்நியமண்ணில் ஏராளமாகச் சம்பாதித்தாலும், தாய்நாட்டை விட்டுச் செல்வதால் இழப்பு ஏராளம் என்பதை அழகாக, அழுத்தமாக, 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற சிறுகதையின் மூலம் சொல்லியிருக்கிறார் ஜெயபிரபா. பணத்திற்காக எங்கேயும் போகத் தயாராய் இருப்பவர்கள் உணர வேண்டிய கருத்து அது!

சென்னை — 21. அ. க. குமாரன்.

* அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெறும் குவைத் நாட்டில் வாழும் இந்தியரான திரு. வெங்கட்ரமணி (ஜெயபிரபா) எழுதிய 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற கதை, உதட்டிலிருந்து தாய்மொழியின் பெருமையை உணர்த்தாமல், உள்ளத்திலிருந்து உணர்த்தியது போல் இருந்தது.

திருச்சி — 6. கே. என். குமார்.



அசத்தவில்லை, அசைத்து விட்டார்!

தனிமை

கதவைத் திறந்த ராமசேஷனின் கைகள் நடுங்கின. உள்ளே அடியெடுத்து வைத்த போது கால்கள் கனத்தன. நெஞ்சத்தின் பாரம் முழுதுமே கால்களில் இறங்கி நடக்க முடியாமல் அழுத்துவதைப் போல் உணர்ந்தார்.

மெதுவாகத் திரும்பிக் கதவைச் சாத்தி, யந்திரத்தனமாய் நடந்து, சாய்வு நாற்காலியை அடைந்து, அமர்ந்து, நிதானமாய்ச் சாய்ந்து பெருமூச்சு விட்டார்.

எதிரே சுவரில் லோசனியின் படம்.

எப்போதும் அந்தச் சாய்வு நாற்காலியிலேயே படிந்து ஓய்வெடுக்கும் ராமசேஷனின் பார்வையில் நிரந்தரமாகப் படர்ந்து கொண்டிருக்கும் வகையில் மாட்டப்பட்டிருந்த படம்.

கனிவான பார்வை... இதமான சிரிப்பு... லோசனி...

படத்தை ஏறிட்ட போது, முதல் முறையாக அவருடைய மனவலு வடிந்துபோய்த் தனிமை உணர்வு தலைநிமிர்த்தி நின்று அவரைப் பயமுறுத்தியது.

எதைப் பற்றியும் எப்போதுமே கவலைப் படாதவர் ராமசேஷன்.

'யாருடைய உதவியும் தேவையில்லை. யாரை நம்பியும் நான் இல்லை. என் கால்களின் மீது நின்று என்றைக்கும் எதையும் என்னால் சமாளித்து விட முடியும்' என்று சவால் விட்டு இத்தனை காலமும் வாழ்ந்து விட்டவர்.

அவருடைய முடிவுக்கெதிராக அவன் விரும்பிய யாரோ ஒரு பெண்ணையே மணந்து கொள்ளப் பிடிவாதம் பிடித்த ஒரே மகனை — மனைவியின் நகல் பிம்பமாக விளங்கி, அந்த ஒரு காரணத்தினாலேயே அவர் நெஞ்சம் முழுதும் வியாபித்திருந்த செல்லப் பிள்ளையைக் கொஞ்சமும் தயக்கமின்றி வீட்டை விட்டே வெளியேற்றியவர்.

அதன் காரணமாகக் கண்ணீர் விட்டுக் கதறிய லோசனியிடம், ''இதப் பாரு, உனக்கு நான்... எனக்கு நீ... அது போதும். வேறே யாரும் நமக்குத் தேவையில்லை'' என்று முரட்டுத்தனமாகக் கூறி அவளுடைய மன்றாடலை மறுத்து உதறியவர்.

திடீரென்று எதிர்பாராத வகையில் லோசனியின் மரணம் நிகழ்ந்து விட்டதைத் தெரிந்து கொண்டவுடன், ''நல்ல காரியம் செய்துட்டேம்மா. எனக்கு முந்தி நீ போனது தான் சரி. நான் போய் நீ தனியாயிட்டா ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிடுவே. அப்படியில்லாம இப்படி நடந்ததுக்கு நீ ரொம்பவும் புண்ணியம் செய்திருக்கே'' என்று கூறி அழ மறுத்தவர்.

அந்த ராமசேஷன்தான் அவள் இறந்து போன இரண்டாவது நாள் இப்படி உடைந்து சிதறிப் போனார்.

மரணம் யாரை எப்போது தழுவும் என்பதைச் சொல்ல முடியாது என்பது அவர் அறியாதது அல்ல. அது ஓர் இயற்கை நியதி என்பதும் தெரிந்ததுதான். என்றாலும், லோசனியின் விஷயத்தில் அது நிகழ்ந்த வகைதான் எதிர்பாராதவிதமாக அமைந்து போய் விட்டது.

மகன் வீட்டை விட்டு வெளியேறிப் போய் விட்ட நாளிலிருந்தே அவள் உள்ளுக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்தாள். வெளிப்படையாகச் சொல்லித் தணித்துக்

கல்கி பொன்விழா போட்டி
வாசகர் யோசனை — 1

கல்கி பொன் விழாவையொட்டி வாசகர்களிடமிருந்து யோசனைகள் வரவேற்கப்படுவதாக அறிவித்திருந்தோம். ஏராளமான வாசகர்கள் யோசனைகளைத் தெரிவித்து எழுதி வருகிறார்கள். அவற்றுள் முதல் யோசனையாகத் தேர்வு செய்யப்பட்டு, ஹிந்து நாளிதழில் 6.8.90 அன்று வெளியான கீழ்க்கண்ட செய்தியை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சிறுகதை வெளியாகியுள்ளது.

Costly error

GAINESVILLE, Florida: A doctor was fined and another faced disciplinary action for mistakenly performing open-heart surgery on the wrong woman after a mix-up in patient records. Besides fining Dr. Howard W. Ramsey $ 5,000 on Friday, the State Board of Medicine ordered him to write an article for other doctors warning them about making the same mistake. Its action is still pending against Dr. Daniel Knauf, a University of Florida surgeon who operated on the healthy Palatka woman in 1988, for letting an assistant, who was not a doctor, examine the patient before surgery instead of doing it himself. During surgery, Mr. Knauf found the woman's valve normal and sewed her up again. — AP

இச் செய்தியின் அடிப்படையில் கதையெழுதலாம் என்று யோசனை தெரிவித்தவர்:

ஆர். ஸ்ரீதரன்,
பிளாட் எண்: 1, முதல் மெயின் ரோடு,
பானு நகர், அம்பத்தூர்,
சென்னை — 53.

ரூ. 25 பரிசு பெறுகிறார் ஸ்ரீதரன்.

— ஆசிரியர்.

கொள்ள வழியில்லாமல், கணவருக்கெதிராகத் தன் உள்ளக் கொந்தளிப்பைக் கொட்டி அதனை வடிந்து போகச் செய்யத் துணிவில்லாமல் அடக்கி அடக்கி, அது உள்ளுக்குள்ளேயே எதிரொலித்து எதிரொலித்து, அடுத்த நாலைந்து ஆண்டுகளில் ரத்த அழுத்தம் என்கிற பெயரில் அது அவள் உடல் நலத்தையே பாதித்து, நடமாட்டத்தையே கட்டிப் போட்டு விட, ஒருநாள் அவள் நிலை மோசமாகியது.

அப்போதும் அவர் கலங்கவில்லை.

''உனக்கு நான்... எனக்கு நீ... அது போதும். வேறே யாரும் நமக்குத் தேவையில்லை'' என்று முன்னர் சொன்னதையே திரும்பச் சொன்னார்.

''ஒத்தாசைக்கு ஒருத்தரும் இல்லைங்கறதுக்காக உன்னை இப்படியே சீர்குலைஞ்சு போக விட்டுட மாட்டேம்மா... வீட்டில வச்சுக் கவனிச்சுக்க முடியலைன்னா இருக்கவே இருக்கு நர்ஸிங் ஹோம். சேர்த்துடறேன். நீ கவலையே படாதே.''

உறுதியாகச் சொன்னார். அப்படிச் சொன்னதோடு நிற்கவில்லை. உடனடியாக அதைச் செய்தும் விட்டார்.

அதற்கடுத்த இரண்டாம் நாள்தான் அந்தத் தவறு நேர்ந்தது.

காலையில் எழுந்து, குளித்து, சமைத்து, சாப்பிட்டு முடித்து, வீட்டைப் பூட்டிக் கொண்டு, மனைவிக்குத் துணையிருக்க நர்ஸிங் ஹோமுக்குச் சென்ற போது தான் அந்தச் செய்தி அவருக்குக் கிடைத்தது.

மருத்துவரல்லாத ஓர் உதவியாளர் செய்து விட்ட கோளாறு, இன்னொரு பெண்மணிக்குப் பதில் லோசனிக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, தவறு தெரிந்த போது மருத்துவர் பிளந்த மார்பை மூடித் தைத்து விட, இப்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் அவள்...

இரண்டு நாட்கள் அந்தப் பிரிவில் இருந்த லோசனி மூன்றாம் நாள் மூச்சடங்கிப் போனாள்.

காரியங்கள் நடக்க வேண்டுமே என்று கவலைப்படவில்லை அவர். அதற்காக மகன் எங்கே இருக்கிறான் என்று தேடவும் இல்லை.

''எனக்கு அவள்.. அவளுக்கு நான்... பிள்ளை என்பவன் எதிர்பாராமல் இடையில் நேர்ந்து விட்ட ஒரு விபத்து. அப்படி நடுவில் வந்தவன் நடுவிலேயே போய் விட்டான். அவ்வளவுதான். இப்போது நான்தான் என் மனைவிக்குக்



கொள்ளி போடப் போகிறேன்...''

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அதிசயித்துப் போனார்கள்... 'இப்படியும் ஓர் எஃகு மனிதரா?'

மறுநாள் அஸ்தியைக் கரைத்து விட்டு வீடு திரும்பிய போதுதான் திடுமென்று இடியாய் அந்த எண்ணம் அவருள் இறங்கியது.

சுவடே இல்லாமல் இந்த உலகத்திலிருந்து லோசனி மறைந்தே போய் விட்டாள். உடலை எரித்து, எஞ்சிய சாம்பலையும் கடலில் கரைத்தாகி விட்டது. அவருக்கு அவள்... அவளுக்கு அவர் என்று இருந்தவர்கள். இன்று அவள் இல்லை.

யோசனைகள் தீவிரமடைந்து, கடுமையான தனிமை உணர்வு ஓர் அதிர்வுடன் அவரைப் போர்த்த, அப்படியே கண்களை மூடிக் கொண்டார்.

உள்ளும் புறமும் ஒரேயடியாக அந்தகாரம் சூழ்ந்து கொண்டு விட்டதைப் போல இருந்தது...

வாசல் கதவு தட்டப்படும் ஒலி கேட்டது.

திடுக்கென்று கண் விழித்தார் ராமசேஷன். உடல் துணியாய்த் துவண்டிருந்தது. மனம் வெறுமையாகிப் போயிருந்தது. உட்கார்ந்தபடியே குரல் கொடுத்தார்.

''யாரு?''

மீண்டும் கதவு தட்டப்பட்டது.

''உள்ளே தாழ்ப்பாள் போடாமத்தான் இருக்கு.''

தயக்கமாகக் கதவு திறந்தது. அங்கே பிரேமிட்ட படம் போல் நின்றிருந்தவளைப் பார்த்த போது அவருடைய பார்வை கூர்மையாகியது. கேட்டார்.

''நீ... நீ... அந்த நர்ஸிங் ஹோம்ல ரிசப்ஷனிஸ்ட் இல்லை?''

தலையசைத்தாள்.

சட்டென்று அவருள் உஷ்ணம் பரவியது.

''என்ன? போலீஸுக்கு போக வேண்டாம், கோர்ட்டு — கேஸ்னு எதுவும் வேண்டாம், நஷ்டஈடு கொடுத்துடறோம், சமாதானமா — சமரசமா எல்லாத்தையும் பேசி முடிச்சுக்கலாம்னு சொல்லியனுப்பிச்சிருக்காங்களா?''

''இல்லை.''

''பின்னே?''

''நான்... நான் உள்ளே வந்து பேசலாமா?''

''அவசியம் இல்லை. அங்கேயிருந்தே சொல்லலாம்.''

தயங்கினாள். சொன்னாள்.

''நாம உயிருக்குயிரா நேசிச்ச ஒருத்தரை — நம்மோட மறுபாதியா வாழ்ந்திருந்த ஒருத்தரை இந்த மாதிரி இழக்கும் போது அது கொண்டு வருகிற அதிர்ச்சி, சோகம், தனிமை இதெல்லாம் எப்படியிருக்கும்னு எனக்குத் தெரியும். அந்த மாதிரி நேருகிற போது மனசைத் திருப்ப ஓர் ஆதாரம் இல்லைன்னா நாம நிலைகுலைஞ்சு போயிடுவோங்கறதும் எனக்குத் தெரியும்.''

''அதுக்காக?''

''ரெண்டு வருஷத்துக்கு முன்னால என் கணவர் ஒரு சாலை விபத்துல இறந்து போன போது எனக்கு ஏற்பட்ட மனக்குமுறல்தான் இப்போ உங்களுக்கும் ஏற்பட்டிருக்குங்கறதை உணர்ந்தேன். அதனாலதான் வந்தேன்...''

சட்டென்று அவள் முகத்தை உற்றுப் பார்த்தார். அவளுடைய நெற்றியின் வெறுமை அவரைச் சுட்டது. அவளே தொடர்ந்து பேசினாள்.

''இந்த இரண்டு நாளா காரியங்கள் நடந்ததுல உங்க தனிமையை உணரக் கூட உங்களுக்கு நேரம் இருந்திருக்காதே...''

''.......''

''... இனிமேல்தான் தனிமை ரொம்ப வாட்டும்... எனக்குத் தெரியும். இரண்டு வருஷம் ஆயிட்டாலும் அந்த ஞாபகங்கள் தீவிரம் குறையாம மனசுல ஒரு பக்கமா இருக்கு...''

''இப்ப உனக்கு என்ன வேணும்...''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்... உங்களுக்கு எப்பவாவது ஒரு பேச்சுத் துணை அவசியம்னு தோணினா, ஒரு மாறுதல் தேவைன்னுபட்டா எங்க வீட்டுக்கு வரலாம். இது எங்க அப்பாவோட விசிட்டிங் கார்ட்... நான் அவர் கூடத்தான் இருக்கேன்...''

அவள் நீட்டிய கார்டை வாங்கிப் பார்த்தார். அவள் தொடர்ந்தாள்.

''உங்களுக்குக் குழந்தைகள் இல்லைன்னு தெரியறது...''

ராமசேஷனுடைய எஃகு மனம் இந்தக் கணத்துக்காகக் காத்திருந்தது போல் ஒட்டுமொத்தமாய் உருகி வெடித்தது. குமுறிக் குலுங்கிய அவரை மெள்ளச் சாய்வு நாற்காலிக்கு வழிநடத்தினாள் அவள்.



அடுத்த இதழில்...

- **அரசியல் சாதிக்காததை ஆன்மிகம் சாதிக்கிறது!**

— ஒரு நேரடி ரிப்போர்ட்

நீங்கள் கேட்டவை — தராசு





* ஜெ அணிக்கு ஜே



வருத்தம்தான்...

* விஜயலட்சுமி சுவாமிநாதன், திருச்சி.

? குழந்தைகளைச் சிகரெட் வாங்க அனுப்பும் ஆண்கள் பற்றி...?

! என்னிடம் இந்தக் கேள்வி கேட்பதற்குப் பதிலாக அவர்களிடமே பேசி, திருத்துங்களேன், என்ன பயம்? நமது நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்திய பிறகு சொன்னால் கோபிக்க மாட்டார்கள். அப்படியே ஒரு கடுசொல் கேட்க நேர்ந்தாலும் பாதகமில்லை. ஒரு நல்ல காரியம் செய்த திருப்தி இருக்கும். அந்த ஆண் மனம், இன்றில்லா விட்டாலும் நாளை வருந்தி மாறும்.

* கே. ராஜபாலு, சேலம்.

? உம்மைக் கவர்ந்த வி. ஐ. பி. யார்?

! இந்த வாரம் ஒரு புழு! 'கேவலம் புழுவுக்குச் சமானம்' என்று எண்ணி வந்ததை இனி மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்! பத்து செ.மீ. நீளத்தில் கண்ணுக்குள்ளே குடியிருந்திருக்கிறதே! ஆபரேஷன் செய்து எடுக்க நேர்ந்திருக்கிறதே! அடேயப்பா, கில்லாடிதான் போங்கள்!

* டி. எம். முருகானந்தம், திருவைகாவூர்.

? நேயர்களின் மனத்தில் எரிச்சல் ஊட்டும் விளம்பரங்கள் நிறுத்தப்படுமா?

! ஸ்பாட் விளம்பரங்களாவது தேவலை. பிடிக்காவிட்டால் சில கண நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்து விட்டுத் திறக்கலாம். 'ஸ்பான்ஸர்ட் புரோகிராம்' என்று கூறி, நாலாந்தர நாடகங்களும் மற்ற நிகழ்ச்சிகளும் திணிக்கப்படும் போது தாங்க முடியலை கோபம்! சாதக விளம்பரத்தை விட அந்த விளம்பரதாரரின் பொருளுக்குப் பாதகமான விளம்பரமே கிடைக்கிறது. உணர்வார்களா?

* எஸ். யோகலிங்கம், சென்னை — 82.

? தமிழக காங்கிரஸின் ஆதரவு, 'ஜெ' அணிக்கா; திருநாவுக்கரசு அணிக்கா?

! வாழப்பாடி அணி 'ஜெ' அணிக்கு 'ஜே' போட்டாகி விட்டது!

* புலிச்சோழன், கோவை.

? 'தாவு'வின் புத்திர பாசம் எத்தகையது?

! டிஸ்மிஸ் வாங்கிக் கொள்ளும் அளவுக்கு ஆழமானது!

* இரா. சாந்தகுமார், சென்னை.

? தேவிலால் — திக்காயத் — யார் விவசாயிகளின் தலைவர்?

! திக்காயத் விவசாயிகளின் தலைவர்; தேவிலால் திக்காயத்தின் தலைவர்!

* சிவ சண்முகம், சீர்காழி.

? 'தேசிய முன்னணி அரசைப் பலப்படுத்தவே விவசாயிகள் பேரணியை டில்லியில் கூட்டியுள்ளேன்' என்று தேவிலால்



• வழிந்துவிட்டார்



• பெரிய பலம்...

கூறுகிறாரே?

! 'படகில் உள்ள நீரை வெளியேற்றத்தான் படகில் ஓட்டை போடுகிறேன்' என்று சொல்கிறார்.

* என். முருகேஷ், பெருஞ்சேரி.

? மத்திய மந்திரிகளில் தங்களைக் கவர்ந்தவர் யார்?

! 'வழுக்கைத் தலைப் பேராசிரியர்' என்று சொல்லலாம் என்று பார்த்தால், டி.வி.யில் விலைவாசி உயர்வு பற்றிய கேள்விகளுக்கு வழிந்து விட்டாரே!

* ஆற்காடு எழிலன், திருச்சி.

? கடன் தொல்லைகளில் அவதிப்படுவோருக்கு நீங்கள் கூறும் யோசனைகள்?

! கடன் வாங்கு முன்னரே யோசனை கேட்டிருந்தால்தான் நல்லது. அவதிப்படும் அளவுக்குக் கடன் வாங்கிய பிறகு, யார்தான் உதவ முடியும்? என்றாலும் 1. 'இனி கடன் வாங்குவதில்லை' என்று உறுதி செய்து கொள்ளுங்கள். 2. மொத்தக் கடனைப் பட்டியலிட்டு, தவணை முறையில் திருப்பித் தரத் திட்டம் போடுங்கள். 3. செலவைக் குறைத்து, வருவாயை அதிகரிக்க வழிகளைச் சிந்தியுங்கள். 4. உங்கள் கஷ்டத்தைக் கடன் தந்தவர்களிடம் எடுத்துக் கூறி, தவணை முறையில் திருப்பித் தருவதாகவும், 'முதலில் அசலுக்கு வரவு வைத்துக் கொள்ளுங்கள்; வட்டியைத் தொடர்ந்து சில தவணைகளில் கட்டுகிறேன்' என்றும் கூறிப் பாருங்கள். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்து, அவர்கள் ஒப்புக் கொண்டால் கடன் தொல்லையிலிருந்து தப்புவது சாத்தியமாகலாம்.

* ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? தாங்கள் மிகவும் வருந்திய விஷயம்?

! வருஷா வருஷம் ஜனாதிபதியின் சுதந்திர தின ரேடியோ — டி.வி. பேச்சு என்பது ஒரு சடங்கு போலாகி விட்டது என்றாலும் அத்தனை பெயர்களைக் குறிப்பிட்டவர், ராஜாஜி பெயரையும் கூறியிருக்கலாம். சொல்லாததால் ராஜாஜியின் மதிப்பு குறைந்து விடப் போவதில்லை; ஆனால் ஆர். வி.யின் பெருமைக்கு உகந்ததாக இல்லையே என்ற வருத்தம்தான்.

* செந்தில்குமார், மோட்டூர். *

? கருணாநிதியின் மிகப் பெரிய பலம் என்ன?

! அவர் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாம்; ஏற்றுக் கொள்ளாமலும் போகலாம். எதிர்க்கவும் செய்யலாம். ஆனால் அவர் கருத்திலும் அதனை வெளியிடும் பாண்மையிலும் தெளிவு இருக்கும். அவரளவில் நன்கு யோசித்து முடிவான கருத்தாக இருக்கும். உறுதியும் தொனிக்கும். சமீபத்தில் அவர் வெளியிட்ட, ஏற்றுக் கொள்ளத்தக்க உருப்படியான ஒரு கருத்து: 'பம்பாய் கடலோரப் பகுதியில் வீணாக எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இயற்கை வாயுவைத் தென்னகம் பக்கம் திருப்பி விடுங்கள்' என்பது. இதற்குப் 'பைப் லைன்' அமைக்க ஏகமாகச் செலவாகும் என்றாலும், நற்பலன்களை — தொழில் வளப் பெருக்கத்தை எண்ணிப் பார்க்கும் போது அது சிறந்ததொரு, லாபகரமான முதலீடாகவே இருக்கும்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:
வே. செந்தில்குமார் (ஆசிரியர்),
மோட்டூர், கோரணம்பட்டி அஞ்சல்,
சங்ககிரி வட்டம், சேலம் (மா. வ.),
— 637 102.

பலம் என்ன?



தீண்டாமை ஒழிப்பிலும், அரிஜனங்களின் நலனிலும் அக்கறை கொண்டுத் தொண்டாற்றியவரின், நூற்றாண்டு விழா இப்போது கொண்டாடப்படுகிறது. அவரைப் பற்றி, அவரது மருமகன் வி. கே. ஸ்தாணுநாதன் சொல்கிறார்:

அரிஜனங்களின் நண்பர் அ. வைத்தியநாதய்யர்

●● ஒரு வழக்கில், திருநெல்வேலியில் ஆஜராகிச் சில நாட்கள் அங்கே தங்க வேண்டியிருந்தது. இரவு வெகு நேரம் கழித்துத்தான் வைத்தியநாதய்யர் மதுரைக்குத் திரும்ப முடிந்தது. வந்தவுடன் நேராகத் தமது அறைக்குச் சென்றார் அய்யர். தபால்களை மேலோட்டமாகப் பார்த்து விட்டு மேசை டிராயரைத் திறந்து, செக் புத்தகத்தை எடுத்தார். இரண்டு செக்குகள் எழுதினார். 'அப்படி என்ன தலைபோகிற அவசரம்? குளித்துச் சாப்பிட்டு விட்டு, நாளைக் காலை கூட செக் எழுதிக் கொள்ளலாமே?' என்று கேட்டபோது, அய்யர் சொன்னார்: ''என் இன்ஷ்யூரன்ஸ் பாலிசிகள் இரண்டுக்குத் தபாலில் பணம் வந்துவிட்டது. அது வந்தால் இரண்டிலும் பாதிப் பாதித் தொகையை அரிஜன நலநிதிக்கு ஒதுக்கிவிடுவது என்று தீர்மானித்திருந்தேன். ஒரு நல்ல காரியம் பண்ணத் தீர்மானித்தால் அதை உடனே செய்துவிட வேண்டும். தாமதித்தால் தவிர்க்க முடியாத வேறு செலவு வரலாம்; மனம் மாறலாம். அ த னா ல் தா ன் இப்போதே செக்குகளை எழுதி வைத்து விட்டேன்!'

●● *1922* இல் வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்தது. மதுரை நகருக்குள்ளும் அது புகுந்தது. சக ஊழியர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டார் வைத்தியநாதய்யர். வெள்ளத்தை எதிர்த்து நீந்தி, பல குழந்தைகளையும் காப்பாற்றிக் கரை சேர்த்தார்.

●● ஜன சந்தடி மிகுந்த தைக்கால் தெருவில் ஒரு கடை தீப்பற்றிக் கொண்டது. மக்கள் பலர் தீக்கிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்த போது, துணிச்சலுடன் தீயில் பாய்ந்து, பலரைக் காப்பாற்றினார் வைத்தியநாதய்யர்.

●● அடிக்கடி சிறை சென்று, மாதக் கணக்கில், வருடக் கணக்கில் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வீடு திரும்புவார். அப்படியும் அவரது கட்சிக்காரர்கள் அவர் திரும்பி வரும் போதெல்லாம் அவரை மொய்த்துக் கொள்ளுவார்கள். அவ்வளவு பிரபல வழக்கறிஞராய் இருந்தார்.

●● இருபதுக்கு மேற்பட்ட ஜூனியர்கள் அவரிடம் பணியாற்றி வந்தார்கள். வருகிறவரும் போகிறவரும், அரிஜனத் தொண்டர்களுமாக ஜே ஜே என்று இருக்கும் வீடு. சாப்பிடும் போது அத்தனை பேரும் இருப்பார்கள். கிட்டத்தட்ட கல்யாண வீடு போல் இருக்கும். கக்கன் ஜி பெரும்பாலும் வளர்ந்ததே இங்கேதான். பல ஏழை மாணவர்களுக்குச் சம்பளம் மட்டுமல்ல, சாப்பாடும் கொடுத்து வந்தார்.

●● காலையில் ஓதுவார்கள் வந்து தேவாரம் பாடி, சொல்லிக் கொடுப்பார்கள். பிறகு மாலையில் கோர்ட்டிலிருந்து திரும்பியவுடன், வேதங்கள், ருத்ரம்—சமகம், போன்றவற்றை எடுத்து விளக்கப் பண்டிதர் ஒருவர் வருவார். சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருப்பார் அய்யர்.

●● சிறையில் இருக்கும்போது, திருக்குறள் வகுப்பு நடத்தினார். வால்மீகி ராமாயணம் படிப்பார். எந்த தினம் எந்தப் பகுதி படித்தோம் என்று, படித்த பக்கங்களில் தேதியைக் குறித்து வைப்பார். விளங்காத பகுதிகளைப் பென்சிலால் மார்க் செய்து குறித்து வைத்திருப்பார். முத்துரங்க முதலியாருடன் சேர்ந்து கொண்டு, ஈ. கிருஷ்ணய்யரிடம் சிறையில் சங்கீதம் கூடக் கற்றுக் கொண்டார் வைத்தியநாதய்யர்!

●● வழக்கை ஏற்றுக் கொண்டால், பரீட்சைக்குப் படிக்கிற மாதிரி இரவு முழுக்க கேசைப் படிப்பார். உண்மை மறைக்கப்பட்டு, தவறான தகவல் தரப்பட்டிருந்தால் அவர் எத்தனை பெரிய மனிதராயிருந்தாலும் கேசை எடுத்துக் கொள்ள மாட்டார்; திருப்பி அனுப்பிவிடுவார்!

— சாருகேசி.

ராஜ் (லியோ) A/c (12.30, 3.30, 6.45, 10)

அனுராகா A/c (1. 4. 7. 10)

பாண்டியன் 3 காட்சிகள்

வசந்தி A/c கமலா A/c பகல் காட்சி

இளையராஜாவின்
சுகமான ராகங்களில்
விவேக் சித்ராவின்


கேளடி கண்மணி

கதை
திரைக்கதை
வசனம்
டைரக்ஷன்
வஸந்த்

தயாரிப்பு
A. சுந்தரம்



Elegant


கருங் கூந்தல்
வளர்ச்சிக்கும்
கண்களில்
குளிர்ச்சிக்கும்...
40
மூலிகைகள் நிறைந்த
கிரெளன்
ஹெர்பல் ஹேர் டானிக்
சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப்படும் கிரெளன் ஹெர்பல் ஹேர் டானிக் — செம்பருத்தி, மருதாணி, கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, கற்றாழை போன்ற 40 மூலிகைகள் நிறைந்தது. நறுமணம் கமழ்வது. எல்லா வகைக் கூந்தலுக்கும் ஏற்றது.
இளநரையைத் தடுக்கிறது. முடி கொட்டுவதை நிறுத்துகிறது. கூந்தலின் வேர்க்கால்களுக்கு வலிமை ஊட்டுகிறது. நுனிமுடி பிரியாமலும் ஒடியாமலும் காக்கிறது. கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கிறது.
இதில் உள்ள நேச்சுரலைசர் கூந்தலைப் பதமாக்கி ஒளிபெறச் செய்கிறது.
CROWN
HERBAL HAIR TONIC
இலவசம் !
கிரெளன்
ஹெர்பல் ஹேர் டானிக்
நேச்சுரலைசர் அடங்கியது.
இளநரை தடுக்கும். கூந்தல் உதிராமல் காக்கும்.
Insight-CHP-1044

○○ என். கே. ஈசுவரி, பெங்களூர்.

குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் ஏன் கொலஸ்ட்ரால் ஏற்படுகிறது? எண்ணெய், நெய், அதிகம் சாப்பிடுவதால் கொலஸ்ட்ரால் வருகிறது என்பது உண்மையா? என் பாட்டி சாகும்வரை நெய் ஊற்றிக் கொண்டு சாப்பிட்டாரே, அவருக்கு ஏன் கொலஸ்ட்ரால் ஏற்படவில்லை?

டாக்டர் சங்கரன்: கொலஸ்ட்ரால் என்பது உடம்பில் ரத்தத்தில் உருவாகிற ஒரு வகைக் கொழுப்பு. அது தேவையானது தான். ஆனால் குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொலஸ்ட்ரால் நம் ரத்தத்தில் இருக்குமானால் அது ரத்தக் குழாயின் உட்பகுதிச் சுவர்களில் படியும். இதனால் சீரான ரத்த ஓட்டம் தடைப்படும். குறிப்பாகப் பழுதுபட்ட ரத்தக் குழாய்ப் பகுதிகளில் இத்தகைய கொலஸ்ட்ரால் படிவது அதிகம். கொலஸ்ட்ரால் அதிகரித்தால் இருதயத்தின் தசைகளுக்கு ரத்தம் அளிக்கும் ரத்தக் குழாயில் ஒருவேளை அடைப்பு உருவாகி ஹார்ட் அட்டாக் ஏற்படலாம். சரீரத்தால் கடுமையாக உழைப்பவர்களுக்கு கொலஸ்ட்ரால் அதிகம் உருவாவதில்லை. உட்கார்ந்த இடத்தில் வேலை செய்பவருக்குத்தான் ஒப்பு நோக்க ஆபத்து அதிகம். எனவே இத்தகைய பணியில் இருப்பவர்கள் தினம் ஒரு கிலோ மீட்டர் விறுவிறுப்புடன் நடந்தால் நல்ல பலன் இருக்கும்.

கொலஸ்ட்ராலில் தாவர கொலஸ்ட்ரால், மிருக கொலஸ்ட்ரால் என்று உண்டு. தாவர எண்ணெயில் அவ்வளவு ஆபத்து இல்லை. மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, இறால் போன்றவற்றில் மிருகக் கொழுப்பு அதிகம். இவற்றை அளவுக்கு அதிகமாக உண்பவர்களுக்குக் கொலஸ்ட்ரால் பிரச்னை தோன்றக் கூடும். நெய், வெண்ணெய் ஆகியவற்றை அளவுக்கு மீறிச் சேர்ப்பது ஆபத்தை வரவழைத்துக் கொள்வதாகும். அளவாகச் சேர்த்துக் கொண்டு, உடல் உழைப்பு அல்லது தேகப்பயிற்சி இருந்து வந்தால், உங்கள் பாட்டி போலவே நீங்களும் எண்பது வயதும் அதற்கு மேலும் வாழலாம்.

புகைபிடிப்பவர்களுக்குக் கொலஸ்ட்ரால் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. சிகரெட்டிலுள்ள நிகோடின் உடலில் சில ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்ய அவை கொலஸ்ட்ராலை அதிகரிக்கச் செய்கின்றன என்பது ஆராய்ச்சி கண்ட உண்மை.

○○ வி. ஜானகி, வடலூர்.

மூளைக்குக் கட்டுப்படுமா செயற்கை மூட்டு?

மனித உடலின் எல்லாப் பாகங்களுக்கும் இன்று செயற்கை உறுப்புக்கள் வந்து விட்டன. மனித உறுப்புக்கள் மூளையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. செயற்கை உறுப்புக்களும் மூளைக்குக் கட்டுப்படுமா?

டாக்டர் மோகன்தாஸ்: கட்டுப்படும். முழங்கால், கணுக்கால், முழங்கை, தோள்பட்டை, இடுப்புடன் தொடை இணையும் இடம் இங்கேயெல்லாம் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் பாகங்கள் பொருத்துகிறோம். இப்போது டைட்டேனியம் என்ற உயர்ரக உலோகம் வந்துவிட்டது. இது முன்னதை விடச் சிறந்தது. செயற்கை உறுப்புக்கள் — மூட்டுக்கள் போன்றவை — உயிருள்ள சதைகளுக்கு இடையேதான் வைக்கப்படுகின்றன. சுற்றிலும் நரம்பு மண்டலமும் ரத்த ஓட்டமும் இருக்கின்றன. எனவே தசைகளையும் இந்தச் செயற்கை உறுப்புக்களின் அசைவுகளையும் மூளை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, தசைகளும் செயற்கை மூட்டுக்களும் எந்தப் பக்கத்துக்கு அசைய வேண்டும் என்று விரும்புகிறதோ அந்தப் பக்கத்துக்கு இயக்க முடியும்.


ஆனால் ஒன்று. செயற்கை உறுப்புக்கள், இயற்கை உறுப்புக்களுக்கு ஈடாக முடியாது. செயற்கை மூட்டு அன்றாட வாழ்க்கைக்கு உதவுமே தவிர, விளையாட்டு போன்றவற்றுக்கு அல்ல. எனவே இவற்றைப் பொருத்திக் கொண்டவர்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். டாக்டர் சொல்படி தொடர்ந்து நடந்து கொள்ள வேண்டும். செயற்கை மூட்டு ஐந்தாறு வருடங்களுக்கு வரும். இடையில் பழுதடைந்தால் அல்லது இடம் பெயர்ந்தால் மறுபடி ஆபரேஷன் செய்து சீராக்குவது சிரமம். எனவே எச்சரிக்கை தேவை.

டாக்டர்கள் பேட்டி:

— நமது நிருபர்கள்.

டாக்டரிடம் சில கேள்விகள்:

• இயற்கை நல்ல மூட்டு



• பழுதடைந்த மூட்டு



• செயற்





ஒரு புதிய கதை

ஹலோ டைரக்டர் பாலகுப்பையா! கங்கிராட்ஸ். புது டைரக்டர், புதுமுகங்களைப் பொறுக்கிப் போட்டு 'ஒருபுதிய கதை' பண்ணியிருக்கீங்களே, அந்தச் சாதனைக்குப் பாராட்டு. ஆனா உங்ககிட்ட மெச்சூரிட்டி கொஞ்சம் குறைச்சல்தான். ஒரு கதாநாயகி தன் காதலனை எப்படி எப்படியோ உருவாக்கணும்னு ஆசைப்படறதைக் கண்டிருக்கிறோம், படிச்சிருக்கிறோம். ஒரு சினிமாக் கவிஞனாப் பார்க்கணும்கிறது தான் லட்சியம் என்று சொல்கிறாரே... அதைக் கேவலம்னு சொல்ல வரலே. ஒரு லட்சிய அளவுக்கு அதை எத்துக்கறாப்பல இல்லை. அந்த இடத்திலே ரொம்பப் பேர் சிரிச்சிடறாங்க சார்.

பாடல்கள், இசைப் பொறுப்பானவர் உமா கண்ணதாசன்னு பார்த்ததும் கவியரசு குடும்பத்தைச் சேர்ந்தவரோன்னுதானே எல்லாருக்கும் தோணும்? விசாரிச்ச போது தான் தெரிந்தது. கண்ணதாசனிடம் இவருக்குள்ள அபரிமிதமான பக்தியினாலே அவர் பேரோட தன் ஊர்ப் பேரையும் சொந்தப் பேரையும் 'உமா'ன்னு இனிஷியல் மாதிரி சேர்த்துக்கிட்டார்னு. அந்த மட்டில் கவிஞர் பேரைக் கெடுக்காத அளவுக்குப் பாடல்கள் தேவலாம். இசைதான் ஆங்காங்கே இளையராஜா எதிரொலி மாதிரி இருக்கிறது.

காத்திருந்த கல்யாணம் எத்தனையோ தங்குதடையை மீறி, எதிர்த்தவங்களையெல்லாம் கன்வின்ஸ் பண்ணி சந்தோஷமா முடிஞ்சதுக்கப்புறம் ஒரு ட்விஸ்ட் கொடுக்கறதா நினைச்சு, எதுக்கு சார் கதாநாயகியைக் கபரஸ்தானுக்கு அனுப்பணும்? மகா எரிச்சல்.

ரௌடி அண்ணன் கையை ஓங்கிக் கொண்டு வரும் போது மீனா அனாயாசமாத் தடுத்து நிறுத்தி, கத்திக் கூச்சல் போடாமல் குத்திக் காட்டிப் பேசுகிறாரே, ரொம்பக் கூர்மை.

தேவலாம், கதாநாயகன் பிரபு ராஜ் ஆகட்டும், வில்லன் பவானி ஆகட்டும் — ஒருத்தருக்கொருத்தர் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் சளைக்கவில்லை. தேறிடுவாங்க. ரெண்டு பேர்லே வில்லனுக்குக் கொஞ்சம் கூடுதலா மார்க் போடலாம்.

-ஏதோ ஒலியும் ஒளியும் நிகழ்ச்சி முடிஞ்சாப்ல ஒரு பிரமை. அப்புறம்தான் எண்ணிப் பார்த்தேன். ஒன்பது பாட்டுங்களா?

ஆனா ஒண்ணு சார். காமெரா தூள். வெளிப்புறக் காட்சி ஒரு பக்கம் இருக்கட்டும். இன்டோரில் லைட்டிங் — சூப்பர்.

கண்ணதாசன் மாதிரி சினிமாக் கவிஞரா ஆகணும்கிற லட்சியம் இருக்கலாம். வெறும் சினிமாக் கவிஞரா இருந்ததால் மட்டும் அவர் நிலைச்சிருக்கலை. அவருக்கு அம்பிகை அழகு தரிசனம் தெரியும்; அர்த்தமுள்ள இந்து மதம் புரியும்; ஏசு காவியம் சொல்லத் தெரியும். அப்படி நீங்களும் கொஞ்சம் விஸ்தாரமா யோசியுங்க சார். அப்பத்தான் புதிய கதையாத் தோணும்.

— பி. எஸ். எஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: லெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா.



கோத்ரெஜ் வழங்கும் ஃப்ரெஸ்கா.
நிறைந்த சுகந்தம், நிகரில்லா
நறுமணமுள்ள அற்புதமான சோப்.
வளமான நுரை தந்திடும்.
வந்திடும் அதிக நாட்களுக்கு
ஃப்ரெஸ்கா.
அடக்கமான விலையிலே
அற்புதமான சோப் ஃப்ரெஸ்கா.



கோத்ரெஜ்

Enterprise/GS/191/Tm.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka